தென்மொழி

பொங்கல் இதழ்

ஆசிரியர்

பெருஞ்சித்திரன்

விலை ரூ 1.50

தென்மொழி

பொங்கல்மலர்

உள்ளமெனும் பானையிலே எண்ணப்பால் ஊற்றி,
உயர்கருத்தாம் நல்லரிசி தீட்டியுலை யிட்டுக்
குன்றுநிலைமக்களினக் கூட்டுழைப்பைச் சேர்த்துக்
கொடுஞ்சாதி விறகடுக்கி, மானத்தீ வைத்து,
விள்ளரிய சுவைநல்குந் தமிழ்க்கனிச்சாற் றோடு
விழுப்பமெனும் நெய்யளவி நறும்பொங்கல் பொங்கிக்
கள்ளமிலா நெஞ்சுடைய நற்றமிழர்க் கிந்நாள்
களிப்பெழவும் விழிப்பெழவும் படையல்செய் வோமே!

1960

திருவள்ளுவர் சங்கம்
பெங்களூர்-560 021

உள்ளே......

ஞா. தேவநேயப்பாவாணர். எம், ஏ.

பண்டாரகர். மா. இராசமாணிக்கனார். எம். ஏ.

பண்டாரகர். அ. சிதம்பரநாதனார், எம். ஏ.

பண்டிதர். க. பொ. இரத்தினம். எம். ஏ.

முத்தமிழ்க்காவலர். கி. ஆ. பெ. விசுவநாதம்.

மது. ச. விமலாநந்தம். எம். ஏ.

சி. பத்மாவதி. எம். ஏ.

ம. இலெனின் தங்கப்பா. பி. ஏ., பி. டி.

த. கோவேந்தன்

ம. அரங்கநாதன்

மாரி. அறவாழி.

மா. அரங்கநாதன்

புலவர். ஆ. முகிலன்.

விந்தைவேலன்

துரை. மாணிக்கம்

முதலியோர்
எழுதுகின்றனர்

தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்தம் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

இயல் க	திருவள்ளுவராண்டு ௧௯௯௧ தைத்திங்கள் க. (14—1—60)	இசை ௧௧—௧௨

திருவிழாக்கள்.

'விழு' என்ற பகுதியடியாகப் பிறந்த சொற்கள் விழவு, விழா என்பன. விழு—சிறப்பு. தனிப்பட்ட ஒருவர்க்குரிய சிறப்பு நிகழ்ச்சிகள், தனிப்பட்ட குடும்பத்திற்குரிய சிறப்பு நிகழ்ச்சிகள், தனிப்பட்ட மக்கட்குரிய சிறப்பு நிகழ்ச்சிகள், தனிப்பட்ட நாட்டார்க்குரிய சிறப்பு நிகழ்ச்சிகள். உலகத்தார்க்குரிய சிறப்பு நிகழ்ச்சிகள் முதலியன எல்லாம் விழாவென்றே கொண்டாடப் படுவனவாம். அவரவர் பிறந்த நாட்கள், தனிப்பட்டோராலும், முன்னோர் பிறந்த அல்லது இறந்தநாட்கள், மணம்முதலிய நிகழ்ச்சிகள், அவரவர் குடும்பத்தாராலும், காளி, மாரி முதலிய காட்டுயிர் வணக்க விழா ஆங்காங்குள்ள ஊராராலும், பொங்கல், ஓணம், பக்ரீத், கிறித்துமசு முதலியன அவ்வின மக்களாலும், குடியரசு நாள், (Republic Day), தன்னுரிமை நாள் (Independance Day) முதலியன அந்தந்த நாட்டாராலும், உலகப் பொது மன்றத் தொடக்க நாள் (United Nations' Day) தொழிற் புரட்சி நாள் (May Day) முதலியன உலக மக்கள் எல்லோராலும் கொண்டாடப்படும் விழா நிகழ்ச்சிகளாம்.

பொதுவாக விழா நிகழ்ச்சிகளெல்லாம் மக்கள் மகிழ்விற்கே ஏற்பட்டனவாம். நாட்டு நலனும், மக்கள் நலனும் தம் வாழ்வெனக்கருதி உழைத்த பெரியோர் சிலரின் பிறப்பு நாட்கள் அத்தகையோரின் நினைவிற்காகவும், அந்நினைவால், வாழ அறியாத மக்கள் அவர் தம் வழிபற்றிப் போக வாய்ப்பேற்படுத்துதற்காகவும், மக்களால் கொண்டாடப்படுகின்றன. சமயத் தலை

வரின் நினைவு நாட்களும் அத்தகையினவே. விழாக்களிற் சில நாட்டுப்பற்றை ஊட்டுவனவாயும், ஒருசில உலகப் பொதுமையை எண்ணச்செய்து உலக ஒற்றுமையை வலியுறுத்துவனவாயும், சில, தொழிலாளர் தம் பெருமையை நினைவூட்டி அவர்க்கு மகிழ் வூட்டுவனவாயும், ஒருசில உழவின் சிறப்பை எண்ணி உலக வளர்ச்சிக்கு வித்திடுவனவாயும் அமைந்திருக்கின்றன. இங்குக் கூறப்பட்டவற்றிற்கும், வேறு எந்தப்பயனுக்கும் வித்திடாத ஒரு சில விழாக்களும் மக்களால், மடமை பற்றியும், வழக்கம் பற்றி யும் கொண்டாடப் பெற்று வருகின்றன. ஒரு பெரியோர் பிறந்த நாளைக் கொண்டாடுவது சிறப்பே. ஒரு தீயோன் இறந்த நாளை எவ்வகையாலும் நினைவு கூர்தல் சிறப்பன்று. உலகில் ஒரு சிலரே எல்லோரும் பின்பற்றக்கூடிய பெற்றி வாய்ந்த பெரியோராய் இருப்பர். இவரன்றி மற்ற எல்லோரும் எவ்வகைச் சிறப்பும் இலராகி மற்றக் குற்றுயிர் போல வீணே பிறந்து, தட்டுக்கெட்டுத் தடுமாறி வாழ்ந்து விரைவில் ஒரு பயனும் இன்றி மாய்ந் தொழிந்து போகின்றனர். அவருள் ஒருவன் செல்வன் எனத் தருக்கலாம்; ஒருவன் ஏழையென வருந்தலாம். விலங்குகளிலும், பிறந்து ஒரு பயனுமின்றி வாழ்ந்திறந்து போகும் அரிமா, புலிமா முதலியன போல் அச்செல்வரும், எலி, பூனை முதலியனபோல் அவ்வேழை யரும் வாழ்வில் சிறப்புப் பெறுவதிலர். எருதும், யானையும், எரு மையும், ஒட்டகமும் ஆக மக்கட்குப் பயன்படும் விலங்குகள் போல் வாழ்கின்ற தொழிலாளர் மக்கள் தம்வாழ்வை, முந்திய இனத்தினும் சிறப்பினதாக ஆக்கிக்கொள்வர்; போட்டிக் குதிரை கள் போலவும், சண்டைக் காளைகள், கோழிகள் போலவும், ஆர வாரவாழ்க்கை வாழும் பொது மகளிரும், நாடகக் கூத்தரும், அவரால் வாழும் மாந்தரும் தம் வாழ்வை எளிதில் அழித்துக் கொள்வர், அப்போட்டி விலங்குகள்போல் சிறப்புற உண்ணலும், உறங்கலும் அவர் வாழ்வாயினும், அவை போலவே இருந்த சுவ டற்றுப் புழுதியிற் புதையுண்டு போவர் என்பதை மறுக்க வொல்லுமோ? நிலாவுலகத்திற் கெய்திவாழும் முயற்சியில் உயி ரைக்கொடுத்த உருசிய நாட்டு இலைகா என்ற நாயும், கள்வரைப் பிடிப்பதிலும், துப்பறிவதிலும் ஊர் காவலரைவிடச் சிறப்புற் றிருக்கும் தமிழ்நாட்டுத் துப்பறியும் நாய்களும், மக்களுக்குத் தொண்டாற்றி உயரிய மாந்தர் போலவே சிறப்பெய்துதலும் உண்டு. இத்தகையோரில் சிறப்புற வாழ்ந்த பெரியோர் நாட் களைக் கொண்டாடுவது தவறாகாதெனினும், வெறும் செலவுச் சீர்மைகள் செய்துகொண்டாடுவதிலும், அவர் கூறிப்போந்த வழிகளைப் பின்பற்றுவதே அறிவும் பண்பும் நிரம்பியதாம்.

இனி, நாட்டு விழாக்கள் மாற்றத்திற்கும் உரியன. ஆங்கி கிலர் அரசுக்கட்டில் அமர்ந்தகாலை அவர்தம் அரசர் பிறப்புநாளைக்

கொண்டாடிய இந்நாட்டவர், தன்னுரிமைபெற்றுக் குடியர செய்திய ஞான்றை அதைஅறவே விலக்கியதும், தன்னரசேற்ற நாளைக் கொண்டாடப் புகுந்ததும் அதனை வலியுறுத்திக் காட்டும்.

இனிப், பெரியோர் பிறப்புநாட்கள், தொழிலாளர் விழாக்கள், நாட்டு விழாக்கள், உலக விழாக்கள், அன்றி மற்றைய விழாக்கள் எவ்வாறு மக்களால் கொண்டாடப்பட்டு வருகின்றனவோ வெனின் கூறுதும்.

பண்டையில் மாந்தர் காட்டுமிராண்டிகளாய்த் திரிந்து மரங்களிலும், மலை முழைஞ்சுகளிலும் பதுங்கி உயிர் வாழ்ந்தனர். அக்கால் அவர் எப்பக்கந் திரும்பினும் விலங்காலும், நச்சு உயிர்களாலும், கொல்லப்பட்டனர். விழித்திருக்குங் காலை அவ்வுயிர்களிடமிருந்து தப்பியோடிப் பதுங்கிக் கொள்ள அவர் அறிந்திருந்தாலும், இராக்காலங்களில் அவற்றால் மிகத் தொல்லைகள் பட்டு உயிர் இழந்தனர். பகற்காலமே அவர் அச்சத்தைப் போக்கியது. அப்பகலிற்குக் காரணமாய் ஒளி நல்கும் கதிரவனை அவர் நெஞ்சாரப் போற்றினர். காலைவரும் கதிரொளிக்குமுன்னின்று மகிழ்ந்தும், மாலை மறையும் கதிரவனை என்றும்போல் மறுநாளும் வந்து தங்கட்கு ஒளிதரவும் வேண்டினர். இயற்கையாய் நாளும் வந்த கதிரவன் தம் வேண்டுகோளுக்கிரங்கியே வந்து போகின்றான் என்று நம்பினர்: இந்த நம்பிக்கையால் மேலும் மேலும் அதை வணங்கி வழிபடத் தொடங்கினர். கதிரவன் பயன் ஒளிமட்டு மன்று; உலகத்தின் மலர்ச்சிக்கே அவன்தான் முழுக்காரணன் என்று எண்ணிய அவர் மேலும் அதனைப் போற்றிப் புகழ்ந்தனர்.

இனி, தம்மினத்தார் வல்விலங்குகளால் இறப்புற அஞ்சியடங்கினரேனும், எல்லா நச்சு உயிரிகளினும் கடித்த உடனே இறக்கும், கொடுந்தன்மை வாய்ந்ததும், தாம் அதனின்று தப்பி எங்குச் சென்றாலும் அதுவும் அங்குவந்த விடாமல் இடர்விளைத்து உயிர் கௌவுவதும், தொலை நின்று அதனைக் கொல்ல இயலாததுமான, பாம்பே அவர்க்கு வேறு எவ்வகை உயிரிகளினும் அஞ்சத்தக்கதாக விருந்தது. தம்வேண்டுகோட்குக் கதிரவன் உடன்பட்டதாக நம்பிய அவர், அப்பாம்பையும் மெய்யொடுக்கத்தோடும், கையொடுக்கத்தோடும் வணங்கி வேண்டினர். இத்தகைய பழக்கங்களால் கதிரவன் வணக்கமும் பாம்பு வணக்கமும் மாந்தனிடம் ஆழ்ந்தன என்று அறிஞர் கருதுகின்றனர். இனி, உலக

மெங்கும் உள்ள மாந்தர் தமிழ்நாட்டவரைப்போல் இருவணக்க மும் மிகுதியாகச் செய்வதைக் காணுதது, பின்னை ஏனோ எனின் தமிழகப் பகுதியிலேயே கற்கால மாந்தர் தோன்றி வளர்ந்தனர் என்பதாலும், அவரினின்றுபிரிந்து வேறு நிலங்கட் கெய்திவாழ்ந்த மாந்தர் அவ்வவ்விடங்கற் கேற்ப அப்பழக்க வழக்கங்களைச் சிறிது சிறிதாக மறந்தனர் என்பதாலுமே ஆம் என அறிக.

இனி, காளி, மாரி போன்ற பெண்ணுருவ வணக்கங்க ளும், அத்தகைய காரணங்களா லேற்பட்டனவே. காளி என்பது மண் என்றும், மாரி என்பது மழை என்றும் பொருள் படும். முற்காலக் காட்டுமாந்தர் கூட்டங் கூட்டமாகவே வாழ்ந்தனர் என்றும் அக்கூட்டப் பெருக்கத்திற்கு காரணமானபெண்களையே அவர் தலைவியராக்கொண்டு வாழ்ந்தனர் என்றும், அத்தலைவியர் போன்ற காட்டுயிர்களே காளி. மாரி, காட்டேறி, போன்ற தீத் தெய்வங்களாக மாறினர் என்றும் நிலவியல் அறிஞரும், மக் கள் வரலாற்றறிஞரும் கருதுகின்றனர்.

மக்களெல்லாம் அவற்றை வழிபட்டு விழாவாகக்கொண் டாடி வருவதால் அவர் ஒரு பயனும் காணுவிடினும், புகை பிடித்தல், கட்குடித்தல், சூதாடல் முதலிய பழக்கவழங்களைப் போலவே அவ்விழாக்களையும் பழக்கங் காரணமாகவே மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

புதிதாக நுங்கும் நுரையுமாகக் கொப்பளித்து வரும் ஆற்று வெள்ளத்தையும், கொழுந்துவிட்டு ஆடி அசைந்து எரி யும் நெருப்பு வண்ணத்தையும் உலகில் உள்ள எல்லா உயிர் களும் கண்ணுரக் கண்டு மகிழ்கின்றன. குழந்தைகளும் விரும்பும் அத்தகைய காட்சிகளை நன்கு வளர்ந்த பெரியவரும் கண்டு களிகூர்கின்றனர். அதனால் நீர் விழாவும், நெருப்புவிழா வும் மக்களால் இயற்கையாக விரும்பப்பட்டுக் கொண்டாடப் பட்டு வந்தன. ஆரியர் வந்தபின் தமிழர் பழக்க வழக்கங்கள் ஒவ்வொன்றிற்குங் காரணம் கற்பிக்கப்பட்டுப் பொய்யும் புலை யும் நிரம்பிய பழய கட்டுக் கதைகள் பெருகின.தை நீராட்டு தமி ழர்க்குரிய விழா. ஆடிப்பெருக்கு ஆரியர்க்குரிய விழா. முது வேனிற்காலத்தே பனிமலையில் உள்ள பனி உருகுவதால் அங்கி ருந்து தோன்றி ஓடும் கங்கை, யமுனை, சிந்து, கோதாவரி பிரம புத்திரா ஆகிய காட்டுப் பேராறுகளில் வெள்ளம், பெருக் கெடுத் தோடும். இந்தக் காட்சிப் பழக்கத்தையே ஆரியர் தென்

ளுடு நோக்கிவந்த ஞான்று தமிழர்க்குள் புகுத்தினர். தீப ஆவளி விழாவும் ஆரியர்க்குரிய நெருப்பு விழாவே. குளிர் காலங்களில் பண்டையில் மக்கள் பெரிய தீயை உண்டாக்கி அதனைச்சுற்றி வாழ்ந்து வந்தனர். இப்பழக்கமே கார்த்திகைக் குளிரில் தீக் கொளுவும் விழாவாக வளர்ந்தது. இத் தீ விழாக்கள் குளிர் காலத்தில் நடைபெறுவதை எண்ணுவார் இவற்றின் உண் மையை உணர்வர்.

இனி, ஆங்கிலேயர் தங்கட்கு வழிகாட்டியாகவந்த கிறித் துவின் பிறந்த நாளையும், மகமதியர் தங்கட்கு வழிகாட்டியாக வந்த முகமது நபியின் பிறந்த நாளையும், புத்தர் தங்கட்கு வழி காட்டியாக வந்த புத்தர் நிருவாணம் எய்திய நாளையும், சீக்கியர் தங்கட்கு வழிகாட்டியாக வந்த குரு நானக்கின் பிறந்த நாளை யும் கொண்டாடுதல் போல், ஆரியரும் தங்கட்கு வழிகாட்டி யாக வந்த கிருட்டிணன், விட்டுணு, முதலியோர் பிறந்த நாட் களையும் விழாவாகக் கொண்டாடுகின்றனர். இவர் எல்லோரும் தன்மானத்தோடு அவரவர் இனத்திற்கு வழிகாட்டியாகவிருந்த பெரியோரை நினைவு கூர்ந்து மகிழ, இவ் வேதுங்கெட்ட அடி மைத் தமிழரோ, தமக்கு வழிகாட்டியாகவிருந்த பெரியோரை மறந்து, விருந்திற்கே விலக்கப்பட்டிருப்ப, தனக்கு இலை போத் தல் என்று குறைகூறும் மூடர்போல் அவர்க்குரியதான அவ் விழாக்களைத் தங்கட்கும் உரியனபோல் அவரினும் எடுத்துக் கட்டிக் கொண்டாடுவர். இவர் அறிவின்மையை எங்கே போய்க்கூறி முட்டிக்கொள்வது? இனித், தமிழர்க்குரிய வழி காட்டி யாரோ என்று கேட்கின், நன்று வினவினீர்; முந்தையர் எல்லோரும் அவரவர் சமயத்தார்க்கும், நாட்டார்க்கும், இனத் தார்க்குமே வழிகாட்டிகளாயிருப்ப, எந்நாட்டவர்க்கும், எவ் வினத்தவர்க்கும். எச்சமயத்தார்க்கும், எக்காலத்துக்கும் ஏற்ற கருத்துக்களைக் கூறிப்போந்த உலக வழிகாட்டியாகிய திருவள் ளுவப் பெருந்தகையை மறந்தே போயினர் தமிழர். இவர்க்கு உய்வுண்டோ?

"ஆ, ஆ... நீர் கூறுவது சற்றும் பொருத்தமின்றே! மற்ற இனத்தாரின் வழிகாட்டிகட்குரிய பிறந்த நாட்கள்தெற்றெனத் தெரிய, வள்ளுவரின் பிறந்த நாளும், மாதமும், ஆண்டும் அறி யோமே; பின் அதனைக் கொண்டாடுவது எப்படி? அதனாலேயே வேறு பெரியோர் நாளைக் கொண்டாடுவதாயிற்று" என்று வினு வின், அறியாமையால் கேட்கின்றீர்: நம் தந்தையர், தாயரின் பிறந்த நாட்களும் பெயரும் மறந்துபோயினவென்று, வேறு ஒருவர்க்

குரிய தாயும் தந்தையும் பிறந்த நாட்களை நம் தாய்தந்தையர் பிறந்த நாட்களாகக் கொண்டாடுதல் சிறப்போ? அன்று; அன்று. மற்றும் ஆரிய முன்னோரான கிருட்டிணன், விட்டுணு முதலியோர் பிறந்த நாட்களும் கற்பனை நாட்களாக விருத்தலையும் அறிக.

இனி வள்ளுவர் பிறப்பிற்குரிய வரலாறு தெள்ளிதின் விளங்காமலிருப்பினும், அவர் பிறந்ததாக ஓர் ஆண்டை ஒருவாறு அறிஞர் ஆராய்ந்து குறித்திருக்கின்றனர். அந்த நாளிலேயே அவர் பிறந்தார் என்பது உண்மையில்லாமற் போயினும், அவரை ஆண்டிற்கொருகாலாகினும் நினைவு கூர்ந்து அவர் நல்லுரைகளைப் போற்றுதல் குற்றமோ?

இனி, உலக நாகரிக மாந்தர் அனைவரும் அவரவர் பிறந்த விழாக்களை அறிவு வளர்ச்சிக்குத் தக்கவாறு கொண்டாடி வர, இப்பாழுந் தமிழ் நாட்டார் மட்டும், நாக்கிலும், மூக்கிலும் துளை யிட்டுக் கொள்ளலும், நெருப்பைத் தலையில் தூக்கி ஆடுதலும் நெருப்பில் புகுந்து மீளலும், உடல் முழுக்கச் சேறும் புழுதியும் கப்பிக்கொள்ளப் படுத்துப் புரளுதலும், கள்ளை வயிறு நிறைய மண்டி வெறிகொண்டு ஆடுதலும் இலை தழைகளால் உடலையும் முகத்தையும் மூடிக்கொண்டு உடையின்றி ஆடலும், அழுக்கு நீரை அள்ளித் தூய நீரென்று குடித்தலும், நோயணுக்கள் மிதக் கும் நீர் நிலையில் எல்லோரும் முழுகி நோயை வருவித்துக் கொள் ளலும் ஆரியக் காட்டு மிராண்டிப் பழக்க வழக்கங்களை நினைவு படுத்திக் காண்பிக்கும் அருவருக்கத் தக்க ஆட்டத்தையும் பாட்டையும் விழுப்பமில்லாமல், விழாவென்று கூறிக்கொண் டாடுதலையும், அவற்றின் தீமைகளையும் ஒழுக்கக் கேடுகளையும் எழுத இவ்வேடு கொள்ளாது. இவ்விருட்காலக் கொள்கைகளி னின்று எந்தமிழர் விழிப்படைந்து தெளியும் நாள் என்றோ? இவை முற்றும், ஆரியர் பழக்க வழக்கங்களால் வந்த கொடுமை களே!

உரோமில் பண்டையில் மக்களை உயிருடனேயே கொடிய விலங்குகட்கு முன் எறிந்து அவரை அவை எவ்வாறு அறைந்து கொன்றுக், குருதியை உறிஞ்சிக், கிழித்து விழுங்குகின்றன வென்றும், அவ்வாறு அவை கொல்லுங்கால் அவ்வடிமை மாந்தர் எவ்வாறு கத்திக் கதறிக் குலைநடுங்கிக் குமைந்து போய் உயிரி ழந்து வீழ்ந்து சிதைக்கப்படுகின்றனரென்றும் கண்ணுறக் கண்டு

களிகூர்ந்த நாகரிகமில்லாக் காட்டு விழாக்கள் போன்றனவும், பழச்சாறு கொட்டிய கண்ணடித்தொட்டிகளை மேடையின் மீது வைத்து 'இளமை பொருந்திய, அழகு நங்கையரை உடையின்றி அதிலிறக்கி எல்லோர் முன்னும் குளித்து மூழ்கி விளையாட விட்டு, அந்நீராடிய அப்பழச் சாற்றை அம்மங்கையரே கொண்டு வந்து கொடுக்க வாங்கியருந்தி மகிழ்ந்த விலங்குணர்வு விழாக்கள் போன்றனவும் அறவே அழிக்கப்பட்டு, அந்நாடுகள் முன்னேறிப் போக தமிழர் என்று கூறித் தருக்கிக் கொள்ளும் காட்டு மிராண்டிகள் மடமை விழாக்களையும், நல்லெண்ணங்களைத் தீயன வாக்கும் இழிந்த விழாக்களையும் கொண்டாடுதல், கோளேறித் திங்கள் குடியேறும் இக்காலத்திற்கு ஏற்றதாமோ? அறிஞரே கூறு மின்:

இனி, உழவர் நாளெனச் சிறப்புறக் கொண்டாடப்பட்டு வரும் பொங்கல் விழா தமிழர்க்கு ஏற்றதோ என்னின், இவ்விழா வும் நல்ல முறையில் கொண்டாடப்படாமல், மடமை வளர்க் கவே பயன்படுமானால் இதனாற்றான் பயன் என்னை? உழவுப் பயன் கருதும் இந்நாள் பண்டைத்தமிழ் மக்களால் கொண்டாடப்பட்ட தற்கும் தக்க சான்றுகள் இல. அது எவ்வாறாயினும், உழவின் சிறப்பை யாவரும் உணரவும், ஆண்டு உழைப்பால், உண்டாகிய விளைவை எல்லோரும் கூடி யுண்டு மகிழவும், இத்திருவிழா சிறப் புறக் கொண்டாட வேண்டுவதே. தாமடைந்த பயனை உழவர் எல்லாமாந்தர்க்கும் ஈந்து மகிழ்தல் போல், மற்றாரும் தங்களால் ஆன உதவியை அவர்க்கு செய்தல் கடனன்றோ? நாட்டுணர்விற்கு வித்திடும் இவ்விழா தமிழர் பண்பாட்டிற் கொத்ததே. இவ்விழா விலும் ஆரியக் கலப்பு ஊன்றியுள்ளது. செந்தமிழ் மொழியிற் கலந்த வடமொழி போல், கலந்துள்ள இதனையறிந்து விலக்கி உய்வோமாக.

அட்டை ஓவியம்.

மறைமலையடிகள்.

மறைமலையடிகளைப் பற்றிக் கூறுவது, விழுப்பமும் வளப்பமும் சான்று, இனிய எளிய ஆற்றொழுக்காய் நடந்து, கருத்தாழமும், சொல்லின்பமும் தன்னுட்கொண்டு அருவியின் ஓசை போன்று செவியின்பமும் அறிவின்பமும் பயப்பதாய் அமைந்த தண்ணிய தனித்தமிழ் உரைநடையைப்பற்றிக் கூறுவதாகும்.

அடிகள் தமிழ்மொழிக்கே ஒரு புதுத் துறையை வகுத்தவராவர். கழக நூல்கள் உட்பட பண்டைய எல்லாத் தமிழ் நூல்களும், உரைகளும் முற்றும் தனித் தமிழிலேயே இயங்காதனவாயும், அவ்வாறு இயங்குங் காலையும் அரிய சொற்களை இடையீடு படுத்தி நடப்பனவாயும், இருக்க, அடிகள் தம் அளப்பரிய கல்வி வலிமையால் உயர்ந்த அறிவியல் நூல்களையும் கூடத் தனித் தமிழில் எழுதியும் பேசியும் வந்தமையொன்றே அவர் பெருமைக்குச் சிறந்த சான்று பகரும்.

தனித்தமிழின் தனி முதல்வர் நம் அடிகள். தமிழில் அழிந்து போன நூற்கள்போக எஞ்சியவற்றுள், பண்பாடும் வாழ்வு முறைகளுமே இருக்கக்கண்டு, மேனாட்டார் அறிவியலையும் தமிழர் அறியவேண்டும் என்பதற்காகப் பல அரிய கருத்துக்கள் பொதிந்த நூற்களைத் தனித் தமிழில் இனிமை துள்ள வெளியிட்டார். அவர் தம் இத்தொண்டு தமிழ் நாட்டார்க்கு மிகவும் இன்றியமையாதது

நுனிப்புல் மேய்ந்து. இலக்கியங்கற்றதாக இறுமாந்து தருக்கித் திரியும் எளியோர் சிலர் அவர் நடையை இழித்துப் பேசி வருகின்றனர். அவர் தம் பொய்யுரையும், புன்மைக் கருத்துக்களும் தமிழர் தம் ஆழ்ந்த மொழிப்பற்றின்முன் சுக்கு நூறாய்ச் சிதறுவனவாம்.

அடிகள் தனித்தமிழிலேயே எழுதியும், பேசியும் வந்தாலும், வடமொழிப் புலமையும், ஆங்கிலப் புலமையும் நிரம்பியவர் அவர் தம் நூல்கட்கு எழுதிய ஆங்கில முன்னுரைகள் மேனாட்டாராலும் போற்றி வரவேற்கப் படுகின்றன.

ஆரியக் கொள்கை மறுப்பும், சாதிப் பூசல்களின் எதிர்ப்பும் காரணமாக அடிகளை இழித்துப் பேசுவார் கொள்கையிலார் சிலர், அவர்தம் கூற்று கதிர் முன் பனியாய்க் கரைந்தழிந்து போகத்தக்கது.

இவ்வினிய நல்ல நாளில் அடிகளை நினைவு கூர்ந்து, தென்மொழியின் முதல் மலரால் அவரைப்போற்றி மகிழ்வோமாக.

(— ஆ. ர்.)

கோசர் யார்?

ஞா. தேவநேயப் பாவாணர். எம். ஏ.

கடைக்கழகக் காலத்தில், கோசர் என்றொரு வகுப்பார் மூவேந்தர்க்கும் படைத்தலைவராகவும், தமிழகத்தில் ஆங்காங்கு வெவ்வேறு சிற்றரசராகவும், இருந்தமை, பழந்தமிழ் நூல்களாலும் செய்யுட்களாலும் அறியக்கிடக்கின்றது. இவ்வகுப்பாரைப்பற்றி அறிஞரிடை பல்வேறு கருத்துக்கள் எழுந்துள்ளன.

காலஞ்சென்ற ரா. இராகவையங்கார், தம் 'கோசர்' என்னும் ஆராய்ச்சிச் சுவடியில், கோசராவார் காசுமீர நாட்டினின்று வெளிரையடுத்துக் கோசாம்பியைத் தலைநகராகக்கொண்ட வத்த (வத்ஸ) நாட்டு வழியாய்த் தமிழ்நாடு போந்தவர் என்றும்; வத்தம் அல்லது வச்சம் (வத்ஸம்) என்னும் வடசொற்கு இளமைப் பொருளுண்மையாலும் அவர் கோசம் என்னும் ஓர் அரிய சூள் முறையைக் கையாண்டதினாலும், இளங்கோசர் என்னப்பட் டிருக்கலாமென் றும் கோசர் என்னும் பெயருக்குக் கோசம் என்னும் சூள்முறையன்றி, கோசம் (கோசாம்பி) என்னும் நகர்ப் பெயரும், குசர் என்னும் ஆட்டுப்பெயரும், கோசம் (திரவியம்) என்னும் செல்வப்பெயரும், காரணமாயிருக்கலாமென்றும் கோசர் முதற்கண் கொங்கில் வதிந்து பின்பு குடகிற் குடியேறியவர் என்றும்; அகுதை, திதியன், குறும்பியன், ஆதனெழினி, தழும்பன் முதலிய குறுநில மன்னர் கோசர் என்றும்; இது போதுள்ள கைக்கோளரும் செங்குந்தரும் கோசர் மரபினர் என்றும்; பிறவும்; தம் ஆராய்ச்சி முடிபாகக் கூறியுள்ளார். இவற்றுள் ஒன்றிரண்டேயன்றி எல்லாம் உண்மையல்ல.

ஒருசார் அறிஞர், கோசரை வம்பமோரியர் படைக்கு முன்னணியாக வந்த வடுகராகவுங் கொள்வர். இதுவும் உண்மையன்று.

கோசர் காசுமீரத்தினின்றோ வத்தநாட்டினின்றோ வந்தவர் என்பதற்கு ஒருவகை வரலாற்றுச்சான்றுமில்லை. அவர் தொன்று தொட்டுத் தமிழ்நாட்டிற் பல்வேறிடங்களில் வாழ்ந்தவரென்பதே, பண்டைத் தமிழ் இலக்கியத்தால் தெரியவருகின்றது. தமிழுக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் மாறானதொன்றும் அவரைப்பற்றிய வண்ணனைகளிற் காணப்படவில்லை.

"பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்
பெரும்பெயர் மாறன் தலைவனாகக்
கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்
இயனெறி மரபினின் வாய்மொழி கேட்ப
... ...
மகிழ்ந்தினி துறைமதி பெரும" (மதுரைக். 771-79)

என்று பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாடப்படுவதால், பாண்டி நாட்டிலும்,

"... ... ... செல்லூர்க் குணாஅது
பெருங்கடல் முழக்கிற் றாகி யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கட் கோசர் நியம மாயினும்" (அகம். 90)

என்பதால் சோழநாட்டிலும்,

"பல்லார்க்கும் ஈயும் பரிசிற் கொடைத்தடக்கை
மல்லார் மணிவரைத்தோள் வண்கோசன்—மல்லலந்தார்
செஞ்சொல் செருந்தைதன் தென்னுறந்தை யென்றாளும்
வஞ்சிக் கொடிமருங்குல் வந்து"
(யாப்பருங்கலவிருத்தி. ஒழிபியல்)

என்னும் பழம் பாட்டால், உறையூரிலும்,

"கொங்கிளங் கோசர் தங்கள்நாட் டகத்து"

என்பதால் (சிலப், உரைபெறுகட்டுரை), கொங்கு நாட்டிலும்,

"கோசர் துளுநாட்டன்ன"

என்பதால் (அகம். 15), துளுநாட்டிலும், கோசர் வதிந்திருந்தமை புலனும்.

கொங்குநாடு பிற்காலத்தில் மூவேந்தரிடையும் பிற சிற்றரசரிடையும் அடிக்கடி கைமாறி வந்திருப்பினும், முற்காலத்தில் சேரர்க்கே உரியதாயிருந்திருத்தல் வேண்டும் என்பது,

"சேரர் கொங்குவை காவூர்ந டதில்"

என்று அருணகிரிநாதர் பாடியிருப்பதாலும், தகடூரெறிந்த அதிகமான்குடி வரலாற்றாலும், பிறவற்றாலும், அறியப்படும்.

கடைக்கழகக்காலத்தில், முத்தமிழ்நாட்டிலும் ஆங்காங்கிருந்த குறுநிலமன்னர் தத்தம் வலிமிக்க காலத்து, தத்தம் வேந்தர் தலைமையினின்று திறம்பியதொடு அவர் நாட்டையும் கைப்பற்றினர் என்பதற்கு,

"வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர் விளங்குபடை நூறி
நிலங்கொள வெஃகிய பொலம்பூட் கிள்ளி"
(அகம். 205)

'தித்தன் உறந்தை'' (அகம். 122)

என்பன சான்றும். இம்முறையே, கொங்கும் துளுவும் கோசர் வயிற்பட்டிருத்தல் வேண்டும். இளங்கோவடிகள் "குடகக் கொங்கர்" என வரந்தருகாதையிற்குறித்தது, ஒருகால், குடகுநாட்டுக் கோசரை நோக்கியதாயிருக்கலாம். துளுவும், குடகும் ஒரு காலத்தில் குடகொங்குப் பகுதிகளாகவிருந்தன. "குடகக் கொங்கர்" என்று இளங்கோவடிகளும் கூறுதல் காண்க.

திருநெல்வேலி மாவட்டக் கல்லிடைக்குறிச்சித் திருமால் கோவிலுக்குக் கோசர்குடி பெருமாள் கோவில் என்று பெயர். அதேமாவட்டத்துக் கழுகுமலையில் ஒரு தெருவிற்குக் கோசர்க் குடித் தெரு என்று பெயர்.

கோசருட் பெருந்தமிழ்ப் பாவலரான நல்லிசைப் புலவரும் இருந்தனர் என்பதை, "செல்லூர்க்கோசனர்" (அகம். 66), "கருவூர்க்கோசனர்" (நற்றிணை, 214) என்னும் பெயர்கள் காட்டும்.

இவையெல்லாம், கோசர் தமிழ்நாட்டிற் கொங்கில் மட்டுமன்றி எங்கும் வதிந்தவர் என்றும், அவர் தமிழரே என்றும், தெரிவிக்கும்.

வேத ஆரியர் இந்தியாவிற்குட் புகுமுன் நாவலந்தேய முழுவதும் தமிழரும் அவர் இனத்தாரான திரவிடருமே பரவியிருந்ததினால், அகத்தியர் (காசுமீரத்) துவராவதியினின்று பதினெண்குடி வேளிரைத் தென்னாடுகொண்டுவந்தனரென்பதும், காசுமீரநாட்டு வரலாறு கூறும் இராசதரங்கணியில் அந்நாட்டார் கோசம் என்னும் ஒரு சூள்முறையைக் கையாண்டமை கூறப்பட்டிருப்பதும், கோசநாடு எனப் பெயரிய சினைத்தடம் காசுமீரநாட்டிலுண்மையும், உதயணன் தாய் சிவனடியார் அறுபத்துமூவருள் ஒருவரான ஏயர்கோன் கலிக்காமநாயனாரின் குலமாயிருந்ததும், கோசர் வடநாட்டினின்று வந்தவர் எனக் காட்டும் சான்றுகா.

மூலப்படை, கூலிப்படை; நாட்டுப்படை, காட்டுப்படை; பகைப்படை, துணைப்படை; என இவ்விருபாலாகப் பகுக்கப்படும் அறுவகைப் படையுள்: நாட்டுப்படை என்பது படையாட்சி கைக்கோளர் செங்குந்தர் படைகளையும், காட்டுப்படை என்பது கள்ளர் மறவர் படைகளையும் குறிக்கும். படைத்தலைவர் இயல்பாகத் தத்தம் படைமறவர் பாங்காகவே வதிவராதலின், வேந்தரை அடுத்தும் அவர் தலைநகரிலும் என்றுமிருந்த படைத்தலைவர் நாட்டுப்படைத்தலைவரே.

"வேளாண் மாந்தர்க் குழுதூண் அல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"
'வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே"

என்பவற்றால் (தொல் மரபியல். 80. 81). நாட்டுவாணராகிய (உழுவித்துண்ணும்) வேளாளர் வேந்தராற் படைத்தலைவராய் அமர்த்தப்பெறுவர் என்பது பெறப்படும்.

முடியொழிந்த,

"வில்லும் வேலும் கழலும் கண்ணியும்
தாரும் மாலையும் தேரும் வாளும்" (ஷ 83)

முதலிய பிறசின்னங்களையுடைய குறுநிலமன்னர்,நாட்டுவாணரும் காட்டுவாணருமாக இருவகையர். முடியுடைமூவேந்தர் என்றும் நாட்டுவாணரே.

எத்தொழிலராயினும், பிறர்க்குக் கீழ்ப்பட்டு வாழும் மக்களெல்லாம், தம் தலைவர்பொருட்டு உற்றவிடத்துயிர் வழங்குவோரும் வழங்காதோரும் ஆக இருவகையர்.

"......................நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம்"

என்னும் ஔவையார் கூற்றும்,

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு"

என்னும் வள்ளுவர் கூற்றும், அன்பு பிறவிக்குணம் என்பதையும், அஃதுடையார் தம்மால் அன்பு செய்யப்பெற்றோர்க்கு உயிரையும் உதவுவர் என்பதையும், தெரிவிக்கும்.

இறைவனடியார் தம் திருவடிமைத் தொண்டில் தம் உயிரையும் விட அணியமாய் (தயாராய்) இருப்பதுபோன்றே, அரசப்பற்றுமிக்க பணியாளரும் தம் அரசன்பொருட்டு என்றும் உயிர்விட இருப்பர். இவ்வுலகத்து நீடுவாழ்ந்து இல்லறஇன்பந் துய்க்கவிரும்பும் பொதுப்பணியாளர் மனநிலையே இஃதாயின்; போர்க்களத்து மடிதலைப் பொன்னுலகம் புகுதலாகக் கொண்டு கூற்றுவனையும் அறைகூவவும், கொற்றவைக்குத் தம்மைத்தாமே பலியிட்டுத் தம்தலையைத் தம் வலக்கையிலேந்திக் கூத்தாடவும் வல்ல, தறுகண் மறவர் நிலையைச் சொல்லவும் வேண்டுமோ!

பன்னூற்றாண்டுகளாகத் தமிழரசின்மையாலும், கழிபல நூற்றாண்டாகப் பிறப்பொடு தொடர்புற்ற ஆரியமுறைக்குலப் பிரிவினையுண்மையாலும், தமிழர் பெரும்பாலும் மறமிழந்திருக்கும் இற்றைநிலைநோக்கி, பண்டைத்தமிழர் மறம்பற்றியும் சிலர் ஐயுறுகின்றனர். அவர் தொல்காப்பியப் புறத்திணையியலையும் படைபற்றிய திருக்குறளதிகாரங்களையும், புறப்பொருள் வெண்பாமாலையையும் நம்பாவிடினும், சில புறநானூற்றுச் செய்யுட்களையும், கரிகால்வளவன், செங்குட்டுவன் முதலியோரின் வடநாட்டுப் படையெடுப்பையும், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் முதலியோரின் மெய்கீர்த்தியையும், கலிங்கத்துப் பரணியையும், நோக்கியேனும் தம் கருத்தைத் திருத்திக் கொள்வாராக.

பண்டைத் தமிழ்ப்படைமறவருள், போரிற் புறங்கொடுக்கக் கூடாதென்றும் அரசனுக்காக உயிரைத் துறத்தல் வேண்டுமென்றும் சூளிட்டுக்கொண்ட ஒருசாரார் இருந்தனர். அவர் பூட்கை மறவர் என்னப்பட்டனர். பூட்கை உறுதிபூணுதல். அவர்போன்றே, அரசனுக்கு அவ்வப்போது வேண்டும் பணிகளைத் தப்பாது செய்யவேண்டுமென்றும், தப்பின் உயிர் துறப்பதென்றும், சூளிட்டுக்கொண்ட ஒருசார் பணியாளர் இருந்தனர். அவர் வேளைக்காரர் என்னப்பட்டனர். வேளைதவறாது பணி செய்பவர் வேளைக்காரர். அவர் தலைவன் வேளைக்காரநாயகம் என்னப்பட்டான்.

> "ஓடாப் பூட்கை விடலை" (புறம். 295)
>
> "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்" (ஷை 31)
>
> "உட்பகை யொருதிறம் பட்டெனப் புட்பகைக்
> கேவா னாகலிற் சாவேம் யாமென
> நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்பத்
> தணிபறை யறையு மணிகொள் தேர்வழி" (புறம் 68)

என்னும் பகுதிகள், பண்டைத்தமிழ்மறவரின் மேற்கோளையும் போர்விருப்பத்தையும் தெளிவாகப் புலப்படுத்தும்.

பூட்கை, மேற்கோள், கோள் என்பன ஒருபொருட்சொற்கள். ஒன்றை உறுதியாகக் கடைப்பிடிப்பதென மேற்கொள்வது மேற்கோள். அங்ஙனமே உள்ளத்தில் அல்லது செயன்முறையிற் கொள்வது கோள்,

> "மாட்சியின் மாசற்றார் கோள்"

என்று திருவள்ளுவரும் (குறள். 646) கூறுதல் காண்க.

கொள்வதும் பூணுவதும் மேற்கொள்வதும் நன்றிற்கும் தீதிற்கும் பொதுவேனும், கோள் பூட்கை மேற்கோள் என்னும் முச்சொல்லும் வழக்காற்றில் நற்கொள்கையையே குறிக்கும்.

பூட்கைமறவரும் அவர் தலைவரும் உறுதியான கோளுடைமைபற்றிக் கோளர் என்னப்பட்டனர். கை என்பது படையுறுப்பாதலின், படையுறுப்பைச்சேர்ந்த கோளர் கைக்கோளர் என்னப்பட்டனர். ஏனெனில், படையுறுப்பைச் சேராது தற்சார்பான கோளருமிருந்தனர் (Free lance):

> "ஒப்பன படையுறுப் பொழுக்கம் சிறுமை
> கரமும் பின்பிறந் தாளும் கையே"

என்பது பிங்கலம்.

பெரும்புலவர் ரா. இராகவையங்கார், இடங்கை வலங்கை என்பன படைவகுப்புக்கள் என்றும், அவற்றைச்சேர்ந்த கோளர் கைக்கோளர் என்னப்பட்டனர் என்றும் கூறுவர். இடங்கை வலங்கை என்பன படைவகுப்புக்களையன்றி, அரசன் அமர்ந் திருக்கும்போதும் செல்லும்போதும் இடத்திலும் வலத்திலும் இருக்குமாறும் செல்லுமாறும் குறிக்கப்பட்ட குலங்களையே குறித்தலானும், இடங்கையைச் சேர்ந்தவர் வலங்கையையும், வலங்கையைச் சேர்ந்தவர் இடங்கையையும் சேராமையானும், அது பொருந்தாதென்க. கை என்பது படைவகுப்பாதலின், உறுதியன ஒழுக்கத்தைக் கைகொண்டவர் கைக்கோளர் என் பதும் பொருந்தாது.

அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம் தெரிந்து தேறப்படும்'' (குறள்.501)

என்னும் முறைபற்றியோ, வேறுவகையிலோ, மறம் உண்மை பணிவு நன்றியறிவு, அன்பு, கடைப்பிடி, வலிமை முதலிய பண்பிற் சிறந்தவராக வேந்தரால் தெரிந்தெடுக்கப் பெற்ற கைக்கோளர், தெரிந்த கைக்கோளர் என்னப்பட்டனர். "பராந்தகன் தெரிந்த கைக்கோளர்," "சுந்தரசோழர் தெரிஞ்ச கைக்கோளர்.' "பாண்டிய குலாசனி தெரிஞ்ச கைக்கோளர்" எனக் கல்வெட்டில் வருதல் காண்க.

அரசரின் முழு நம்பிக்கைக்குரியவராயிருந்த கைக்கோளர் அரண்மனையிலும் உவளகத்திலும் அகப்பரிவாரமாகவும் அமர்த் தப் பெற்றனர் என்பது,

"நம்பிராட்டியார் நேரியன் மாதேவி
யகப்பரிவாரத்துக் கைக்கோளன் சோறுடையா
னருக்கனை அன்பார பாணதிராயன்"

(S. I. I. Vol. No, 700) எனவரும் கல்வெட்டுப்பகுதியால் அறிய லாம்.

கோளர் குடியிருந்த பலவூர்கள் அவர்குடியாற் பெயர் பெற்றிருந்தன. கொடுங்குன்றத்திற்கு அருகில் திருக்கோளக்குடி என்றொரு மலையடியூர் உளதென்றும் "கோளர் இருக்குமூர் கோள்களவு கற்றவூர்" என்றும் காளமேகப்புலவர் தனிப்பாட் டில் 'கோளர்' என்பது குடிப்பெயர் என்றும், பெரும் புலவர் ரா. இராகவையங்கார் கூறுவர்.

பாணன் என்னும் குடிப்பெயர் பாண் என்று குறுகுவது போல், கோளன் என்னும் குடிப்பெயரும் கோள் என்று குறுகும். இக்குறுக்கம் பெரும்பாலும் பாண்சேரி, கைக்கோட் படை எனப் புணர்மொழிப் பெயர்களிலேயே நிகழும். "இப்படிச்

சம்மதித்து விலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்தோம் ஆதிசண்டேச்சுர தேவர்க்கு, திருநெல்வேலிக் கைக்கோட் சேனாபதிகளோம்.''

(S. I. I. Vol. V. No. 118) எனவரும் கல்வெட்டுப் பகுதியைக் காண்க.

சில சொற்களில் ளகரம் சகரமாகத் திரிகின்றது. இதற்கு உளி — உசி, தாளி — தாசி என்பன எடுத்துக்காட்டு. இம்முறையில் கோளன் என்பதும் கோசன் எனத் திரிந்ததாகத்தெரிகின்றது. பின்பு, தேசம்—தேயம் என்பதுபோல் கோசன்—கோயன் என்றுயிருத்தல் வேண்டும். பாண், கோள் என்னுங் குறுக்கங்கட்கேற்ப, கோயன் என்பது கோய் என்று குறுகுதலும் இயல்பே.

''கோயன் பள்ளி என்பது கருவூரையடுத்துள்ளது. இதனற் கோசன் என்னும் பெயர் கோயம் என வழங்கப்பட்டதென்றுணரலாம். கோயன்புத்தூர் என்பதும் இப்படிப்பட்டதேயாம். இக்கோயர்குடி கோய் எனவும் வழங்கப்பட்டதென்பது இளங்கோய்க்குடி என்ற பெயரான் அறியலாம். முள்ளி நாட்டு இளங்கோய்க்குடி (அம்பாசமுத்திரத்தின் பெயர்) என்பது சாசனம் (Top. List. Tinnevelly Dist. Nos. 28, 29 பார்க்க). ''இளங்கோயுடையரன் முனையதரன்'' (S. I. I. VI. No. 538 of 1909) எனத் தஞ்சையைச்சேர்ந்த கோவலூர்ச் சாசனத்து வருதலான், இக்குடி வழக்குண்மை உணரப்படும். திருநெல்வேலியைச்சார்ந்த கடையம் உள்ள நாடு கோய்நாடு என வழங்கப்படும்.'' எனப் பெரும் புலவர் ரா. இராகவையங்கார் எழுதியிருப்பது பொருத்தமே. (கோசர், பக். 54, 55) ஆயின், ''கோசர் என்னும் சொல்லை நாளடைவிற் கோளர் என மரீஇயினதென்று நினையலாம்.'' (ஷை பக். 57) என்று அவர் தலைகீழாகக் கூறியிருப்பது பொருந்தாது. ளகரம் சகரமாகத் திரிதலன்றிச் சகரம் ளகரமாகத் திரிதலில்லை. ''தாளி, தாசி என வருதலும் நினைக'' என அவர் எடுத்துக்காட்டியிருப்பதே அதற்குச்சான்றாம்.

ஆகவே, கோசர் என்று கடைக்கழகச் செய்யுட்களிலும், கோளர் என்று பிற்காலச் செய்யுளிலும், கைக்கோளர் என்று கல்வெட்டுக்களிலும், குறிக்கப்பெற்றவர் ஒரேவகுப்பினர் என்று துணியத்தகும். பண்டைச் செய்யுட்களில் கோசர் என்ற வடிவமே காணப்பெறுவதால், அதுவே முந்தினதாகும் என்று ஒரு சிலர் கருதலாம். உலக வழக்கு செய்யுள் வழக்கினும் முந்தியதென்றும், செய்யுள் வழக்குச் சொல்லெல்லாம் மூலவடிவத்தைக் காட்டாவென்றும், தெரிந்துகொள்க. நீ என்னும் முன்னிலையொருமைப்பெயரின் மூலவடிவம் நீன் என்பதேயாயினும், முன்னதே செய்யுள்வழக்காகவும் பின்னது உலக வழக்காகவும் இருத்தல் காண்க.

"நன்றல் காலையு நட்பிற் கோடார்
சென்று வழிப்படூஉந் திரிபில் சூழ்ச்சியிற்
... ... கோசர்" எனவும் (அகம். 113)

"ஒன்றுமொழிக் கோசர்" எனவும் (அகம். 196)

"வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர்" எனவும் (அகம். 205)

"கோசர் நன்மொழி போல வாயாகின்றே" எனவும் (குறுந். 15)

வருவனவெல்லாம், கோசர் ஒரு பூட்கையை அல்லது கோட்பாட்டையுடையவரென்றே புலப்படுத்தல் காண்க.

இனி,

"இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கட் கோசர்" எனவும் (அகம். 90)

"துணைகா லன்ன புனைதேர்க் கோசர்" எனவும் (அகம். 251)

"வளங்கெழு கோசர் விளங்குபடை" எனவும் (அகம். 205)

... ... வென்வேல்
இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்
இகலின ரெறிந்த அகலிலை முருக்கிற்
பெருமரக் கம்பம் போல எனவும் (புறம். 169)

"வலம்புரி கோசர் அவைக்களத் தானும்" எனவும் (புறம். 283)

"மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்" எனவும் (அகம். 15)

"கோசர் துளுநாட் டன்ன
வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பின்" எனவும் (அகம் 15)

வருவனவெல்லாம், கோசர்தமிழர்க்குமாறுன ஓரியல்பும் உடையவரல்லர் எனக் காட்டுதல் காண்க.

இனி, செங்குட்டுவன் மோகூர்ப் பழையனை வென்று அவன் காவன்மரமாகிய வேம்பின் அடியை வெட்டிய செய்தியைக் கூறும்,

"வெல்போர் வேந்தரும் வேளிரும் ஒன்று மொழிந்து
மொய்வளஞ் செருக்கி மொசிந்துவரு மோகூர்
வலம்படு குழூஉநிலை யதிர மண்டி
நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர்
நிறம்படு குருதி நிலம்படர்ந் தோடி
மழைநாட் புனலின் அவற்பரந் தொழுக
... ...
கருஞ்சினை விறல்வேம் பறுத்த குட்டுவன்"

என்னும் பதிற்றுப்பத்துப் பகுதியுள் (49) வரும்

'நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர்'

என்னும் தொடர்,

"இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்"

என்னும் குறளொடு (779) பொருந்திய, தமிழ்ப் பூட்கை மறவரின் பொதுவியல்பைக் குறிப்பதன்றி, வேற்றுநாட்டு மறவரின் சிறப்பியல்பைக் குறிப்பதாகாது. ஆதலால்,

"இழிசின னாகிய காசன் அரசனுடைய
ஐய நடுக்கம் போக்க உதிரத்தால் நனைந்த
தோலில் இன்று கோசமுறையில் ஆணையிட்டனன்"

எனப் பெரும்புலவர் ரா. இராகவையங்கார் மேற்கோள்காட்டும் காசுமீரநாட்டு வரலாறாகிய இராசதரங்கணிப்பகுதி, கோசர் தமிழரல்லர் என்னுங் கொள்கைக்குச் சான்றாகாமை காண்க.

தமிழகத்தையடுத்து வடக்கிலுள்ள வடுகர், மோரியரின் தென்னாட்டுப் படையெடுப்பில் அவர்படைக்கு முன்னணியாக வந்துதவினர் என்பது,

"முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு"

என்னும் அகப்பகுதியால் (281) அறியலாகும்.

மோகூர் மன்னனாகிய பழையன் மோரியர்க்குப் பணியாமல் எதிர்த்துநின்ற போரில், கோசர் தம் சொல் தவறாமல் மோகூரையடுத்த ஆலம்பலத்துத் தோன்றி அவனுக்குதவின செய்தியை,

"மழையொழுக் கறாஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூர் அவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன"

(மதுரைக்காஞ்சி. 507-9)

"பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே... ... ...

(குறுந்தொகை 15)

"... ... ... வெல்கொடித்
துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்"

(அகம் 251)

என்னும் பகுதிகள் தெரிவிக்கும்.

கோசர் காசுமீரத்தினின்று வத்தநாட்டு வழியாய்த் தமிழ்நாடு வந்த வடவரெனின், தமிழரையடுத்த வடுகரே வடநாட்டாராகிய மோரியர்க்கு உதவியிருக்கும்போது, அவரும் உதவாதிருந்திருப்பரோ?

மேற்காட்டிய மதுரைக்காஞ்சிப் பகுதியுள் வந்துள்ள 'நான்மொழிக்கோசர்' என்னும் தொடருக்கும், குறுந்தொகைச் செய்யுளுள் வந்துள்ள 'நாலூர்க் கோசர்' என்னும் தொடருக்கும், தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்மொழியும் வழங்கியதால் நான்மொழிநாடு எனப் பெயர்பெற்ற நாமக்கல் வட்டத்தில் வதிந்த கோசர் என்றும், வால்மீகி இராமாயணத்திற் சொல்லப்பட்ட குசர் என்பவரின் நாற்புதல்வர் அமைத்த கௌசாம்பி முதலிய நாலூரினின்று பரவிய கௌசர் வழியினர் என்றும், பெரும்புலவர் ரா. இராகவையங்கார் முறையே காரணங் காட்டுவர். இனி, அவரே,

"கழுகுமலைச் சாசனங்களில்" நாலூர், நால்கூர் என்ற பெயருடைய ஊர் பல்லிடத்தும் வருதல் காணலாம், ... கோசர் ஒரு திரளாகச் சபதஞ் செய்துகொள்பவரென்பது இவ்வுரையடுத்துள்ள "குழுவாணை நல்லூர்" என்ற பெயரான் ஊகிக்கப்படுவது. இக்குழுவாணை நல்லூர்க் கோசர்தாம் குறுந்தொகையில் நல்லூர்க்கோசர் என வழங்கப்பட்டனரோ என ஐயுறுகின்றேன். அன்றி மேலே காட்டிய கழுகுமலைப்புறத்து நாலூர் பற்றி நாலூர்க்கோசர் எனப்பட்டனரெனினும் பொருந்தும்.' (பக். 51, 52) எனவும் கூறியுள்ளார்.

"வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து"

என்று பனம் பாரனார் கூறிய தொல்காப்பியர் கால மொழிநிலையே கடைக்கழகக்காலத்தும் தமிழகத்திருந்ததினால், கி. பி. 8-ஆம் நூற்றாண்டிற் புகுந்த தெலுங்கும், 10-ஆம் நூற்றாண்டிற்குப்பின் திரிந்த கன்னடமும், 12-ஆம் நூற்றாண்டிற்குப்பின் திரிந்த மலையாளமும், 3-ஆம் நூற்றாண்டில் நாமக்கல் வட்டத்தில் வழங்கினவென்பது காலமலைவு என்னும் குற்றமாம். ஆகவே, நான்மொழிக் கோசர் என்னும் தொடருக்கு, ஒன்று மொழிதல், நண்பர்க்கு உற்றுழியுதவல், எளியாரைக் காத்தல், பழிக்குப் பழிவாங்குதல் ஆகிய நால்வகைப் பூட்கை மொழிகளைக்கொண்ட கோசர் என்று பொருள்கொள்வதே உண்மைக்கும் உத்திக்கும் பொருத்தமாம். மொழி இங்கு உறுதிமொழி, "நான்மொழிக் கோசர் தோன்றியாங்கு" என்னும் மதுரைக்காஞ்சித் தொடருக்கு, "நான்கு வகையாகிய கோசர் வஞ்சின மொழியாலே விளங்கினாற் போன்று" என்று நச்சினார்க்கினியர் உரைத்திருப்பதையும் நோக்குக. குறுந்தொகைச் செய்யுளில் வரும் "நாலூர்க்கோசர்" என்னும்

தொடரும் நாலுரைக் கோசர் என்பதன் வழூஉ வடிவோ என ஐயுற இடந்தருகின்றது,

"கொங்கு மண்டிலத்துட் பலபாகங்களில், வத்தவன், வத்த ராயன், வச்சராயன் என்னும் பெயர்கள் இக்காலத்து வழங்கப்படு வன" என்று, பெரும் பேராசிரியர் பண்டாரகர் (Dr,) உ. வே. சாமிநாதையர் பெருங்கதை முகவுரையிற் கூறியிருப்பது, கொங்கு வேள் அவ்வனப்பை அல்லது தொடர்நிலைச்செய்யுளை இயற்றிய பின் நேர்ந்துள்ள நிலைமையையே குறிப்பதாகும். இக்காலத்தும் இரசியாவைப்பற்றிக் கேள்விப்பட்ட தமிழருள் ஒருசிலர் தம் புதல்வர்க்குத் தாலின் (Stalin), லெனின் (Lenin) எனப் பெயர் இடுவதையும், அதுபற்றி அவரை இரசியர் எனக்கொள்ள இட மின்மையும், நோக்குக.

இனி, இளங்கோசர் என்னும் வழக்கில் உள்ள 'இள' என் னும் அடைமொழிக்காரணம் பற்றி, பெரும்புலவர் ரா. இராக வையங்கார்,

"வேட்டொழிவ தல்லால் வினைஞர் விளைவயலுள்
தோட்ட கடைஞர் சுடுநந்து—மோட்டாமை
வன்புறத்து மீதுடைக்கும் வச்சத் திளங்கோவை
இன்புறுத்த வல்லமோ யாம்"

... ... இவ்வச்சத்தொள்ளாயிரப் பாட்டில் 'வச்சத்திளங் கோவை' எனப் பாடியதனால், இந்நாட்டுக் குடியேறியவன் வச்சத் திளங்கோவேந்தன் வழியினன் என்று தெளியலாகும். இவன் கோசத்தினின்று இங்கு வந்தவன் வழியினனாதலால் இவன்வழிக் கோசரெல்லாம் இளங்கோசர் என்று வழங்கப்பட்டனரென உய்த் துணரலாம்"

"இனி இக்கோசாம்பியை ஆண்ட அரசரே இளன் என் னும் திங்கட்குலத்து வேந்தன் வழியினரென்றும், அதுபற்றியே அவன் வழிவேந்தர் இளங்கோ எனப் பெயர் சிறப்பரென்றும் கருதுவாருண்டு"

"இனி, இவர் வத்ஸதேசத்துக் கோசம் என்ற தலைநகரி னின்று வந்தவராதலான், இளங்கோசர் என வழங்கப்பட்டன ரெனின், அதுவும் நன்கு பொருந்தும். வத்ஸ மொழி ஆரியத்தில் இளமைக்குப் பெயராதலான் வத்ஸகோசர்—இளங்கோசர் என மொழிபெயர்த்துத் தமிழரால் வழங்கப்பட்டனரென்றுங் கொள்ள லாம். கோசரைக் கூறிய பலவிடத்தும் சான்றோரெல்லாம் பல்லிளங் கோசர், நல்லிளங்கோசர், கொங்கிளங்கோசர் என வழங்கிக் காட்டலான், இஃது உடலிளமைபற்றியதாகாதென்பது ஒருதலையாகத்துணியலாம், வத்ஸதேசத்தை இளநாடெனக்

கொண்டு அந்நாட்டு வேந்தனை இளங்கோவென்றும், அந்நாட்டுக் கோசரை இளங்கோசர் என்றும் வழங்கினரென்பது பொருந்திய தாம்,'' எனப் பலவாறு கூறியுள்ளார் (பக். 7, 8). பின்னர், அவரே, முன்னுக்குப்பின் முரணாக, ''கோசர் எப்போதும் இளமையோடே யிருப்பரென்று துணிவது பொருந்தாதாம். ''ஊர்முதுகோசர்'' (அகம். 262) என வழங்கலான், இவர் எல்லா மக்களும் போன்று யாக்கை மூத்துக்கழிதலுண்டென்க. இதனால், இவரை இளங்கோசர் எனப் பல்லிடத்தும் வழங்குவது இவர் குடிபற்றியது அல்லது நாடுபற்றியதெனின், நன்கு பொருந்து மென்க.'' எனவுங் கூறியுள்ளார் (பக். 9).

''பாசிலை யான்ற பயறு புக்கென
வாய்மொழித் தந்தையைக் கண்களைந் தருளா
தூர்முது கோசர் நவைத்த சிறுமையிற்
கலத்து முண்ணாள் வாலிது முடாஅள்
சினத்திற் கொண்ட படிவம் மாறாள்
மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்
செருவியல் நன்மான் திதியற் குரைத்தவர்
இன்னுயிர் செகுப்பக் கண்டுசின மாறிய
அன்னி மிஞிலி போல''

என்ற அகச்செய்யுளினின்று (262), ''வாய்மொழித் தந்தை'' என்றது ஊர்முது கோசரோடு ஒரே இனத்தவன் ஆன தந்தை என்பது புலப்படுகின்றது. முதுகோசராயிருந்தும் இனமென்று நோக்காது, தண்டந் தகுதியன்றென்பதும் எண்ணாது, எல்லா வுறுப்பினுஞ்சிறந்த கண்ணை அருளாது களைந்தனரென்றார் ...... குறும்பியனும் திதியனும் கோசரினமல்லராயின் இங்ஙனம் எளி தில் ஒன்றுமொழிக்கோசரைக் கொன்று முரண்போக்கலாகா தென்க. ''முரண்போகிய'' (அகம். 196) என்றதனால் ஓரினத்திற் குள் நேர்ந்த முரண்பாடு இஃதெனத் துணியலாம். ஊர்முது கோசர் பிழையாதலால், இவ்வழக்கில் வேளிர் இடையிற்புக்குக் கொன்று முரண்போக்கல் இயலாதென்க. கோசர் அந்நியராற் கொல்லப்படத்தக்க எளியரல்லர் என்பதும் நினைக.'' எனத் தம் மனம்போனவாறெல்லாம் உய்த்துரைப்பர் பெரும்புலவர் ரா. இராகவையங்கார்.

கோசர் மட்டுமன்றி உண்மை சொல்வோரெல்லாம் வாய் மொழியர் எனப்படுவர். ''வாய்மொழிவாயர் நின்புகழேத்த'' என்று பதிற்றுப்பத்துள் வருதல் காண்க (37,2). கோசர் பலவிடத் துப் பிறரால் வெல்லப்பட்டமை பண்டை இலக்கியத்தினின்று தெரியவருதலால், ''அந்நியராற் கொல்லப்படத்தக்க எளியரல்லர்'' என்று கூறுவது பொருந்தாது. அவரெல்லாரும் அத்தகைய வலியரெனின், மூவேந்தர் அவர்முன் எங்ஙனம் நாடாண்டிருக்க முடியும்?

இளையரே பொருதற்குச் சிறந்தவராதலாலும், 'இளையர்', 'மழவர்' முதலிய இளமைகுறித்த பெயர்கள் போர்மறவர்க்குப் பழஞ்செய்யுட்களுள் வருவதாலும், இளைஞரான கோசரே, இளங் கோசர் என்னப்பட்டனரென்றும், அவருள் மூத்துப் போர்த் தொழிலினின்றும் நீங்கி இக்காலத்து ஓய்வுபெற்ற பொருநர் (Ex-service men)போல்) ஊர்க்குள் வதிந்தவரே "ஊர்முது கோசர்" என்னப்பட்டனர் என்றும், கொள்வதே மிகப்பொருத்த மாம்.

கோசர் தமிழரே என்பது இதுகாறும் கூறியவற்றால் தெரிதலால், பழையன், அதகன், ஞிமிலி, அகுதை, திதியன், குறும்பியன், ஆதனெழினி, தழும்பன் முதலிய குறுநிலமன்னரும் படைத் தலைவரும் பொருநரும் தமிழரே என்று தெளிக. அவர் பெயரெல்லாம் தூய தமிழ்ச்சொல்லாயிருத்தலையும், அவர் என்றேனும் வேற்றுமொழி பேசியதாக எங்கேனும் சொல்லப்படாமையும், நோக்குக.

எத்தொழிலையும் இருவகுப்பார் செய்துவரின், அவர்க்குள் இகலும் இசலிப்பும் ஏற்படுவது இயல்பே. கோசர்க்கும் வேளிர்க்கும் போர்த்தொழில் ஓரளவு ஒத்திருந்தமையின், அவரிடைச் சிறிது பகைமை ஏற்பட்டிருக்கலாம், இதுபற்றிக் கோசரை வடநாட்டாரெனக் கொள்வது பொருந்தாது. ஆரிய வருகைக்கு முன் நாவலந்தேய முழுவதும் தமிழரும் அவர் வழியினரான திரவிடருமே குடியிருந்ததினால், வேளிரைப்போன்றே கோசரும் பனிமலை (இமயம்)வரை பரவியிருந்திருக்கலாம். ஆதலால், கோசம் என்னும் சூள்முறையை வடநாட்டார் கையாண்டமை, அதன் அயன்மையைக் காட்டாது.

கோசர்க்கும் வேளிர்க்கும் போர்த்தொழில் ஓரளவு பொதுவாயிருந்ததேனும், அது கோசர்க்கே சிறந்திருந்தமை

"இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கட் கோசர்" (அகம். 90)

"வளங்கெழு கோசர் விளங்குபடை" (அகம்- 205)

"... ... ...வென்வேல்
இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்
இகலின ரெறிந்த அகலிலை முருக்கிற்
பெருமரக் கம்பம் போல" (புறம். 169)

"மெய்ம்மலி பெரும்பூட் கோசர்" (அகம். 15)

"கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்"
(மதுரைக். 773)

"அமர்வீசு வண்மகிழ் அகுதைப் போற்றிக்
காப்புக்கை நிறுத்த பல்வேற் கோசர்" (அகம். 113)

"... ... ...வெல்கொடித்
துனைகா லன்ன புனைதேர்க் கோசர்" (அகம். 251)

என வருபவற்றுல் அறியப்படும்.

இதனுல், கோசர்

"உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அரிது"

என்னுங் குறட்கு (762) இலக்கான மூலப்படையைச் சேர்ந்த அல்லது தொல்வரவான பூட்கைமறவரும், படைத்தலைவரு மாவர்; வேளிர் உழுவித்துண்ணும் வேளாண் வகுப்பைச்சேர்ந்த குறுநில மன்னரும் பண்ணையார் (மிராசுதார்) என்னும் பெருநிலக்கிழாரு மாவார்.

இனி, கோசர், அத்திகோசம் (யானையெறிகோசம்), வீர கோசம் (ஆளெறிகோசம்) என இருவகையராகவும் சொல்லப் பெறுவர். படைக்குச் சிறந்ததும் விலங்கிற் பெரியதும் யானை யென்று கொண்டு, அதனையே போர்க்களத்தில் எறிந்துகொல் வோர் யானையெறிகோசத்தார். அஃது ஒரு விலங்கென்று இழித்து மறவரையே கொல்வோர் ஆளெறிகோசத்தார்.

"கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது" [குறள். 772)

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்" (குறள். 774)

"வேந்தூர் யானைக் கல்ல
தேந்துவன் போலான்றன் இலங்கிலை வேலே"
(புறம். 301)

"கறையடி யானைக் கல்ல
துறைகழிப் பறியா வேலோன் ஊரே"
(புறம். 323)

"ஆனை யாயிரம் அமரிடை வென்ற
மானவனுக்கு வகுப்பது பரணி" (இலக். வி. 839)

என்பன யானையெறி கோசத்தானைப் பற்றியன.

"தானுல் விலங்கால் தனித்தால் பிறன்வரைத்தால்
யானை யெறிதல் இளிவரவால்—யானை
ஒருகை யுடைய தெறிவலோ யானும்
இருகை சுமந்து வாழ்வேன்"
(தொல். புறத்திணை. 5 உரை)

என்பது ஆளெறி கோசத்தானைப்பற்றியது.

இச்செய்யுட்களெல்லாம் தமிழ மறவருட் சிறந்தாரைக் குறிப்பதல்லது, ஒரு வேற்றுநாட்டு வகுப்பாரை விதந்தோ இளந்தோ குறியாமை காண்க.

பிற்காலச் சோழபாண்டியகொங்கு நாடுகளில், பழந்தமிழ்க் கோசரின் வழியினரான கைக்கோளப் படைமறவருள்ளும் தலைவருள்ளும் போர்க்களத்திற் பட்டவரின் குடும்பத்தார்க்கு, இரத்தக்காணிக்கையென்றும் உதிரப்பட்டியென்றும் வழங்கும் மாநிலம் அரசரால் விடப்பட்டமை ஆங்காங்குள்ள கல்வெட்டுக்கள் தெரிவிக்கும்.

இங்ஙனம் கூற்றுடன்று மேல்வரினும் ஆற்றலுடன் பொரும் தறுகண்ணமைப் படைமறவரான கைக்கோளர், 16-ஆம் நூற்றாண்டிற்குப்பின் (சேர சோழ பாண்டியரான) மூத் தமிழரச மரபும் அற்றுப்போனதினாலும், போர்த்தொழிற்கிட மின்மையாலும், பிறப்பொடுதொடர்புற்ற ஆரியமுறைக்குலப்பிரி வினாலும் 'தொல்வரவுந் தோலும்' கெட்டு மறம் என்னும் திற மும் அறவே இழந்துவிட்டனர். அவர் இன்று நெசவுத்தொழிலை மேற்கொண்டிருப்பினும், தமிழ்நாட்டின் தென்பாகத்தில் கைக் கோளர் என்றும் வடபாகத்தில் செங்குந்தர் என்றும் இன்றும் அவர்க்கு வழங்கிவரும் பெயர்கள், அவரின் முன்னோர் நிலைமை யைத் தெற்றெனக் காட்டாநிற்கும். முன்னர்க் கைக்கோளர் படை என்பது மரபாக வழங்கியதுபோன்று, இன்று கைக் கோளர் தறி என்பது மரபாக வழங்குகின்றது. கைக்கோளர் பெயர் என்னுந் தலைப்பில் திவாகரம் கூறும்,

> *"செங்குந்தப் படையர் சேனைத்தலைவர்*
> *தந்துவாயர் காருகர் கைக்கோளர்"*

என்னும் நூற்பா, கைக்கோளரின் பண்டை நிலைமையையும் இற்றை நிலைமையையும் ஒருங்கே உணர்த்தும். தந்துவாயார், காருகர் என்பன நெசவுபற்றி வந்த பெயர்கள். குந்தம் ஈட்டி, செங்குந்தம் குருதியாற் சிவந்த ஈட்டி.

பண்டை வேளிருள்ளும் கோசருள்ளும் இருந்தது போன்றே, முறையே அவரின் மரபினரான வெள்ளாளருள்ளும் கைக்கோளருள்ளும் படைத்தலைவர் இருந்தமையின், இன்றும் அவ்விரு வகுப்பாரின் வழியினரும் குலத்தாரும், முதலியார் என் னும் பட்டத்துடன் அழைக்கப்பெறுகின்றனர். முதலியார் என் பது சேனை முதலியார் அல்லது படைமுதலியார் என்பதன் குறுக் கம். முதலியார் இங்குத் தலைவர். வட கொங்கில் வதியும் அகம்படியர் தமக்கு முதலியார் பட்டம் இட்டுக்கொண்டது பிற் கால வழக்கு. தஞ்சைமாவட்டத்தில் சமணர்க்கு வழங்கும் முதலியார் பட்டம் படைத்தொடர்பின்றிப் பொதுவாகத் தலைவர் அல்லது பெரியோர் என்று பொருள்படுவதே.

கோசரும் கைக்கோளரும் ஒரு வகுப்பாரே என்று முதன்முதற் கூறியவர் பெரும்புலவர் ரா. இராகவையங்காரே. கோசர் தமிழரா வேற்றுநாட்டாரா என்பதுபற்றிமட்டும் கருத்துவேறுபாடுள்ளது. கழகக் காலத்துக் கோசரும் வேளிரும் வடநாட்டின் வெவ்வேறு பகுதியினின்று தென்னாட்டுப் புகுந்தவர் என்பது அவர் கொள்கை. தென்னாட்டுப் பழக்கவழக்கங்கள் வடநாட்டிற் கையாளப்பெற்றமையே, அவர், அங்ஙனம் தலைகீழான முடிபிற்கு வரக்காரணம். தென்னாட்டு மாந்தர் வடநாட்டாரினும் முற்பட்டவர் என்பதை அறிந்திருப்பின், அவர் அங்ஙனம் கொண்டிரார். வடநாட்டிற் கண்ணபிரான் நப்பின்னையை ஏறுதழுவி மணந்ததும், காளிக்கோட்டத்தில் (Calcutta) காளிக்கு எருமைக் கடாவைக் காவுகொடுத்ததும், தென்னாட்டு (தமிழ்நாட்டு) வழக்கங்களே. அங்ஙனமே காசுமீரத்தார் கோசமுறையில் சூளிட்டதும் தென்னாட்டு வழக்கமே. ஆதலால், அதுபற்றிக் கோசரை வடநாட்டினின்று வந்தவர் என்று கொள்வது வரலாற்றுமலைவாம்.

இதுகாறுங் கூறியவற்றால், கடைக்கழகக்காலத்தில் உலக வழக்கில் 'கோளர்' என்றும், செய்யுள் அல்லது இலக்கிய வழக்கில் 'கோசர்' என்றும், இடைக்காலத்திலும் இக்காலத்திலும் இருவகை வழக்கிலும் கைக்கோளர் என்றும், செங்குந்தர் என்றும், பெயர் வழங்கப்பெற்றவர் ஒரு வகுப்பாரே யென்றும், தென்னாட்டுத் தூய தமிழ்ப் பழங்குடிமக்களே யென்றும், தெற்றெனத் தெரிந்துகொள்க.

பண்டைக்காலத்தில், கொல்லேறு தழுவிமணந்த இடையரும் கோளரிக்கும் அஞ்சாக் குறவரும் ஆகிய இரு வகுப்பாரின் வழியினர் ஆரியத்தால் இன்று தம் முன்னோரின் தறுகணாண்மைத் தமிழமறத்தை முற்றும் இழந்திருப்பதுபோன்றே, கூற்றுவனைச் சீறும் கோசரின் வழியினரான கைக்கோளர் செங்குந்தரும் இன்றுள்ளனர் என்க.

பின் குறிப்புக்கள்;

1. 'கோயன்புத்தூர்' என்பது 'கோவன்புத்தூர்' என்பதன் திரிபாகவும் இருக்கலாம். கல்வெட்டுக்களில் உள்ளது 'கோவன்புத்தூர்' என்னும் வடிவமே. வகரம் யகரமாகத் திரிதல் இயல்பு.

   எ. டு: கோவில்—கோயில்.

   இனி, யகரம் வகரமாகத் திரிதலுமுண்டு.

   எ. டு: சேயடி—சேவடி.

இது. கோயன்—கோவன் என்னும் திரிபிற்குச் சார்பாகலாம்.

2. முத்தமிழ் நாட்டிலும் கோசர் இருந்தனர். அவருட் சிலர் துளுநாட்டைக் கைப்பற்றினர். அதனுல் கோசர் நாடு துளுநாடெனப்பட்டது. இது, 'சேரர், கொங்கு' என்பது போன்றதே.

3. அன்னி மிஞிலியின் தந்தை கண்ணை கோசர் ஒருசிலர் பிடுங்கிய கொடுமை பற்றிக் கோசர் எல்லாரையும் அயலார் என்று கொள்ளமுடியாது. வாய்க்காலில் விழுந்த மாங்கனியைத் தின்ற சிறுமியைக் கொன்ற நன்னனும் தமிழனே.

4. செங்குந்தர் குடிப்பிறந்த ஒட்டக்கூத்தர் போன்ற கழகக் காலக் கோசருள்ளும் தமிழ்ப்புலவர் ஒருசிலர் இருந்தனர்.

5. இற்றைக் கைக்கோளரும் செங்குந்தரும் கடுகளவேனும் அயன்மயுடையவரல்லர்; அங்ஙனமே கழகக்காலக் கோசரும்.

6. மோரியப் படையெடுப்பிற்கு முன்பே கோசர் தமிழகத்திருந்தனர். ஆதலால், அவர் மோரியரொடு வந்தவரல்லர்.

எவரோ அவர் தமிழர்!

காடு புகுந்தவ ராயினும் பண்டைக் கவின்மறந்திந்
நாடு கடந்தவ ராயினும் இப்பெரு நானிலத்துள்
ஓடி யுறைபவ ராயினும் உண்மைத் தமிழ்க்குருதி
ஓடு வதென்றே யுரைப்பார் எவரோ அவர்தமிழர்!

கடு அணிமைத்தே!

துரை. மாணிக்கம்.

நெடுந்தொலை விலையே, கடுஅணி மைத்தே:
உடுநீ ராடையிவ் வுலகம் ஒன்றென
பனிக்கல் மிதவைப் பாடகழ்ந் துண்ணும்
நனிக்குற ளொருவனும், நடுமணற் பரவை
நீந்தக லடியுயர் நெடுங்கழுத் தொட்டை
ஏந்துபு புறமுடைத் தின்புன லருந்தும்
பாலை வாணனும், பனிமலை வதியனும்,
நீலலைக் குமரி நெடுங்கரை முகிழ்த்த
முதுகுடித் தமிழனும், மொயநீர் வேலிப்
புதுத்தீ வுயிர்க்கும் புன்குர லொருவனும்,
அறிவறி யாவிருள் அடர்மரக் கான்மிசை
குறிகட வாவெய் கூர்வே லுயிருண
வீழ்மட மாந்தர் வெந்நீ ருறிஞ்சிச்
சூழ்ந்துட லுண்ணும் பாழினத் தொருவனும்
தம்பிறப் பிறந்தே தமக்கு
ளெம்பிறப் பென்னு மினியநன் ஞளே!

உரை.

'உடுத்துள்ள நீராகிய ஆடை தழுவிய இவ்வுலகத்து வாழ் மக்களெல்லாம் ஒன்று' எனுங் கொள்கையராகி, உட்புறத்துக் காண்டலாகிய உணவுச் செல்வங்களுக்காக மிதக்கின்ற பனிக் கட்டியை உடைத்து, உண்டு வாழும் பண்பினராகிய, மிகவும் குட்டையான மாந்தர் இனத்தானும், மணற்கடலாகிய பாலைப் பரப்பின் நடுப்புறத்தே, நீந்திக் கடக்கும் அகன்ற அடிகளையும், உயர்ந்த நெடுமையான கழுத்தையும் உடையதான ஒட்டகத் தின், எடுத்துநின்ற புறமுதுகின் குமிழை உடைத்து, அதனுள் காக்கப்பட்ட இனிமையான நீரை அருந்தும் பண்பினராகிய பாலைநாட்டார் இனத்தானும், பனி தோய்ந்துகிடக்கும் மலைகளில் வாழும் இனத்தானும், நீல அலை தவழும் குமரிமுனையின் நெடு மையான கடற்கரையில் வதியும் தொல்குடித் தமிழனும், சுற்றிலும் சூழ்ந்த நீரே வேலியாகி நிற்க, நடுவில் எழுந்த புதுமையான தீவின்கண் தோன்றிய அடங்கியகுரலையுடைய எளிய மாந்தர் இனத்தானும், அறிவாலும் அறியப்படாமல்

THE DAY IS COMING SOON.

The happy day is coming soon
When all this vast world will be one
And all the people of the earth
No matter what their birth
Will become one family
And live and prosper peacefully.
And on that day
So good and gay,
The Eskimo who digs the ice
To seek his food—the seal or fish,
And the rugged desert—dweller
Who rides across the sea of sand
On his nimble—footed camel
And cuts ope' the camel's hump
To drink the water stored there in,
And the mountain—tribes from snow-capped hills,
And the humble island—folks
And the sure—aimed cannibals
In jungles dark and wild
Where even knowledge connot penetrate
And the ancient Tamil race
Along the shores of "Kumari" thriving,—
All these will come together
Divisions none to bother
And shedding off their origin
Will declare "We're kith and kin"

ஆங்கில ஆக்கம்:

ம. இலெனின் தங்கப்பா. பி. ஏ., பி. டி.

இருள் மண்டி அடர்ந்திருக்கின்ற மரங்கள் நிறைந்த காட்டகத்தே, குறி பிழையாமல் எய்யும் கூரிய வேலானது உயிரை உண்ண, அடியற்று வீழும். அறியாமல் அங்குவந்த மாந்தர்தம் குருதியை உறிஞ்சி, அவரைச் சூழ்ந்து அவர் உடலை உண்ணும் கொடும் பண்புசான்ற இனத்தானும், தம்தம் பிறப்பும், நாடும், பழக்கவழக்கங்களும் கடந்து தமக்குள்ளே ஒருவரை யொருவர் ''எம்பிறப்பு'' என்று கூறிக்கொள்ளும் அந்த இனிய நல்ல நாள் நெடுந்தொலைவில் இல்லையாக, மிகவும் குறுகிய கால எல்லைக்குள் வருவதே!

நரையில் வாழ்வு.

யாண்டு பல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்,
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான்கண் டனையரென் னிளையரும்; வேந்தனும்,
அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழுமூரே.

(புறநானூறு ..191)
(பிசிராந்தையார் பாட்டு)

THE SECRET.

Do you ask how 't i s possible for me
Thus to remain without a single grey hair
E'en at this ripe old age? I will tell you:-
I have a wife a gem of women, and
My sons are finest scholars one and all.
Like wise my servants—all are smart and swift
Prompt at my call; they know my inmost mind.
And more, my country's bless'd with a worthy king
Who a mis feasance never, ne'er commits.
And this my hamlet's full of noble men
Of mature wisdom, learning, power and poise.

ம. இலெ. தங்கப்பா. பி. ஏ., பி. டி.
மொழியாக்க உரிமை: த. கோவேந்தன்.

அடுத்த இதழில்

அறு பருவத் திருக்கூத்து!

தொடர்கின்றது.

நக்கீரர்

நெற்றிக்கண்ணைக்காட்டினும் குற்றம் குற்றமே என்ற தமிழ்ப்பெருமகனார் நக்கீரர் என்று தமிழ்மக்கள் அறிந்துள்ள அளவு அவருடைய செய்யுட்களின் பெருமையை அறிந்திலர் என்று கூறுவது புனைந்துரை ஆகமாட்டாது. நக்கீரர் நெடுநல் வாடை, திருமுருகாற்றுப்படை போன்ற அரிய தொடர்நிலைச் செய்யுட்களை இயற்றியவர் என்பதையும், அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலிய தொகைநூல்களில் வரும் அருமையான செய்யுட்கள் சிலவற்றின் ஆசிரியர் என்பதையும் இன்னும் பெரும்பான்மையர் அறிந்துகொள்ளவில்லை. காரணம் நக்கீரருடைய இனிய செய்யுட்கள் எளிய நடையில் யாவருக்கும் விளங்கக்கூடிய முறையில் அதிகமாக எடுத்து விளக்கப்படாமையே ஆகும்.

நக்கீரர் இக்காலப் பொதுவுடைமையர் கருத்தையொத்த கருத்தினை ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னரே இயம்பிவிட்டார். உலகில் மக்களாய்ப்பிறந்தார் எல்லாம் ஒத்தவர் என்ற கருத்தினையும், அவரவருக்கு இயன்ற வகையில் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டுமென்பதையும், அவரவருடைய தேவைக்கேற்ப ஒவ்வொருவருக்கும் பொருள்கள் கிடைக்கப் பெறுதல் வேண்டுமென்பதையும் நக்கீரர் அன்றே வற்புறுத்தினார். பேரரசு நடாத்திய பெருமையுடையோருக்கும், உறக்கமின்றித் தொழிலை உன்னிப்போடு செய்த தொழிலாளருக்கும் உண்பதற்கு நாழி அரிசியும், உடுப்பதற்கு இரண்டு உடுக்கையுந்தாமே தேவை

பண்டாரகர் அ. சிதம்பரநாதனார், எம். ஏ., எம். எல். சி.,

தலைமை ஆசிரியர், ஆங்கிலத்தமிழ் அகராதித்துறை,
சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை—5.

எனக் கேட்டவர் அவர். மற்றவை எல்லாம் ஒக்குமல்லவோ என்றார். செல்வத்தைப் பெற்றிருப்பதால் பெறும் பயன் ஈதல் அன்றோ என்றார். நாமே அனைத்தையும் தின்று உடுத்தித் துய்த்து மகிழ்வோம் என்று உள்ளவர் உலகில் இழக்கின்றவை பல அல்லவோ என்றார். இக்கருத்து அவர் பாடிய புறநானூற்றுப்

பாடல் ஒன்றிற் காணப்படுகிறது. தலைவி ஒருத்தி தலைவனைப் பிரிந்திருந்த வேளையில் ஏற்பட்ட பசலைநோய் விரைவில் நீங்கத்தக்கதே என்ற கருத்தினை அவர் தெரிவிக்க முற்பட்ட குறுந்தொகைச் செய்யுள் ஒன்றில், கடமை உணர்ந்தவனுடைய செல்வம்போல அவள் பசலைநோய் தங்குதற்கு உரியதன்று எனக்குறிப்பிட்டார். கடமையை உணர்ந்தவன் தன் உடைமையைத் தானும் துய்த்துப் பிறருக்கும் பயன்படுத்துவான். ஆதலால், தன் செல்வப் பொருளைப் புரளவிடுவான் என்பதும், அதுகாரணமாகப் பணம் அவன் கையைவிட்டு நீங்கும் என்பதும், அவன் கையைவிட்டுப் பணம் நீங்குதலைப்போல அவளது நோயும் நீங்கிவிடும் என்பதும் அவரால் அங்கே குறிக்கப்பட்டவை.

அவர் காலத்தில் வாழ்ந்த மக்களது செல்வச் செழிப்பினையும் அவர் சிற்சில பாடல்களில் உணர்த்தியுள்ளார். எடுத்துக்காட்டாக, அகநானூற்றில் வரும் பாடல்களைக் குறிப்பிடலாம். அச் செய்யுட்களுள் ஒன்றனுள் அவர் பாண்மகள் ஒருத்தியைப்பற்றிக் கூறுகின்றார். அவள் தன்னுடைய தந்தையார் காலை நேரத்திற் பிடித்துவந்து தந்த பெரிய கொம்பினையுடைய வாளைமீனை விற்கச் செல்கிறாள் என்றும், விற்றவகையில் கிடைக்கவேண்டிய பணத்தைப் பெருந்தொகையாக்கிப் பெறுகிறாள் என்றும் அவர் கூறியுள்ள கருத்திலிருந்து பல்வேறு இனக்கருத்துக்கள் கிளைக்கின்றன. அவளோ அழகிய சொற்களைச் சொல்லும் பாண்மகள். அவள் தெருவே செல்லும்பொழுது அவள் வயிறு தெரியும்படி ஆடை சரிந்து கிடக்கிறது. அவ்வயிற்றின் அழகிலிருந்து அவள் முழு அழகினை ஓர்ந்துகொள்ளுதல் கூடும். அவள் செல்லும் தெருவோ நீண்ட கொடிகள் அசையும் பெரிய தெரு. அந்தத் தெருவில் கள்விற்போர் நிறைய உளர். அந்தத் தெருவழியே செல்கிறவள் வாளைமீனை விற்றுக் கள்ளைக் கொள்ள விரும்பாமல் மேலே கடந்து செல்கிறாள் என்ற குறிப்பு பாட்டின்கண் உள்ளது. அத்தெருவில் பழைய செந்நெல்லைக் குவித்து நிறைய வைத்திருப்பவர் உண்டு. அவர்தம்மிடம் வாளை மீனை விற்று நெல்லைத் தன் அன்றையத் தேவைக்கென வாங்காமல் திரும்புகிறாள் என்ற குறிப்பும் இங்கே இருக்கிறது. அதனால், அவள் இயல்பாகவே செல்வம் ஓரளவுடைய ஒரு குடியைச் சார்ந்தவள் என்பதும், அன்றன்றையத் தேவைக்கு நெல்லைப்பெற்று வரவேண்டிய நிலையில் உள்ளவள் அல்லள் என்பதும் குறிக்கப்படுகின்றன. இவற்றிற்கு மாறாக அவள் அரும்பெறல் முத்துக்களைப் பெற்றுத் திரும்புகிறாள். ஒவ்வொரு முத்தின் விலையோ அதிகம். ஒரு முத்தினைப் பெறுதற்குரிய அளவு வாளைமீனை அவள் நாள்தோறும் விற்கவில்லை எனினும், சில நாட்கள் வாளைமீனை ஒரே வீட்டில் சேர்த்துச் சேர்த்துக் கொடுத்துப் பணத்தை நிறுத்தி வைத்திருக்கிறாள். ஆதலால், சில நாட்கள் கழிந்த பிற்பாடு முத்துக்களோடு

நல்ல அணிகலனைப் பெறக்கூடிய அளவிற் சேமிப்புச் செய்யக்கூடிய அளவு தகுதியும் மனவுறுதியும் அவள் உடையவள் என்பது எத்துணை நயம்படப் புலவர் நக்கீரரால் காட்டப்பட்டுள்ள தென்பதை அடியில் வரும் அகநானூற்றுப்பகுதி காட்டும்;

"... ... ... தன் ஐயர்
காலைத் தந்த கனைக்கோட்டு வாளைக்கு
அவ்வாங்கு உந்தி அஞ்சொல் பாண்மகள்
நெடுங்கொடி நுடங்கும் நறவுமலி மறுகில்
பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்
கழங்குறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்
பயங்கெழு வைப்பு... ... ..."

சில சொற்களாற் பல அரிய கருத்துக்களைப் பெரும்புலவர் அமைத்துத் தந்துவிடுவர் என்பதன் உண்மை இப்பாடற் பகுதியால் நன்கு வெளியாகிறது. "அவ்வாங்கு உந்தி அஞ்சொற் பாண்மகள்" என்ற சில சொற்களால் ஓர் அழகிய, தேனூறும் சொல் பேசுகின்ற ஒரு வடிவத்தை நம் கண்முன்னே புலவர் உருவாக்கிவிட்டார். "நெடுங்கொடி நுடங்கும் மறுகு" என்றமையால், இன்னின்ன பொருள் இந்த இந்தக் கடையில் விற்கப்படுகிறது என்பதை விளக்கிக்காட்டும் பெருந்தெரு ஒன்றனுள் அவள் செல்கிறாள் என்பது குறிக்கப்பட்டுள்ளது. "நறவுமலி மறுகில்" என்றமையால், எத்தனையோ பலர் தாளாற்றிய பொருள் கொண்டு கள் குடித்துச் சென்றார் ஆக, அவள் உரநெஞ்சுடன் அக்கடைகளுள் எதனையும் எட்டிப்பாராமல் நெடுகச் செல்கிறாள் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. "பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்" என்று கூறிய வகையால், நகர மாந்தரின் செல்வச் செழிப்பும் பற்றாக்குறையின்மையும் எடுத்து இயம்பப்பட்டது. கழங்கினை ஒத்த ஆணிமுத்துக்களையும் நல்ல அணிகலன்களையும் அவள் பெறுகின்ற அளவு பயன் நிரம்பிய ஊர் அது என்பதை எவ்வளவு இனிமையாக இப்பகுதியில் இப்புலவர் மொழிந்துள்ளார் என்பதை நினைத்து நினைத்து இன்புறுதல்கூடும்.

அக்கால மக்கள் எதற்காக உடல் உழைப்பு உடையவராக இருந்தனர் என்பதை இவர் ஒரு பாட்டில் விளக்கி உள்ளதை நாம் இன்றும் கண்டு பின்பற்றிச் செயலாற்றுதல் கூடும். ஒருவர் தொழிலைச் செய்வது எதற்காக? உறவினர் வறுமை உடையவராய் இருப்பின், அவர் தம்மின் வறுமையைப் போக்கி அவரைத் தாங்கும் பொருட்டும், உற்றார் உறவினர் குடும்பத்தார் அனைவரையும் வயிறார உண்ணுவிக்கும்பொருட்டும், நட்பும் பகையும் கொள்ளாமல் நொதுமலராய் உள்ளவரைத் தம் வயப்படுத்தி நண்பராக

ஆக்கிக் கொள்ளும்பொருட்டும் ஒருவர் பொருள் ஈட்டும் முயற்சியில் ஈடுபடவேண்டும் என்ற கருத்தினை அகநானூற்றுச் செய்யுள் ஒன்றனுள் அமைத்து இவர் பாடியுள்ளார்.

அப்பாட்டினுள், தலைவி ஒருத்தியின் நெற்றியின் மணத்திற்கு உவமையாக அவர் கூறியது ஒன்று நினைக்கத்தக்கது. பகல் அங்காடியின் நறுமணம்போல அவள் நுதல்மணம் இருந்ததென்று குறிப்பிட்டுள்ளார். பாண்டிய மன்னனுடைய மதுரையம்பதியிலுள்ள நாளங்காடியின் நறுமணம்போல் அவள் நெற்றியின் விரை உள்ளது என்று கூறி இருப்பதுகொண்டு எவ்வளவு துப்புரவாக அங்காடிவீதியை அக்காலத் தமிழக மக்கள் பேணினர் என்பது எண்ணத்தக்கது.

இன்னொரு தலைவியைப்பற்றி இவர் வேறொரு அகநானூற்றுப் பாட்டிற் பேசியுள்ளார். அவள் செல்வத் தாய்வீட்டில் திருமணம் செய்துகொள்ள விரும்பாமல், தலைவனுடைய சிறிய ஊரில் அமைந்த சிறு குடிலிற் போய்ப் பொருந்திய செய்தியை நினைந்து கூறுகின்ற செவிலித்தாயின்கூற்றுப்போன்று அமைந்த அகநானூற்றுச் செய்யுளில், அவளுடைய தலைவன் வறியவன் எனினும் இவளைப்பெறுதற்கு உரிய பெருந்தகுதி உடையவன் என்பதைப் புலப்படுத்தி, சிறப்பும் சீரும் அச்சிற்றூர் பெற்றிரா விட்டாலும் அவளோடு பொருந்திய உழுவல் உள்ளத்தையுடைய அத்தலைமகனுக்கு அவள் பொருந்தியவள் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். தலைவியினுடைய தாய்வீடு செல்வம் கொழிக்கும் வீடு ஆயினும், ஆங்குத் தங்க விரும்பாமல் தலைவி புல் வேயப்பட்ட தலைவனுடைய சிறு குடிசையில் வாழ்வதையே பெரிதாக மதித்தாள் என்பதையும் புலப்படுத்தியுள்ளார். ஒற்றைத் தூணையுடைய முற்றத்தோடு கூடிய வீடு அது; ஒரே ஓர் ஆன் கட்டப்பட்டுள்ள வீடு அது; பெரும்பொருள்கள் இல்லாத வறுமனை அது. இருப்பினும், அவ்வீட்டினை உறைவிடமாகக் கொள்வதில் மகிழ்ச்சியெய்தினள் அத்தலைவி என்பதை அழகுற அச்செய்யுள் காட்டுகின்றது. அத்தலைவி தலைவனுடைய வீடு செல்வதற்குமுன் வருந்தி இருந்ததொரு நேரத்தில் இயற்கைப்பொருட்களிற் சில அவளோடு கலந்து உறவாடி எவ்வாறு வருந்தி இருந்தன என்பதைப் புலவர் சுட்டிக்காட்டி இருக்கும் அழகினை ஆங்கில ஆய்வுரையாளரோ வடமொழி ஆய்வுரையாளரோ காணின், வியப்புற்றுப் பாராட்டுவர் என்பது உறுதி. தலைவனுடைய வருத்தத்தைப் பிற பொருள்களின்மேல் சார்த்தி உரைத்திருக்கும் பாத்திறம் நினைக்குந்தொறும் நினைக்குந்தொறும் இன்பம் விளைவிக்கிறது.

"... ... ... செந்தார்க்
கிள்ளையுந் தீம்பால் உண்ணா, மயிலியற்
சேயிழை மகளிர் ஆயமும் அயரா,
தாழியும் மலர்பல அணியா"

என்ற பகுதியில், தலைவியின் வருத்தத்தை நோக்கிக் கிளிகளும் பால்குடிக்கவில்லை என்பதையும், உடனிருந்ததோழியர் விளையாட முற்படவில்லை என்பதையும், பூந்தாழ்களில் மலர்கள் பூக்கவில்லை என்பதையும் புலவர் சொல்லியுள்ளார். இவ்விடத்தில், கிளிகளின் கழுத்தில் மாலைபோன்ற அழகுடை வண்ணம் உண்டு என்பதை யும், பால் மிகவும் இனியதாக இருந்தும், கிளிகள் தலைவியின் துயர் காரணமாகத் துயருற்றுப் பால் அருந்த விரும்பவில்லை என்பதை யும், அவளுடைய தோழிமார் அனைவரும் மேனியழகும் சாயலும் செல்வக்கொழிப்பும் உடையவர் என்பதையும் புலவர் எத்துணை அழகுபட உரைத்துள்ளார்! இவற்றிற்குமேல், ''தாழியும் மலர் பல அணியா'' என்று இவர் கூறிய இடத்தில், இயற்கைப் பொருட்களிற் புலவருக்கு உள்ள ஈடுபாடு இனிதின் விளங்குகின் றது. பூஞ்செடிகளுடைய மண்சட்டிகள்கூட தலைவியின் நோய் காரணமாக மலர் அணிய விரும்பவில்லை என்றவாறு இவர் உரைத் திருக்கிற திறம் வியக்கத்தக்கது! இப்பாடலை அகநானூற்றில் 369–ஆம் பாடலாகக் காணலாம்.

திருமுருகாற்றுப்படையில்,

''*மாலை மார்ப! நூலறி புலவ—*
செருவில் ஒருவ! பொருவிறன் மள்ள!
அந்தணர் வெறுக்கை! யறிந்தோர் சொன்மலை!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
... ...
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக!
நசையுநர்க் கார்த்தும் இசைபே ராள!
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்!
மண்டமர் கடந்தநின் வென்று டகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்!
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்!''

நக்கீரர் முருகனைப் பரவுதலாகப் பாடியுள்ள பகுதி இன்று தமிழ் மறைமொழி போல் சொல்லிப் பரவுதற்கு உரியதாக உள்ளது என் பது குறிப்பிடத்தக்கது. ''மாலைமார்ப'' என்று சொல்லி ஒரு பூவினையும், 'நூலறிபுலவ'' என்று மொழிந்து இன்னொரு பூவினை யும், பிறபிற சொற்றொடர் ஒவ்வொன்றையும் இயம்பி ஒவ்வொரு பூவினையும் சூட்டலாம் அன்றோ!

நெடுநல்வாடையில் ஐப்பசி, கார்த்திகை மாதங்களாகிய கூதிர்க்காலத்தைப்பற்றி இப்புலவர் மொழிந்துள்ள பகுதி இன் றும் ஒத்திருக்கக் காண்கிறோம். பெரும்பனி நலிய வாட்டு தலையும், பலர் கொள்ளிக்கட்டை கொண்டு தீக்காய்வதையும், மக்களுடைய தாடை புடைத்துக்கொண்டு அடித்துக்கொள்

வதையும், விலங்குகள் மேய்ச்சலைக்கூட மறந்து கிடப்பதையும், பறவைகள் செயலற்று மடிந்துவீழ்வதையும், கறவை ஆக்கள் கன்று முட்டிப் பால்கொள்வதைத் தவிர்க்க முற்படுவதையும், புலவர் அழகுற எடுத்து இயம்பியுள்ளார். குன்றே குளிர்ந்து வந்தால் ஒத்த கூதிர்க்காலம் அது என்று இவர் கூறியுள்ளார். அப்பகுதி நேரில் கண்டு இன்புறத்தக்கது. தலைவனைப் பிரிந்திருக்கின்ற தலைவி தன் பிரிவுத்துயரால் வருந்துகிறவள் கண்ணிலிருந்து தோன்றுகின்ற நீர்த்துளிகளைச் செவ்விய விரல்களால் அழித்துத் தெறிக்கின்ற நிலையையும், செயல்மேற் கொண்டு வினைக்களம் சென்றுள்ள தலைவன் நள்ளிரவிலும் பள்ளி கொள்ளாமல் வினை செய்திருந்த திறத்தினையும் புலவர் விளக்கியுள்ள வகையை நெடுநல்வாடை நூலைக்கொண்டே அறிதல் வேண்டும்.

நக்கீரர் செய்யுட்களைப் படிக்கப்படிக்கத் தமிழ் இன்பத்தில் ஒருவர் மாழ்குவர் என்பது திண்ணம்.



பாட்டு

வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் நம்முடைய நினைவுகளெல்லாம் உணவு தேடுதலிலும், பொருள்தொகுப்பதிலும், மனைவி மக்கட்கு வேண்டுவன திரட்டிக்கொடுத்தலிலும், பிறர் இட்ட ஊழியஞ் செய்தலிலுமாகப் பலவாறு சிதறி அருமைபெருமை இன்றிக் கொன்னே கழிந்து போகின்றன......... இவ்வாறு கழியும் வாழ்நாள் என்கின்ற நீரோடையிலே, வறு நினைவுகளான கலங்கற் பெருநீர் பெருகிச் செல்லும்போது, உலக இயற்கையென்னும் மலைமுழைஞ்சுகளிலே அரித்து எடுத்துவந்த அருங்கருத்துக்களான பொன்துகள்கள் இடையிடையே ஆழ்ந்து அவ்வோடையின் அடிநிலத்திற் சிதர்ந்து மின்னிக்கிடப்ப, நல்லிசைப் புலவன் என்னும் அரிப்புக்காரன், மிக விழைந்து முயன்று, அப்பொற்சிதர்களை யெல்லாம் ஒன்ருகப் பொறுக்கியெடுத்துத் தன் மதிநுட்ப நெருப்பிலிட்டு உருக்கிப் பசும்பொற் பிண்டமாகத் திரட்டித் தருவதே பாட்டு என்று அறிதல் வேண்டும். — மறைமலையடிகள் —

பொறுத்திருப்பாய்

"பொங்கல்விழா வந்ததென்று தமிழ ரெல்லாம்
புதுக்களிப்புக் கொள்கின்றார் வீடு தோறும்;
நங்கையர்தம் கணவரொடு மகிழு கின்றார்;
நான்மட்டும் தனித்திடவா, அத்தான்?" என்றே
இங்கெனக்கு நினைவூட்ட எழுதி விட்டாய்!
எனக்கிதனை எடுத்துரைத்தல் வேண்டும் போலும்!
அங்கொருத்தி நீதானா தனிமை யுற்றாய்?
ஆருயிரே உனைப்பிரிந்து வேகின் றேன் நான்.

கடந்தநாறும் பொங்கலிலே ஒன்றி வாழ்ந்தோம்.
காதலெனும் களிப்பில்நமை மறந்தி ருந்தோம்;
நடந்தவற்றில் வியப்பில்லை அன்பே, வாழ்வில்
நச்சுமனம் படைத்தவரோ எங்கும் உள்ளார்.
இடந்தானே மாற்றங்காண்; கண்ணே, மற்றிங்(கு)
என்னுளத்தில் நீயுள்ளாய் உன்னுள் ளத்துள்
அடங்கியிருக் கின்றேன்நான் அதுவே போதும்!
அடுத்துவரும் பொங்கல் நமக் குரிமை யாகும்!

பொருள் தேடப் பிரியவில்லை; தமிழர் நாட்டுப்
போர்நினைந்தும் பிரியவில்லை; சாதி என்னும்
மருள்தேடுந் தமிழ்க்குலத்தின் மடமை முள்ளில்
மாட்டிவிட்ட நம்வாழ்வின் சிக்க லுக்கோர்
தெருள்தேடப் பிரிந்துள்ளேன்! புரிவா யன்றோ?
தேனல்ல, கண்ணல்ல! பொறுத்தி ருப்பாய்.
இருள்தேடி வந்திடினுங் கதிரே வெல்லும்;
எழில்தமிழர் பொங்கல்இதை உணர்த்திற் றன்றே!

ம. இலெனின்தங்கப்பா, பி.ஏ., பி.டி.

தமிழர் காதல் வாழ்வு

கழகக் காலம்

இற்றைக்கு ஏறத்தாழ ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட காலம் கழகக் காலம் எனப்படும். அக்காலத்தில் சேர, சோழ, பாண்டியர் என்ற தமிழரசர் தமிழகத்தை ஆண்டு வந்தனர். தமிழ்மொழி ஒன்றே இந்நாட்டில் சீரும் சிறப்பும் பெற்று வந்தது. மன்னர் இந்நாட்டவராதலால் குடி மக்களைக் கண்ணும் கருத்துமாகக் காத்துவந்தனர்; பயிர்த்தொழிலுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்தனர், கைத்தொழில்களை ஊக்கினர்; வாணிகத்தை வளம்பெறச் செய்தனர்; தொழிலில் சிறந்த வணிகருக்கு 'ஏனாதி' போன்ற பட்டங்களும் பரிசுகளும் வழங்கினர்; நாட்டில் எல்லோரையும் கல்விகற்கத் தூண்டினர்.

அரசர் இங்ஙனம் அறவழியில் நாடாண்ட காரணத்தால், அரசன் முதல் ஆண்டி ஈறாக இருந்த ஆடவர் பெண்டிர் அனைவரும் கல்வி கற்றனர். இன்று மக்களினத்தில் பிற்பட்டவர் எனக் கருதப்படும் குறவன் — குறத்தி, பாணன் — பாடினி, வேட்டுவன் — வேட்டுவச்சி, குயவன் — குயத்தி, முதலியோர் பாடல் பாடும் ஆற்றல் பெற்று மன்னரால் மதிக்கப்பெற்றனர், என்பது கழக நூல்களால் தெரிகின்றது. வளமனையைக் காவல் காத்த காவற்பெண்டும் அக்காலத்தில் பாடல்களைப் பாடினுள் எனின், கழகக் காலக் கல்வி நிலையை என்னென்பது!

களவு வாழ்க்கை

இங்ஙனம் கல்வி நலம் சிறந்திருந்த கழகக் காலத்தில் பெரும்பாலான திருமணங்கள் காதலையே அடிப்படையாகக் கொண்டவை. இக்காதலுக்கு ஏற்றவை மலையும் மலைசார்ந்த இடமுமாகும். இதனால் ஏனைய நிலங்களில் காதல் நிகழவில்லை என்பது கருத்தன்று. மணப் பருவத்தையுடைய ஒருவனும் ஒருத்தியும் தம்முள் எதிர்ப்பட்டு உள்ள நெகிழ்ச்சி அடைவதே **'காதல்'** என்று சொல்வது. இங்ஙனம் நேர்ப்பட்ட இருவர் அடிக்கடி பகலிலும் இரவிலும் கூடிப் பழகுவர். இப்பழக்கம்

மா. **இராசமாணிக்கனார். எம். ஏ., எம். ஓ. எல்,**

தோழனுக்கும் தோழிக்குமே தெரிந்திருக்கும். இவ்வாறு தலைவனும் தலைவியும் நெருங்கிப் பழகப் பழக, ஒருயிரும் ஈருடலாம் தன்மையை அடைவர். இங்ஙனம் இருவரும், இருதிறப் பெற்றோரும் அறியாவகையில் கொள்ளும் உறவு களவு எனப்படும். இக்களவினை அறியாத பெண்ணின் பெற்றோர் அவளுக்கு மணம் பேச முற்படுவர்.

இதனை அறிந்த தோழி, களவை இனிமையாக வெளிப்படுத்துவாள்; "தலைவியும் நாங்களும் மலர் கொய்துகொண்டிருந்த போது, எட்டாத மரக்கிளையிலிருந்த பூங்கொத்து வேண்டுமென்று தலைவி விரும்பினாள். அப்பொழுது அங்குத் திடீரென்று தோன்றிய அழகிய இளைஞன் ஒருவன் மரத்தின்மீது ஏறித் தலைவி விருப்பிய பூங்கொத்தைப் பறித்துத் தலைவியிடம் கொடுத்தான். தலைவி அவனை நன்றியறிதலோடு நோக்கினாள்." என்று தோழி கூறுவாள்.

சில பொழுதுகளில் "நாங்களும் தலைவியும் சுனையில் நீராடும்பொழுது, தலைவி கால்வழுக்கிச் சுனைப்புனலில் விழுந்துவிட்டாள். அப்பொழுது நாங்கள் அலறினோம்; அக்காலை கட்டழகு உடைய இளைஞன் ஒருவன் அங்குத் தோன்றினான். அவன் திடுமெனச் சுனையிற் குதித்துத் தலைவியைக் காப்பாற்றினான். இங்ஙனம் தன் உயிர்காத்த சிறந்தவனுக்குத் தலைவி நன்றி செலுத்தினாள்," என்று சொல்லுவாள்.

அவள் சில நேரங்களில், "நாங்களும் தலைவியும் தினைக் கொல்லையருகில் விளையாடிக்கொண்டிருக்கையில், மதம்பிடித்த களிறு (ஆண் யானை) யொன்று பிளிறிக்கொண்டு வந்தது. நாங்கள் அஞ்சி அலறினோம். தலைவி எங்களைவிட மிகுதியாக அலறினாள். அப்பொழுது வேலேந்திய மறவன் ஒருவன் அங்குத் தோன்றினான். அவன் உடனே தலைவியைத் தன் இடப் பக்கத்தில் தழுவிக்கொண்டு, தன் வலக்கையிலிருந்த வேலை யானையின் துதிக்கையிற் பாய்ச்சினான்; குத்துப்பட்ட இடத்திலிருந்து வெளிப்பட்ட குருதி, அம்மறவனின் வலப்பக்கம் பட்டுச் செந்நிறம் ஆக்கியது. தலைவியின் மையுண்ட கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் கருநிறமடைந்தது. அந்நிலையில் அவன், உமையம்மையை இடப்பாகத்தில் கொண்ட சிவபெருமான் போலக் காட்சியளித்தான். அன்றுமுதல் தலைவி தன் உயிரைக் காத்த அம்மறவனை அடிக்கடி நினைக்கின்றாள்," என்று மொழிவாள். இவை மூன்றும் முறையே பூத்தரு புணர்ச்சி, புனல் தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி எனப்படும்.

இவ்வாறு தோழி தலைவியின் காதலை இம்மூன்று நிகழ்ச்சிகளில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு விளக்காமல் விளக்குவாள். இங்ஙனம் புலப்படுத்துவது **அறத்தொடு நிற்றல்** எனப்படும். இதனை உணர்ந்த நற்றாய் தன் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் தெரிவிப்பாள். அவர் திருமணத்திற்கு ஏற்பாடு செய்வர். இதற்கிடையில் தலைவன் முயற்சியால் அல்லது தோழன் முயற்சியால் அவனுடைய பெற்றோர் மணம் பேசச் செல்வர்.

சில காலங்களில் பெண்ணின் பெற்றோர் மகளது காதலை அறியாது வேறு மண முயற்சியில் ஈடுபடுவராயின், தலைவி தலைவனோடு சென்று விடுவாள். இது **உடன்போக்கு** எனப்படும். பெண்ணின் தந்தையும் சுற்றத்தாரும் உடன்போக்கினை வழியில் தடுக்க முயல்வர். அப்பொழுது தலைவி தலைவனைச் சார்ந்து இருப்பின், அவளைச்சேர்ந்தவர் காதலரை அழைத்துவந்து மணம் முடிப்பார்; சில சமயங்களில் மணமகள் வீட்டில் திருமணம் நடைபெறுவதும் உண்டு.

கற்பு வாழ்க்கை

இங்ஙனம் நடைபெற்ற களவுக்குப் பின்னர்க் காதலர், பலர் அறிய இல்வாழ்க்கை நடத்துவர். காதல் அடிப்படையில் அவர் திருமணம் நடைபெற்றதால் ஓருயிரும் ஈருடலுமாக அவர் வாழத் தொடங்குவர். ஒத்த உள்ளமும், ஒத்த செயலும், ஒத்த பண்பும் அவர் தம்மிடையே காணப்படும். கோவலன் மணம் செய்துகொண்ட புதுமையில் கண்ணகியைப் பாராட்டியவாறு, கணவன் மனைவியின் நலன்களைப் பாராட்டி மகிழ்வான்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, அன்பையும் அறனையும் வாழ்க்கையில் அக்காதலர் உணர்த்துவர்.

இங்ஙனம் வாழ்க்கை நடைபெறும்பொழுது தலைவன் உயர்கல்விக்காகத் தலைவியை விட்டுப் பிரிவான்; தொழிலுக்காகப் பிரிதலும் உண்டு; நாட்டின் நலத்துக்காகப் பிரிதலும் உண்டு; சிற்சில காலங்களில் பரத்தை காரணமாகவும் பிரிவான். பிரிவு தலைவிக்குத் தாங்க முடியாது எனினும், அவனது பிரிவு நன்னோக்கம் உடையதாயின், தன் அறிவுகொண்டு ஆற்றியிருப்பாள்.

அவன் பரத்தையின் பொருட்டுப் பிரிவானாயின், அப்பிரிவு அவளை வருத்தும். அவள் அவனை நன்முறையில் திருத்த முயல்வாள். அவன் தன் தவறான ஒழுக்கத்தை மறைக்கப்

பொய் பேசுவான்: "தலை தொட்டேன் தண்பரங்குன்று" என்று ஆணை யிடுவான். தலைவி நகைப்பாள்; "பெருமானே, உனது தவறான ஒழுக்கம் பலருக்கும் தெரிந்துள்ளது. கதிரவனது ஒளியைக் குடைகொண்டு மறைக்க இயலாததுபோல, ஒரு பொய் கொண்டு உனது தகாதசெயலை மறைக்க முடியாது. இச்செயல் சிறுவர் செயல் போன்றது. உன்னை இந்நிலையில் காணும் பெரியோர் நகைப்பரே!" என்று இனிமையாக இடித்துரைப்பாள்.

அவன் திருந்தவில்லையாயின், அவள், "எனது வாழ்க்கை பயனற்றது ஆதலால் இறக்க விரும்புகின்றேன். அங்ஙனம் இறந்து வேறு பிறவி எடுக்க நேரின், உனது நினைவு வருமோ—வராதோ என்று அஞ்சுகின்றேன்; இந்த ஐயத்தினால் இறக்க அஞ்சுகின்றேன்;" என்று உருக்கமாகக் கூறுவாள், அவள் மேலும், "இப்பிறப்பில் நாம் ஒன்றுபட்டு வாழமுடியாவிடினும் மறுபிறப்பிலேனும் ஒன்றுபட்டு வாழ விரும்புகின்றேன். உன் மனத்திற்கு ஏற்ற மனைவியாக அடுத்த பிறவியிலேனும் யான் அமைவேனாகுக," என்று உள்ளம் கரைய உரைப்பாள்.

இச்சொற்கள் எத்தகைய ஒழுக்கக்கேட்டினையும் திருத்தி விடும் அல்லவா? இவ்வளவுக்கும் உள்ளம் இளகாது, கொடியவனாக இருப்பின், தலைவி அவனொடு ஊடல் கொள்வாள். தலைவன் அவளது ஊடலைத் தணிக்கப் பல வழிகளிலும் முயல்வான். ஊடலால் பேசாத இருவரும் உறவினர் வந்தவுடன் பேசுவர்; விருந்தினர் வந்தவுடன் பேசுவர்; பெற்றோர் வந்தவுடன் பேசுவர். அறவோர் முதலிய சான்றோர் வரினும் பேசுவர். தலைவன் தெருவில் விளையாடும் தன் மகனை எடுத்துக்கொண்டு வீட்டினுள் நுழைவான்; மகன் காரணமாகவும் ஊடல் நீங்கும். உணவுக்கு உப்புத் தேவைப்படுதல் போல இல்லற இன்பத்திற்கு **ஊடல்** இன்றியமையாதது என்பது வள்ளுவர் கருத்து.

இங்ஙனம் பரத்தையரிடம் எல்லா ஆடவரும் பழகிவந்தனர் என்று நினைப்பது தவறு. சிறுபான்மையோர் அப்படி ஒழுகினர் என்று கொள்வதே பொருத்தமாகும். பழந்தமிழர் தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம், தான் என்னும் ஐவகையினரையும் புரந்து வந்தனர்; இதுவே தம் அறமாகக் கொண்டனர்; விருந்தனரை வரவேற்று ஓம்புதலையே பேரறமாகக் கருதினர். அரசமாதேவியரும் தம் கணவர் அரண்மனையில் இல்லாதபொழுதும் புலவரையும் பாணரையும் கூத்தரையும் வரவேற்று விருந்தளித்தனர்.

புலவர் தாம் வள்ளல்கள்பால் பெற்ற பொருளைக் கொண்டுவந்து தம் மனைவியரிடம் கொடுத்தனர். "உன்னை விரும்

பியவர்க்கும், நீ விரும்பியவர்க்கும்' உனக்குத் தேவைப்பட்ட போது உதவியளிக்கும் சுற்றத்தார்க்கும் பிறர்க்கும் இப்பொருளை உதவுவாயாக. 'நமக்கு வேண்டுமே' என்றுவைத்துக்கொள்ள வேண்டா, என்று அறிவுறுத்தினர். அம்மகளிரும் அங்ஙனமே பிறர்க்கு வழங்கி மகிழ்ந்தனர்.

இறைநெறியின் அடிப்படை

இங்ஙனம் இல்வாழ்க்கையின் அடிப்படையாகிய காதலே—பின்தோன்றிய இறை நெறிக்கும் அடிப்படையாக அமைந்தது. கழகக் காலத்துக்குப்பின் வந்த நாயன்மாரும் ஆழ்வாரும் தம்மைத் தலைவியாகவும் இறையைத் தலைவனாகவும் வைத்துப் பாடல்களைப் பாடினர். உயிர்கள் இறையை அடைவதற்கு இக்காதல் வாழ்க்கை முதற்படியாக அமைந்திருக்கிறது என்று அவர் கருதினர்.

தமிழரினம்

பண்டு ஒருமொழி பேசிய ஒருமக்கட் பெருங் கூட்டமாயிருந்த தமிழரே, இப்போது தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளுவம், குடகம், தோடம், கோடம், கோண்டம், கொண்டம், ஓரம், இராசமாலம் முதலான பண்டுமொழி பேசும் பல்வகை மக்கட் பிரிவினர் ஆயினர்.

— மறைமலையடிகள் —

"அழிவீர் நீரே!"

-(அ. ப, விந்தைவேலன்)-

1 இனிமையெனுந் தமிழ்த்தாயே! அமிழ்தே! ஊற்றே!
இன்பத்தின் பிறப்பிடமே! எழிலே! அந்நாள்
தனிமையிலே அரசிருந்திவ் வுலகம் ஆண்ட
தனிப்பொருளே! பொருண்முதலே! கனியின்
சாறே!
பனிமலையின் உயர்புகழோ டுயர்ந்து வாழும்
பண்ணமைந்த முழுநிலவே! உயிரே! அன்பே!
தனிமையிலே உனைப்பிரிந்தீங் கினியும் வாழ்தல்
தகுவதுவோ? உயிர்பிரிந்தால் உடல்வா ழும்மோ?

2 மயக்குமொழி மடவார்மேல் அரவ ணைப்பும்
மட்டுவெறி மாஞ்சோலைக் குயிலின் பாட்டும்
இயக்குகின்ற கிளிமொழியும் உடலைத் தீண்டி
இன்பவுணர் வெழுப்புகின்ற தென்றற் காற்றும்
உயக்குநடை பயின்றெங்கும் அமிழ்தம் பாய்ச்சும்
உயிர்த் திருவாம் மழலைமொழிச் சேயும்
வேண்டேன்!
தயக்கமறக் கூறிடுவேன் நீயே வேண்டும்;
தனிமையிலே தமிழ்சுவைக்கும் பேறே வேண்டும்!

3 தனித்தமிழின் சுவையுணரா அறிஞர் சில்லோர்
தமிழ்த்தாயைப் படுகுழியில் வீழ்த்தி வேற்றுத்
துனிமொழியைக் குழைத்தெழுதி அதுவே எந்தம்
தூயதமிழ்; பாரீரோ என்பர் தாபால்!
குனிந்ததலை உடையோராம் அவர்க்குச் சொல்வேன்;
குட்டுதற்குக் குனியாதீர்; நிமிர்வீர்! இன்பத்
தனித்தமிழின் மணமுணர்ந்து நுகர்தல் விட்டுத்
தாய்மொழியை அழித்தீரேல் "அழிவீர் நீரே!"

துனிமொழி : இடர்மொழி.

பரிமேலழகர் உரைத்திறன்

சி. பத்மாவதி, எம். ஏ

தமிழ்நாடு செய்த நற்பயனாய்த் தோன்றிய நம் திருவள்ளுவர் கலைக்கண்கொண்டு நோக்கிப் பாடல்களாக்கொண்டு உரைத்த திருக்குறள் என்னும் விழுமிய நூற்கு உரைசெய்தவருள் பரிமேலழகரும் ஒருவர் ஆவர். இந்நூல் பலர் உள்ளத்தையும் கவர்ந்த சிறப்பினதாய் இருந்தது என்பதற்குப் பரிமேலழகர் காலத்திலேயே ஒன்றுக்குமேற்பட்ட உரைநூல்கள் எழுந்தமையே சான்றும். 'பிறரெல்லாம் இவ்வாறுரைத்தார்' என்று அவரே தம் நூலில் ஆங்காங்குக் குறிப்பதாலும் பலஉரைநூல்கள் இருந்தமை பெறப்படும். அவற்றுள் அவர்தம் உரையே பல இனிமைகள் அமைந்து விளங்கும் அழகுவாய்ந்தது என்பது.

—நூலில்

பரித்தஉரை யெல்லாம் பரிமே லழகர்
தெரித்தஉரை யாமோ தெளி

என்ற சிறப்புப் பாயிரத்தால் நன்குவிளங்கும்.

திருவள்ளுவர் தம் உள்ளத்தெழுந்த கருத்துக்களைக் குறள் வெண்பாவின் துணைக்கொண்டு வெளிப்படுத்த, அவற்றைப் பரிமேலழகர் நுண்ணறிவின் ஆய்ந்து யாவரும் அறியுமாறு உரை செய்துள்ளார்; அருஞ்சொற்களுக்கும் தொடர்களுக்கும் பாக்களின் கருத்திற்கேற்ப 'எண்பொருளவாச் செலச் சொல்லும்' ஆற்றல் இயல்பின் அமைந்தவர் என்பதை அவர் உரை கூறுமாற்றான் தெளியலாம்.

(எ-டு) புரிதல் = எப்பொழுதும் சொல்லுதல் }
சேர்தல் = இடைவிடாது நினைத்தல் } இறைவாழ்த்து.

நிறைமொழி = அருளிக்கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடுதல் (3-8)

குறிஎதிர்ப்பு = அளவு குறித்து வாங்கி, அவ்வாங்கிய வாறே எதிர்கொடுப்பது (23-1)

பழைமை = பற்றறுக்காலத்துத் தமக்குச் செய்த உபகாரம் (53-1)

புணர்ச்சி = ஒருதேயத்தராதல் }
பழகுதல் = பலகால் கண்டும் சொல்லாடியும் மருவுதல் } (79-5)

சோர்வு = மனமொழிமெய்கள் தன்வயத்த வல்லவாதல் (93-10)

மடமை = கண்டவழி நினைந்து காணுதவழி மறக்கும் தவற்றைக் காணுவழி நினைந்து கண்டவழி மறத்தல் (130-6)

இவற்றால் அவ்வாசிரியரின் மொழிப்புலமையும் புலனுகும்.

சில சொற்களுக்கும் தொடர்களுக்கும் காரணங்காட்டியும் பொருள் நுட்பம் தோன்றுமாறும் விளக்கம் செய்வர்.

(எ—டு) 'மக்கட்பதடி': "அறிவென்னும் உள்ளீடின்மையின் 'பதடி' என்றூர்" (20-6)

'தலைகிழக்காம்'; தலைகிழாம்; "தலைமேற்கொண்டதொரு பொருளைக் கீழே தள்ளுங்கால், அது தன் தலைகிழாகவிழும் ஆகலின்"

'நெருஞ்சிப்பழம்'; முள்வலிதாதல் உடைமையின் 'பழம்' என்றூர்"

இங்ஙனமன்றிச் சில சொற்களுக்கு இலக்கிய மேற்கோள் கொண்டும் விளக்குவர்.

(எ—டு): நாகரிகம் = கண்ணோட்டம் (68-10)

(மே-ள்): 'முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்' (நற்றிணை-355)

துப்பு = பகை (117-5)

(மே-ள்): 'துப்பெதிர்ந்தோர்க்கே உள்ளாச் சேய்மையன்
நட்பெதிர்ந்தோர்க்கே அங்கை அண்மையன்'
(புறம்—380)

அருங்கேடன்: அருமை = இன்மை (21-10)
:கேடில்லாதவன்

(மே-ள்): 'சென்றுசேர் கல்லாப்புள்ள-புள்ளில்
என்றூழ் வியன்குளம்' (அகம்—42)

நெஞ்சம் = அகம் (125—10)

(மே-ள்): 'குன்றின்-நெஞ்சுபக வெறிந்த அஞ்சுடர்நெடுவேல்
(குறுந்தொகை-1)

கைஅறியாமை = செய்வதறியாமை (93–5)

(மே-ள்): 'பழனுடைப் பெருமரம் தீர்ந்தெனக் கையற்று'
(புறம்-209)

மிக அருகி வழங்கும் சொற்களுக்கும் பொருள் சொல்லு மிடத்து, அவற்றையொத்த பிறசொற்களையும் எடுத்துக்காட்டி விளக்கிச் செல்வர்.

(உ-ம்) கவ்வை: 'கவ்வையாற் கவ்விது காமம்' (115-4)

கவ்விது = அலர்தலையுடைத்தாயிற்று.

"செவ்வையுடையதனைச் 'செவ்விது' என்றாற்போல கவ்வையுடையதனைக் 'கவ்விது' என்றார்"

மையாத்தல்; 'மலர்காணின் மையாத்தி நெஞ்சே' (112-2)

"ஈண்டு ஒவ்வாதனவற்றை ஒக்கும் எனக்கோடல்.

இஃது இறுமாத்தல், செம்மாத்தல் என்பன போல ஒருசொல்.

சோகாப்பர்: 'காவாக்கால்-சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு' (13-7)

சோகாப்பர் = துன்புறுவர்.

"இஃது அல்லாப்பர், செம்மாப்பர் என்பன போல ஒரு சொல்"

பிற இலக்கியப் பகுதிகளைக்கொண்டு, குறட்பாக்களில் பொதிந்துள்ள கருத்துக்களை நன்கு விளக்கும் ஆற்றல் வாய்ந்தவர் என்பதற்குச் சான்றாகச் சில வருமாறு;

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும் (17-9)

'நினைக்கப்படும்' என்பதற்கு ஆராயப்படும் என்று பொருள் கூறிப் பின்னர் "அறிவுடையோரால் இதற்கேதுவாகிய பழவினை யாதென்று ஆராயப்படும்' என்று விளக்கம் கூறிச் சிலம்பினின்று

"இம்மைச் செய்தன யான்அறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது'

என்று மேற்கோளும் காட்டுவர்.

'அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவர் கோல்' (55-3)

இக்குறளில் 'அறம்' என்ற சொல்லுக்கு "மாதவர் நோன்பும் மடவார் கற்பும்-காவலன் காவலன்றித் தம் காவலான்' ஆகலின், ஈண்டு 'அறம்' என்றது அவை ஒழிந்தவற்றை" என்று மணிமேகலை-சிறைசெய் காதையினின்றும் விளக்கம் தருவர்.

பிற இலக்கியங்களில் உள்ள தொடர்களையே உரைநடையாக வரைந்து பொருள் கூறுவதால் அவர்தம் 'நுண்மான் நுழைபுலம்' உடைமையும் அறியலாம். ஈண்டுச்சில சொற்களின் பொருள் விளக்கத்தைக் காணலாம்;

'திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று' (16-7)

நோநொதல் = துன்பத்திற்கு நோதல்: 'உம்மை எரிவாய் நிரயத்து

வீழவர் கொல் என்று பரிதல்,' (நாலடி-58)

'அமிழ்தினும் ஆற்ற வினிதே தம்மக்கள்
சிறுகை *யளாவிய கூழ்'*

சிறுகையளாவல். 'இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தல்''
(புறம்-788)

பேதையார் கேண்மை **ஒரீஇவிடல்'**

ஒரீஇ**விடல்**=நீங்கவேண்டும்: நீங்காக்கால் 'வெறிகமழ் சந்தன மும் வேங்கையும் வேமாறு' போலத் தீங்குவரும் ஆதலின் 'விடல்: என்றார் (நாலடி-180)

'தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்' *(40-9)*

இக்குறளில், தாம் இன்புறுதலும் உலகு இன்புறுதலும் யாங்ஙனம் என எழும் வினவிற்கு விடை கூறுமாற்றான் தெளிவு செய்வார்: ''தாம் இன்புறுதலாவது, நிகழ்வின்கண் சொற்பொருள் களின் சுவைநுகர்வானும் புகழ் பொருள் பூசை பெறுதலானும் எதிர் வின்கண் அறம் வீடு பயத்தலானும் அதனான் இடையறாத இன்பம் எய்துதல்'' என்றும்'

''உலகு இன்புறுதலாவது' இம்மிக்காரோடு தலைப்பெய்து அறியாதன வெல்லாம் அறியப்பெற்றேம்: யாண்டுபலவாக நரை யிலமாயினேன் என்றும் உவத்தல்'' என்றும் தெளிவுற உரைப்ப தால் 'கற்றதுணர விரித்துரைக்கும்' சொல்வன்மை உணரலாம். இத்திறனை நூன்முழுதும் பரக்கக் காணலாம்.

குறட்பாக்களில் செறிந்துள்ள இனிமைகளை அழபட எடுத் துரைக்கும் ஆற்றல் வாய்ந்தவர் என்பதைக் கீழ்வரும் விளக்கங் கள் காட்டும்:

''செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும்'' *(42: 2)*

உரைஇனிமை; ''சுவை மிகுதியும் பிற்பயத்தலையும் உடைய கேள்வியுள்ள பொழுது வெறுக்கப்படுதலான் இல்லாத போழ்து என்று,

பெரிதாயவழித் தேடல் துன்பமே அன்றி நோயும்
காமமும் பெருகுதலால் 'சிறிது' என்றும்.
அது தானும் பின்னிருந்து கேட்டற் பொருட்டாக
லான்
'ஈயப்படும்' என்றும் கூறினர்.
'ஈதல்-வயிற்றது இழிவுதோன்ற நின்றது'

குடியென்னும் குன்றுவிளக்கம் மடிஎன்னும்
மாசூர மாய்ந்துகெடும். (161-1)

உரைநயம்; "உலக நடையுள்ள துணையும் இடையறுது தன்னுட் பிறந்தாரை விளக்கலின் குடியைக் 'குன்றுவிளக்கம்' என்றும்,

தாமத குணத்தான் வருதலின் மடியை 'மாசு' என்றும் அஃது ஏனை இருள்போலாது, அவ்விளக்கைத் தான் அடர்ந்து மாய்க்கும் வலிஉடைமையின் 'மாசூர மாய்ந்துகெடும்' என்றும் கூறினர்.

'கெடுதலாவது பெயர் வழக்கமும் இல்லையாதல்'
இவற்றான் அவர்தம் 'பிறர்வாய் நுண்பொருள் காணும்' திறனும் பிறர் 'வேட்பத்தாம் சொல்லும்' வன்மையும் நுகர்ந்து இன்புறற் பாலன.

ஆசிரியர், தம் காலத்திருந்த பல உரை நூல்களையும் ஆய்ந்து அறிந்தவர் என்பது ஆங்காங்குப் பாடத்திலும் உரையிலும் காணும் வேற்றுமைகளை எடுத்துக் காட்டுவதால் பெறப்படும். பிறர்காட்டும் பாடம் பொருந்தாவிடத்துத் தக்க காரணத்துடன் விளக்கும் ஆற்றலும் உடையர் என்பதும் அறியலாம்.

பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து **விடல்** (98-9)

இக்குறளில் 'விடல்' என்பதை 'விடும்' என்று பாடம் ஓதுவாரும் உளர். முற்றுத்தொடரும் எழுவாய்த்தொடரும் தம்முள் இயையா மையின் அது பாடமன்மை அறிக" என்பர்.

மதிநுட்பம் நூலோ டுடையார்க்கு **அதிநுட்பம்**
யாவுள முன்னிற்பவை (64-6)

என்ற குறளில் "'அதிநுட்பம்' என்பதை 'அதனின் நுட்பம் யாவுள' என்றுரைப்பாரும் உளர். அவர் சூழ்ச்சிக்கினமாய் முன் சுட்டப்படுவதொன்று இல்லாமையும், சுட்டுப்பெயர் ஐந்தாம் உருபு ஏற்றவழி அவ்வாறு நில்லாமையும் அறிந்திலர்" என்பர். ...

அருமறைசோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறைதானே தனக்கு (5-7)

இதன்பொருள்: *பெறுதற்கரிய அறிவுரைப் பொருளைப் பெற்றும் உட்கொள்ளாது போக்கும் புல்லறிவாளன் அவ் வுறுதி அறியாமையால் தானே தனக்கு மிக்க வருத்தத்தைச் செய்துகொள்ளும்' என்பதாம்.*

இனி " 'அருமறைசோரும்' என்பதற்குப் 'பிறரெல்லாம் உள்ளத்தடக்கப்படும் எண்ணத்தை வாய்சோர்ந்து பிறர்க்கு உரைக்கும்' என்று உரைத்தார்." அது 'பேணுமை' என்னும் பேதைமையாவதன்றிப் புல்லறிவாண்மை அண்மை அறிக" என்று காரணங்காட்டி மறுப்பர்,

நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின் (34-4)

இதன்பொருள்: 'நாள் என்று அறுக்கப்படுவதொரு காலவரையறை போலத் தன்னைக் காட்டி ஈர்ந்து செல்கின்ற வாளினது வாயது உயிர் அஃது உணர்வாரைப் பெறின் என்பதாம்.

"இதனை நாளென்பது ஒருபொருள் போலத் தோன்றி உயிரை ஈர்வதொரு வாளாம் என்றுரைப்பாருமுளர்."

'என' வென்பதுபெயரன்றி இடைச்சொல் ஆகலானும், 'ஒன்று போற் காட்டி' என்பதற்கு ஒரு பொருட்சிறப்பு இன்மையானும் 'அது' என்பது குற்றியலுகரம் அன்மையானும் அஃது உரையன்மை அறிக" என மறுத்துக் கூறுவர்.

இவற்றால் 'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப் பொருள் பெய்ப்பொருள் காணும்' அறிவு சான்றவர் ஆசிரியர் என் பதும் உணரலாம்.

இனி 'பெருமை பெருமிதம் இன்மை' என்ற இலக்கணத்திற் கிலக்கியமாய் அவர் திகழ்வதைத் தம் ஆசிரியரைக் கைவிடாது உற்றவிடத்துக் காப்பாற்றுந் திறத்தினால் நன்கு உணரலாம்.

இனத்தாற்றி எண்ணுத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந்திரு. (57-8)

இதனில் 'சினத்தாற்றி' என்ற தொடரில் வேண்டாவிடத்து 'அத் துச்சாரியை' வந்துள்ளது. இதைத் தவிர்க்கவே, தம் உரையில் சினமாகிய குற்றத்தின்கண்ணே' என்று 'கண்' உருபை வருவித் தார். மற்றும்,

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும் (31-6)

என்ற குறளிற்கு "உருவகம் நோக்கிச் 'சுடும்' என்று தொழில் கொடுத்தாராயினும் 'அகற்றும்' என்பது பொருளாகக் கொள்க" என விளக்கவுரையில் காட்டுவர்.

ஆசிரியரின் 'பிறர் சொற்பயன் கோடல்' என்னும் மாசற்ற கொள்கை இவற்றால் பெறப்படும்.

உரைவிளக்கத்தில் இலக்கணக் குறிப்புக்களும் செறிந் திருப்பதால் இலக்கண அறிவு நிறைந்தவர் என்பதும், வடமொழிக் கொள்கைகளும் அம்மொழியின் இலக்கணக் குறிப்புக்களும் காணப்படுதலால் வடமொழி இலக்கிய இலக்கணப் பயிற்சியுட உடையர் என்பதும் தெளியப்படும்.

மேலும், 'கட்டியங் காரன்போல' என்ற வரலாற்றுச் செய்திகளையும் 'கரும்பயிறற்குக் கூலிபோல', 'யானையில்லாத பாகன்போல' எனப்பழமொழிகளையும் 'ஏரல்எழுத்துப்போல' என்ற உவமைகளையும், பொருளை விளக்கப்பயன்படுத்துவர்.

இங்ஙனம் மாண்புகள் மலிந்துகிடக்கும் இவர்தம் புலமை மிக்க உரை நூலில், வட நூல் வழக்குக்களைப் புகுத்தி அவற்றிற் கேற்ப உரைசெய்தல், இலக்கண அமைதிக்காகப் பாக்களைச் சிதைத்துப்பொருள் கூறுதல், பலஇடங்களில் தமிழ்நூல் வழக்குக் களை வட நூல் வழக்கென உணர்த்தல் முதலிய குறைகளும் உள் ளன. ஆயினும், நவில் தொறும் நயமிகும் நன்னூலிற்கு 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்னும் சிறந்த நோக் குடன் பரிமேலழகர் என்ற பேராசிரியர் உரைசெய்திராவிடின் நூற்பொருளை எளிதின் அறியப்பெருது இடர்ப்பட்டிருப்போம். தமிழகத்தின் நன்றி என்றென்றும் அவர்க்கு உரித்தாகும்.

வாழ்க அவர்தம் உயரிய நோக்கம்!

வாழ்க அவர்தம் விழுமிய ஆக்கம்!

வாயற்ற மொழி

ஒருகாலத்தில் யாம் வடமொழிப் புலவரொருவரோடுரையாடிக் கொண்டிருந்தபோழ்து, அவர் திடீரென்று "மெய், வாய், கண், மூக்கு, செவியென்ற வைம்பொறியானுஞ் சிறந்துவிளங்கி யாக்கை நலம் வாய்ந்த தமிழ் மக்கள், தான் சமற்கிருத நாயகனை யெதிர்ப் பட்டு மணக்குந்தோறும், முகங் காட்டாது தலைகவிழ்ந்து நின்ற னள்! இஃதென்னே!" என்று கூறிப் புன்னகை செய்தனர். அஃதுணர்ந்த யாமுங் காலந் தாழ்த்தலின்றி, அவர் எதிர்பாராத வண்ணமாய், "எவ்வாற்றானும் யாக்கைநலன்வாய்ந்தொளிருந் தமிழ்மகள் தன்னை மணக்குமாறு போந்த வடமொழி நாயகன் மூங்கையாய் வாய் திறத்தலின்றி முகத்தினுற் பல குறிகள் செய்து நின்றமை கண்டு, முகஞ் செய்து புறக்கணித்து நின்றனள்! இஃதென்கொலோ!" என்று கூறி இளநகை யரும்பினம். இவ் வுரையாடலின் பொருளாவது, அவர் தமிழில் முகத்திற்குத் தக்க சொல்லில்லை யென்றுர். யாம் 'முகம்' தமிழ்ச்சொல்லே என்பாரோ டிணங்கி, அதனை வலியுறுத்திச் சொல்லுமுகத்தால், வடமொழி யில் முகத்தின் சொற்களைத் தவிர்த்து வாய்க்குத் தக்க சொல் லின்மை காட்டி, அது பேச்சுவழக்கற்ற மொழி யென்று குறித் தனம்.

— பரிதிமாற்கலைஞர் —

தமிழ் மொழியின் வரலாறு.

தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள்

தைப்பொங்கலுடன் தமிழியக்க விழாவையுங் கொண்டாடுக!

தைப்பொங்கல்நாளாகிய சனவரி 14–ஆம் நாள் தொடக்க முதல் ஒரு கிழமையை தமிழியக்கக் கிழமையாகத் தமிழ்கூறு நல்லுலகெங்கும் கொண்டாடவேண்டும் என்று தமிழியக்கத்தினர் தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவ்வேண்டுகோள் மேலும் கூறுவதாவது :–

"தமிழர் தம் வாய்மொழியாந் தமிழுக்குத் தம் வாழ்வின் துறையனைத்திலும் முதன்மைகொடுத்தல் வேண்டும். இப்பொழுது பலர் தம் அலுவல்களைத் தமிழிலே செய்யாமற் பிறமொழிகளுக்கு அடிமைப்பட்டிருக்கின்றனர். இந்த இழிநிலையை நீக்கித் தமிழுக்கு முதன்மையளிப்பதற்குத் தமிழ்மக்கள் உள்ளத்திலே தமிழுணர்ச்சி பொங்குதல் வேண்டும். தைப்பொங்கற்றிருநாளன்று தமிழுணர்ச்சி பொங்கச் செய்தற்காகத் தமிழர்வாழும் ஊர்களெங்குந் தமிழியக்க விழாக் கொண்டாடுமாறு தமிழியக்கம் வேண்டுகோள் விடுகிறது.

தமிழியக்கம் தமிழர்வாழும் இடமெங்கும் பரவித் தமிழுணர்ச்சியை உண்டாக்குதற்கு ஆவன செய்யுமாறு தமிழ்ப் பேராசிரியரையும், தமிழ்த் தாளிகைகளையும் தமிழர் நடத்தும் பொதுநிலையங்களின் உறுப்பினரையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழியக்க விழாவிலே ஊர்மக்கள் யாவரும் கூடி "இனி எங்கள் அலுவல்களை எல்லாம் தமிழிலே செய்வோம். அரசினர்க்கும், வணிக நிலையங்கட்கும் பிறநிலையங்கட்கும் தமிழிலேதான் எழுதுவோம்; தமிழிலே படிவங்கள் கிடைக்காவிடில் பிறமொழிப் படிவங்களையெல்லாம் தமிழிலேதான் நிரப்பி அனுப்புவோம்; முகவரிகள், விளம்பரப்படல்கள், பெயர்ப்பலகைகள் முதலியவற்றை எல்லாம் தமிழிலேதான் எழுதுவோம்; எக்காரணங்கொண்டும் பிறமொழிகளுக்கு அடிமைகளாகமாட்டோம்; தமிழ்த்தாளிகைகட்கும் துணைநின்று வளர்ப்போம்" என்று உறுதி செய்துகொள்ளுதல் வேண்டும்.

தமிழ்நூல்களைப் படிக்கவும், தமிழ்த்தாளிகைகளைப் படிக்கவும் தமிழிலே எல்லாக் கருமங்களையுஞ் செய்யவும் தமிழர் யாவரும் இனித் தயங்கக்கூடாது. "எனக்குத் தமிழ் தெரியாது" என்று தமிழர் கூறும் நிலையை ஒழித்துக்கட்டத் தமிழர் யாவரும் பாடுபடல் வேண்டும்.

ந. பாலசுப்பிரமணியம்,
தமிழியக்கச்செயலர்,
தமிழ் மறைக் கழகம், 58, 34–ஆம் ஒழுங்கை, கொழும்பு–6

குழந்தை

குழந்தை இங்கே வா!
கொஞ்சி முத்தம் தா!

பாலும் சோறும் உண்ணு!
பத்து வரையில் எண்ணு!

அ ஆ இ ஈ என்றே
அப்பா வந்தால் சொல்லு!

பட்டுச் சட்டை தைப்பார்!
பதக்கம் வாங்கி வைப்பார்!

முத்துப் பல்லைக் காட்டு!
முன்னங் கையை நீட்டு!

சோற்றை வாயில் போடு!
சுவையாய்ப் பாடி ஆடு!

திருக்குறள் அறிவு!

கற்க! கற்க! கற்க!
கற்பன வற்றைக் கற்றவை வழியில்
நிற்க! நிற்க! நிற்க!

சொல்க! சொல்க! சொல்க!
சொல்லுஞ் சொல்லால் மற்றவர் சொல்லை
வெல்க! வெல்க! வெல்க!

பணிக பணிக! பணிக!
பணிவாய் நின்றே பலவுஞ் செய்யத்
துணிக! துணிக! துணிக!

விருந்து விருந்து விருந்து!
விருந்துக் கிட்டு மிகுந்ததை என்றும்
அருந்து! அருந்து! அருந்து!

பொறுக்க! பொறுக்க! பொறுக்க!
பொறுத்துக் கொண்ட தீமையை உடனே
மறக்க! மறக்க! மறக்க?

எண்ணு! எண்ணு! எண்ணு!
எண்ணிய வற்றுள் ஏற்றதை உடனே
பண்ணு! பண்ணு! பண்ணு!

பாடல்கள் இரண்டும் துரை. மாணிக்கம் எழுதிய 'பள்ளிப் பறவைகள்' என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டன.

தாய்மொழி உணர்ச்சி

"ஆருயிரே என்கண்ணே அழகுக்களஞ்சியமே;பொன் பூத்த பூங்கொடியே........" என்று ஒரு குழந்தை தன் பாடப் புத்தகத்திலிருந்து படித்த சொற்கள் என் காதில் நுழைந்தன; உள்ளத்தை அடைந்தன; எண்ணச்செய்தன. இந்தச் சொற்கள் தமிழருடைய உள்ளத்தைப் பிணிப்பதுபோலப் பிறருடைய உள்ளத்தைப் பிணிக்குமா? பிறமொழியிலே இவற்றை மொழி பெயர்த்துக் கூறினுற் பேருணர்ச்சி ததும்புமா?

தாய்மை, பால்நினைந்தூட்டும் பேரன்பு, குழந்தை வருந்தத் தான் வருந்தும் பரிவு இவையெல்லாம்பெற்ற தாய்க்கன்றே உரியன. பெற்ற மகவுத் தொடர்பு இயற்கையான தொடர்பு; பிரிக்கமுடியாத தொடர்பு. இதைப் போன்றதே ஒரு மொழிக்கும் அதை வழி வழியாகப் பேசி வருவோருக்கும் உள்ள தொடர்பு; ஒரு மொழிக்கும் அதனைத் தாய்மொழியாகக் கொண்ட இனத்துக்குமுள்ள தொடர்பு; தமிழுக்கும் தமிழருக்குமுள்ள தொடர்பு.

இந்தத் தொடர்பினுலேதான் மக்கள் தம் தாய்மொழியிடத்துப் பற்றும் மதிப்பும் உள்ளவராகவும் தாய்மொழி உணர்ச்சியுடையவராகவும் இருக்கின்றனர். தாயைப்போலத் தாய்மொழியைப்போற்றுகின்றனர். தாய்மொழிக்குத் தம் வாழ்விலே முதலிடங் கொடுக்கின்றனர்.

தம்முடைய தாயைப்போற்ருதவர் மதிக்காதவர் மக்கட் பண்புடையவராயிருப்பரோ? தம் தாய்மொழியைப் போற்ருதவரைப் போற்றப் பின்னிற்பவரை மாண்புடையவர் எனலாமா? தாயைப் போற்ருதவரின் உள்ளத்திற்போலத் தாய்மொழியைப் போற்ருதவரின் உள்ளத்திலும் மயக்கமும், பிறழ்ச்சியும், மறதி

செந்தமிழ்க் கலைமணி, வித்வான், பண்டிதர்
கா. பொ. இரத்தினம், எம்.ஏ., பி.ஓ.எல்.
தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்,
அரசகருமமொழித் திணைக்களம், கொழும்பு.

யும் குடிகொண்டிருக்கும்; இவற்றுக்குக் காரணம் அடிமைப் பான்மையும், பிறமொழி வேட்கையும், வயிற்றைமட்டும் வளர்க்கும் நோக்கமும், உணர்ச்சிக் குறைவுமேயாகும். நம் தமிழரிடத்திலும் இவை நிறையக் காணப்படுகின்றன. இவற்றாலேயே இவர் தாய்மொழியைப் போற்றவேண்டும்; மதிக்கவேண்டும் என்று எண்ணுகிறாரில்லை; தாய்மொழியுணர்ச்சிச் சிறிதுமின்றிக் காட்சியளிக்கின்றனர். நன்கு ஆங்கிலம் எழுதத் தெரியாதவரும் ஆங்கிலத்திலே முகவரி எழுதுதல் பெருமையான செயல் என்று எண்ணி எழுதுகின்றனர். முடங்கல் முதலியவற்றைத் தமிழிலே எழுதிக் கையெழுத்தை ஆங்கிலத்திலே இடுவோர் பலர். தமிழாசிரியர் பலர் இன்றும் இவ்வாறு செய்கின்றனர். தமிழிலே எழுதப்பட்டப் பற்றுச்சீட்டுக்கள் முதலியவற்றினும் ஆங்கிலத்திலே கையொப்பமிடும் வழக்கம் இன்னும் ஒழியவில்லை. தமிழர் நடத்துங் கூட்டங்களுக்கு வருகை தருவோர் தங்கள் கையொப்பங்களை ஆங்கிலத்திலே தாம் இடுகின்றனர். தமிழிலே இடுவது சிறப்பற்ற செயல் என்று கருதும் ''ஐயா''க்களும் உளர்.

தமிழாசிரியருப், அறிஞரும், தமிழ்த்தாள்கள் நடத்துவோரும் முகவரித்தாள்களிலே **தங்கள் பெயர்கள், முகவரிகள் முதலியவற்றை ஆங்கிலத்தில் மட்டுமே அச்சிட்டு வைத்துக் கொண்டு தமிழ் வளர்க்கின்றனர்.**

தமிழ்த் தாளிகைகள் சிலவற்றில் முகப்பைப் பார்த்தால் ''Registered as a newspaper at the G.P.O. என்னும் ஆங்கிலத் தொடர்மிளிரும். தமிழுக்காக உழைக்குந் தமிழ்த் தாளிகைகளின் அலுவலகங்களிலே இன்னுந் தமிழ் முதன்மைபெறவில்லை. இலங்கையில் மட்டுமன்றித் தமிழகத்திலுள்ள நூற்றுக் கணக்கான நாளிதழ்கள், கிழமை இதழ்கள், திங்கள் வெளியீடுகள் என்பனவற்றை மக்களுக்கு அனுப்பும்பொழுது எத்தனை தாளிகையாளர் முகவரிகளைத் தமிழிலே எழுதுகின்றனர்? பத்துப் பன்னிரண்டு தாளாசிரியர் மட்டுமே தமிழுக்குப் பெருமை தந்துள்ளர் எனலாம்.

அண்மையிலே யாழ்ப்பாண நகராட்சி மன்றத்தினர் ஒரு நூல்நிலையத்தைக் கட்டித் திறப்புவிழா நடத்தினர். இந்த நூல் நிலைய முகப்பை நிமிர்ந்து பாருங்கள். Public Library எனும் ஆங்கிலச் சொற்கள் மட்டுமே பொறிக்கப்பட்டுள. தமிழ் ஒதுக்கப்பட்டுளது' ஆம்; தமிழரின் தனிநகரான யாழ்ப்பாணத்திலே தமிழ்மக்கள் நடத்தும் நகராட்சி மன்றத்தினாலே தமிழ் ஒதுக்கப்பட்டுளது.

மூளாயிலே உள்ள கூட்டுறவுக்கழக மருத்துவமனையினை ஒப்பனை செய்யும் பெயர்ப் பலகைகளைப் பாருங்கள்! அவற்றிலே தமிழையோ தமிழையுமோ காணமாட்டீர். ஆங்கிலத்தை மட்டுமே காண்பீர். பொதுமக்களால் நடத்தப்படும் அந்த மருத்துவமனை கொடுக்கும் பற்றுச்சீட்டு எந்தமொழியில் அச்சிடப்பட்டுளது? அங்கு மருத்துவத்துக்குச் செல்லும் ஏழைத் தமிழ்மக்கள் பலருக்குத் தெரியாத ஆங்கிலத்திலேதான்; தமிழன் தமிழை மறந்து ஒதுக்குவதற்கு வேறென்ன சான்றுவேண்டும்?

இவ்வாறு தமிழை மறந்து ஒதுக்கி ஒழிப்பவர் மட்டுமன்றித் தமிழை நன்முறையிலே பேணுதவரும் பலருளர். பிறமொழிச் சொற்களை எவ்வகைக் கட்டுப்பாடுமின்றித் தமிழிலே எழுதித் தமிழ் வளர்க்கிறோம் என்று கொக்கரிப்பவர்தம் அறியாமையைக் காட்டுதற்கு ஆயிரம் எடுத்துக்காட்டுக்களைக் கூறலாம். கலைக்களஞ்சியத்தை வெளியிடுபவரும் தாளாசிரியர் பலரும், திரைப்படம் எடுப்பவரும் இந்தக் குற்றத்துக்கு ஆளாகியுளர். தமிழை வளர்ப்பதற்குத் திரைப்படங்கள் நல்ல தொண்டாற்றுகின்றன(!) பல திரைப்படங்கள் பைந்தமிழ்ப் பாடல்களையும் செந்தமிழ் உரையையும் தமிழ் மக்களுக்கு அளித்து அரும்பணி ஆற்றியுள(!) இத்துறையிலே தமிழைச் சிதைக்கும் பல தாளிகைகளினும் ஒருசில திரைப்படங்கள் நல்ல தொண்டாற்றியுள்ளன எனலாம்(!) எனினும் திரைப்படம் **எடுப்பவருடைய சோர்வினுலே ஆங்கிலச்சொற்கள் பல தமிழிலே எழுதப்பட்டு மக்களுக்குப் படைக்கப்படுகின்றன.**

நம் தலைமுறையிலேயே நம்தாய்மொழி ஆளப்படுவோரின் மொழியாயிருந்தது. அடிமை மொழியாயிருந்ததென்றுங் கூறலாம். ஆண்டோரின் மொழியாக ஆங்கிலமிருந்தது. ஆங்கிலம் படித்தோருக்கு அரசினர் மனைகளில் உயர்பணிகளும், பட்டங்களும், பெருமைகளும் கிடைத்தன. மக்களிடத்தே மதிப்பும் இருந்தது. தாய்மொழியாந் தமிழைப் படித்தவர் நாட்டின் அடித்தளத்திலே வைத்து நசுக்கப்பட்டனர். ஆங்கிலம் பேசுவது ஆங்கிலத்தில் எழுதுவது முதலியன நாகரிகத்தின் சின்னங்களாகவுங் கருதப்பட்டன. "எனக்குத் தமிழ் வராது" என்று கூறிப் பெருமைப்பட்ட தமிழரும் உளர்.

ஆங்கிலேயர் ஆட்சி அகன்றது; அரசியல் தன்னுரிமை கிடைத்தது. தமிழ்மொழி தான் இழந்த முதன்மையையும் சிறப்பையும் பெறத்தொடங்கியுளது. தமிழுக்கு பெருமையளிக்கவும் முதன்மை கொடுக்கவும் இன்னும் நம்மவர்

விரைந்து முன் வருகின்றிலர். பார்க்குமிடமெங்கும் தமிழர் தம் மொழியைத் தாழ்த்துங் காட்சிதான் தோன்றுகிறது: தமிழிலே பிழைக்கும் தமிழாசிரியர் தமிழுக்காகப் பாடுபடுகிறோம் என்று கூறும் நிலையங்களின் தலைவர், அரசியல் தலைவர் ஈருக ஏறக்குறைய எல்லோரும் தமிழைப் போற்றாமல் வாழுகின்றனர். போற்றவேண்டும் என்ற எண்ணமும் இவர்தம்மிடம் இல்லை; தமிழைப் போற்றுங்கள் எனுங் குரலும் இவர்தம் காதிலே நுழைவதாகத் தோற்றவில்லை. தமிழுக்கு முதன்மை கொடுப்பதற்கு அஞ்சுகின்றனர்; வெட்கப்படுகின்றனர். தமிழைப் போற்றுதல் தங்கள் நிலைக்குத் தாழ்வான செயல் என்று எண்ணுகிறவரும் இருக்கின்றனர். இந்த நிலைமை மாறு விட்டால், தமிழைத் தமிழர் யாவரும் போற்றாவிட்டால் தமிழுக்குந் தமிழருக்கும் உயர்வில்லை; உய்வில்லை. தமிழினம் ஒன்றுபடுதற்கும் உயர்ந்த வாழ்வு பெறுதற்கும் தமிழைப் போற்றுதலே உரியவழி. இதைவிடச் சிறந்த வழி வேறில்லை. குறுக்கு வழிகளாற் பயன்விளையாது. **தமிழகத்துக்கு வேண்டுவது தாய்மொழி உணர்ச்சியே.**

தமிழினஞ் சிறந்து வாழத் தொண்டாற்றுகின்றவர் யாவரும் தாய்மொழி உணர்ச்சியுடையவராயிருத்தல் வேண்டும். இப்படியிருந்தாற்றான் தமிழ் மக்களிடையே தாய்மொழி உணர்ச்சியை உண்டாக்கலாம்; எல்லோரிடமும் தாய்மொழி உணர்ச்சி உண்டாகிவிட்டால் எல்லா உயர்ச்சியும் உண்டாகும். இதற்கு உலகத்தின் முன்னணியிலுள்ள நாடுகளே சான்று பகர்கின்றன. இங்கிலாந்து, இரசியா, செருமானி, பிரான்சு, சப்பான் முதலிய நாடுகள் எல்லாம் தம்முடைய தாய்மொழியையே போற்றி உயர்வடைந்துள. இதுவே நாம் பின்பற்றுதற்குரிய நல்வழி.

இதழாசிரியர் குறிப்பு:

கட்டுரையாசிரியர் தனித்தமிழ் வளர்ச்சியைத் தம் உயிரெனப் போற்றிப் புரக்கின்றமை இக்கட்டுரையால் தெற்றெனப் புலப்படும். ஆயினும் நந்தமிழ் மொழியில் ஆங்கிலச் சொற்களும் வழக்குகளும் மிகுதியாகக் கலந்திருப்பினும் நீரிற் கலந்த எண்ணெயைப் பிரித்தறிதற்கும் களைந்தொதுக்குதற்கும் எளிதாம் போல, அக்கலப்பை விலக்கலும் எளிதே! ஆனால் உள்ளும் புறமும் இரண்டறக்கலந்து உருக்கரந்து வாழும் வடமொழிச் சொற்களும், வழக்குகளுமே முற்றும் களைந்தொதுக்கற்பாலது. இதன் வேறுபாடுகளைத் தமிழர் தெள்ளிதின் அறிந்து கொள்வாராக.

— ஆசிரியர்.

அழிந்துபோன தமிழ் நூல்கள்

கி. ஆ. பெ. விசுவநாதம்

இயல் நூல்கள்

அகத்தியம், அடிநூல், அணியியல், அவிநயம், அவிநந்தமாலை.
ஆசிரியமாலை, ஆசிரியமுறை, ஆசிரியமுறி, ஆன்மவியல்,
இந்திரம், இந்திரகாவியம், இளந்திரையம், [ஆட்சி நூல்.
எதிர்நூல், ஐந்திரம், ஒப்புநூல், ஓவியநூல்.

கச்சபுடம், கடகண்டு, கணக்கியல், கலியாணகாதை, கலைக்கோண்டுதண்டி, கலிப்பாடல், கவிமயக்கிறை, களரியாவிரை, களவுநூல், கனவுநூல்.

காலகேசி, காக்கைபாடினியம், குருகு, குண்டலகேசி, கோள்நூல்
சங்கயாப்பு சயந்தம், சாதவாகனம், சிந்தம், சிற்பநூல் சிறு
குரீஇயுரை, செயன்முறை.
தந்திரவுரை. தகடூர்யாத்திரை, தும்பிப்பாட்டு, தேசிகமாலை,
நாக குமாரகாவியம். நீலகேசி.

பஞ்சமரபு, பதிறுறுபடலம், பரிநூல், பழைய பரிபாடல்கள், பல்காப்பியம், பல்காயம், பன்மணிமாலை, பன்னிருபடலம், பறவைப்பாட்டு.

பாண்டியன்மரபு, பாட்டுமடை, பாண்டியன் பாரதம், பெருபாரதம், புணர்பாவை, புதையல்நூல். பூதபுராணம், பெரிய முப்பழம், பெருவல்லம், பெருவஞ்சி, போக்கியல்,

மணியாரம், மந்திர நூல், மயேச்சுரயாப்பு, மாபுராணம், மார்க்கண்ட காஞ்சி, முதுநாரை, முதுகுருகு, முத்தொள்ளாயிரம், முப்பெட்டுச் செய்யுள், மூவடிமுப்பது, யசோதர காவியம்.

வஞ்சிப்பாட்டு, வளையாபதி, வாய்ப்பியம், வியாழமாலை, விசாகன் பாரதம், வீரமாலை, வீர விளக்கம், வீரவணுக்கம், வெண்டாளி, வேந்தியன் முறை, வைப்பியம், வைரமாலை, அருபகைத் தொள்ளாயிரம், வஞ்சத் தொள்ளாயிரம் முதலியன.

இசை நூல்கள்

சிற்றிசை, பேரிசை, இசைநூல், இசைநுணுக்கம், இசை விளக்கம், பஞ்சமரபு, பஞ்சமாபாரதீயம், பண்ணமைதி, பண்விரி விளக்கம், பாட்டும் பண்ணும், ஆளத்தியமைப்பு, கருவி யிலக்கணம், தாளசமுத்திரம், தாள வகையோத்து, இசைக் கூறு பாடற் பண்பு முதலியன,

நாடக நூல்கள்

கூத்து வரிருளநூல், கூத்தநூல், சயந்தம், செயிற்றியம், பரதம், பரத சேனுபதியம், மதிவாணர், மதிவாணர் நாடகத்தமிழ் நூல், முறுவல் விளக்கத்தார்கூத்து, அடி வைப்பு. அடி வரிசை, உறுப்பாட்சி, முத்திரை விளக்கம், மெய்ப்பாட்டியல், முகக் குறிமுறை, கைக்குறிமுறை, இண்ணுரைக் குறி, தாளக்கட்டு, நாட்டிய விளக்கம், நிறுத்த முறை முதலியன,

மருத்துவ நூல்கள்

அகத்தியர் பன்னிருகாண்டம் போகர் எண்ணுயிரம். கோரக்கர் மூலிகைப்பயன் ஆயிரம், கொங்கணவர் மூவாயிரத்து நூறு, கோரக்கர் வெண்பா ஏழாயிரம், மச்சமுனி ஏழு காண்டம், சிவவாக்கியர் ஐந்து காண்டம், காசிபர் வண்ணம், ரோம முனி வடுகம், ராமதேவர் சந்தப்பா, நந்தீசர் சந்தம், சங்கு மாமுனிக்கலித்துறை திருமூலர் திருமந்திரம் எண்ணுயிரம், பதஞ்சலி ஏழுகாண்டம், சட்டமுனி நிகண்டு, சட்ட முனி இரண்டாயிரத்து எழுநூறு, காலங்கி நாதர் நாலுகாண்டம், போகர் ஏழு நூறு முதலியன,

இருந்தால்.........?

இந்நூல்கள் அனைத்தும் தமிழ் மொழியில் அறிஞர் தம்மால் தோற்றுவிக்கப்பெற்றவை. இவை அனைத்தும் அழிந்து போயின என்று சிற்சில பாடல்கள் கிடைத்து இருப்பதனுலும் வேறு பல நூல்களில் மேற்கோள்களாக வந்து இருப்பதனுலும் அறிய முடிகிறது. இன்னும் எத்தனை நூல்கள் இருந்தனவோ. என்னென்ன நூல்கள் இருந்தனவோ. என்னென்ன பெயரில் இருந்தனவோ. அவற்றுள் அனைத்தும் இன்று இருந்தால் தமிழ் மொழி......? இனியேனும் எங்கு இருந்தாவது அகப்படுமானுல் தமிழகம்.........??

அழிந்த முறை

தமிழகத்தில் அடுத்தடுத்துத் தோன்றிய கடற்கோள்களால் அழிந்தவை சில. குறுநிலமன்னர் அழிந்தபோது அழிந்தவை சில. பரம்பரைப் புலவர் பெருமக்கள் அழிந்தபோது அழிந்தவை சில. சாதி வெறியால் அழிந்தவை சில. சமயவெறியால் ஒழிந்தவை சில. மொழிவெறியால் அழிக்கப்பெற்றவை சில. நாலந்தா நூல் நிலையம் தீக்கு இரையானபோது எரிந்து போனவை சில. கரையான்கள் தமிழ்ச் சுவடிகளைச் சுவைக்கத் தொடங்கியதால் அழிந்தவை சில, பழஞ் சுவடிகளைக்கொண்டு போய் ஆடிப்பதினெட்டாம் பெருக்கில் ஆற்றில் கொட்டினுல் நன்மை என்ற கொள்கை ஒன்று தமிழகத்தில் பரப்பபெற்றுப்

வந்ததால் தமிழர் தங்கள் கையாலேயே அள்ளிக்கொண்டுபோய் ஆறுகளில் கொட்டிவந்த வழக்கத்திஞல் அழிந்துபோனவை பல, பல.

அழிந்த காலம்

இந்நூல்கள் அழியத் தொடங்கி 2,000, 3,000, 5,000 7,000, 11,000 ஆண்டுகளாயின என்று பல பேராசிரியர் ஆராய்ந்து கூறுகின்றனர். இவர்கட்குத் துணை செய்து வருவது இலக்கியச்சான்றுகள். மேலை நாட்டு அறிஞர் சிலர் "இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பும், ஐயாயிரம் ஆண்டுகட்குப்பின்பும்" என்று கூறுகின்றனர். இவர்க்குத் துணை செய்வது மொழியறிவும், வரலாற்று உண்மையும், கல்வெட்டுக்களும், புதைபொருள் ஆராய்ச்சியும் ஆகும். எனினும் எவரும் அவை அழிந்துபோன காலத்தைத் துணிந்து கூறியதாக இல்லை.

தொன்மைச் சிறப்பு.

தமிழ் நூல்கள் அழிந்த காலத்தையே அறிய முடியாதபோது அவை தோன்றிய காலத்தை எவ்வாறு அறிந்து கூறுவது? ஒரு மொழிக்கு இலக்கணம் தோன்றுவதுதான் இறுதியாக இருக்கும். தமிழ் இலக்கண நூலாகிய "பேரகத்தியம்" தோன்றிய காலம் 5,000 ஆண்டுகட்குப்பின்பு இல்லையென முடிவாகத் தெரிகிறது. அதற்கு முன் அது தோன்றிய காலம் எப்போதோ? அதற்கு முன் இலக்கியங்கள் தோன்றிய காலம்...? அதற்குமுன் உரை நடை தோன்றிய காலம்......? அதற்குமுன் எழுத்துத் தோன்றிய காலம்......? அதற்கு முன் மொழி தோன்றிய காலம்......? எப்போது? எவர் கண்டு கூறுவது? எவ்வாறு காண முடியும்? இவற்றை எண்ணிப் பார்க்கும்போது தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பு ஒருவாறு விளங்கும்.

தனிச் சிறப்பு.

தமிழ் நூல்களில் இறந்ததுபோக இன்று இருப்பவை 36 நூல்களே. இவை பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு எனப்பெயர் பெறும். இவற்றுள்ளும் சில முழுதும் இல்லை. பரிபாடல் என்ற தமிழ் இசை நூலிலுள்ள பாடல்கள் 200க்கு மேற்பட்டவை. இன்று கிடைத்து இருப்பன 70 பாடல்களே. ஐம்பெருங்காப்பியங்களில் ஐந்துக்கு இரண்டு பழுதாகி விட்டன. 2700 பாடல்களைக் கொண்ட முத்தொள்ளாயிரத்தில் இன்று கிடைத்து இருக்கும் பாடல்கள் 230 மட்டுமே. இவ்வளவும் அழிந்தும் தமிழ் அழியவில்லை.

எத்தனையோ மன்னர் படையெடுத்துவந்தும், எத்தனையோ மக்கள் தமிழ்மக்களை ஆண்டும், எத்தனையோ மொழிகள் தமிழகத்தை ஆட்சிசெய்தும், எத்தனையோ பிறமொழிச் சொற்களும், எத்தனையோ பிறமொழி எழுத்துக்களும் தமிழ் மக்களின் சமயநூல்களில், வழிபாடுகளில், இலக்கியங்களில், கலைகளில், கல்வியில், நாளிதழ்களில் புகுத்தப்பெற்றுவந்தும் தமிழ் மொழியானது எழிலும் வளமும் குன்ருது இன்றும் அழியாது இருந்து வருவது வியப்புக்குரிய ஒன்று. இது தமிழ் மொழிக்குரிய ஒரு தனிச்சிறப்பு.

தேடாத செல்வம் தேய்வழி.

இந்நாளிலோ பெற்ருேர் எல்லாருந் தம்மக்களுக்குச் செல்வப் பொருளையெல்லாம் பல சூழ்ச்சிகளாற் கைப்பற்றித் தம்மக்களுக்குச் சேர்த்து வைத்து, அக்குடும்பத்தலைவர்களைப் பாழாக்குவது மல்லாமல், தம் மக்களையும் பாழாக்கி விடுகின்றனர். என்னை? 'தான் தேடாப் பொன்னுக்கு மாற்றுமில்லை; உரையுமில்லை, என்னும் பழமொழிப்படி, புதல்வர் தாம் வருந்தித் தேடாமல். தம் பெற்ருேராற் கிடைத்த பொருளைக் கண்டவுடனே தீயாரைத் துணைக்கொண்டு அப்பொருளை விலைமாதர்க்குங், களியாட்டு விருந்திற்குங், குடிக்குஞ், சூதுக்கும், அழிவழக்கிற்கும் இன்னும் இவைபோன்ற பலதீய செயல்கட்குஞ் செலவு செய்து, சிற்சில ஆண்டுகளிற் செல்வமெல்லாம் இழந்து,நோயும் வறுமையுங் கொண்டு ஆண்டு முதிரா முன்னரே மாண்டு போகின்ருர்.

— மறைமலை யடிகள்.
(தமிழர் மதம்).

பாவலர்

பாவலர் என்பவர் குழந்தைப் பருவத்தின் பார்வை பெற்று, இன்றும் உலகத்தை நோக்க வல்லவராக இருப்பவரே என்பர். பெரியோராக வளர்ந்த பிறகும் குழந்தைத் தன்மையை இழக்காமல் காத்து வருபவரே பாவலர்.

(— எமர்சன்)

(The Poets are men who still see with eyes of child hood. —'The Poetic Mind' P. 59)

முத்தமிழ்க் காப்பியத்தின் முதற் காதை

தோற்றுவாய்:

கழகம் மருவிய காலத்தில் எழுந்த சிறந்த நூல் சிலப்பதிகாரம். இயல், இசை, நாடகம் மூன்றும் விரவ யாத்தமையின் இதனை முத்தமிழ்க் காப்பியம் எனவும் மொழிவர். இம் முத்தமிழ்க் காப்பியம் நாடகத்திற்கு நாடகமாகவும், காப்பியத்திற்குக் காப்பியமாகவும் அமைந்து நெஞ்சையள்ளும் நாடகக் காப்பியமாகத் திகழ்கின்றது. இங்கே (a) தாமசு ஆர்டி எழுதிய 'டைனட்சு' நாடகக் காப்பியப்போக்கிலே அமைந்துள்ளமை ஒப்பு நோக்கி மகிழத்தக்கது.

நாடகக்காப்பியம்:

சிலம்பின் நாடகத்துவக்கம், நடிகர் பகுப்பு, நடிகர் தம்மிடையே நிகழும் பேச்சு, போராட்டம்; வாழ்த்து முதலிய கதைகள்; எடுத்தல் தொடுத்தல் முடித்தல்; நடையழகு, போன்றன கொண்டு செந்தமிழ்ச் சிலம்பாம் சிலப்பதிகாரத்தை நாடக—காப்பிய அமைதி அனைத்தும் அமையப்பெற்ற ஒரு நாடகக் காப்பியம் (b) எனக் கருதலாம்.

கலைக்கோயிலின் தலைவாயில்;

இந்நாடகக் காப்பியத்தின் தொடக்கமாக, கலைக்கோயிலின் தலைவாயிலாக அமைவது முத்தமிழ்க்காப்பியத்தின் முதற் காதை—'மங்கல வாழ்த்துப் பாடல்' நாடகத்தின் முதல் உறுப்

மது. ச. விமலானந்தம், எம். ஏ.,

(சரபோசி அரசர் கல்லூரி, தஞ்சை)

பாகவும், காப்பியத்தின் முதற் காதையாகவும் இரண்டும் இணைந்த நிலையில் நாடகக் காப்பியத்தின் நல்ல தொடக்கமாக அமைந்தொளிர்வது இஃது. இங்ஙனம் இருவேறு நிலையில் நாடகக் காப்பியத்தின் நல்வாயிலாக அமைந்த இம்மங்கல வாழ்த்துப் பாடலின் ஏற்றமும் தோற்றமும் இயல்பும் காண்பதே இக்கட்டுரையின் கருத்தாகும்.

நாடகத் தொடக்கம்: (c)

முத்தமிழ்க் காப்பியத்தின் முதற்காதையாம் மங்கல வாழ்த்துப்பாடல் எங்ஙனம் நாடகத்தின் நல்ல துவக்கமாக அமையு

---

a Thomas Hardy's Dynasts—A Dramatic Epic.

b 'சிலப்பதிகாரம் ஒரு நாடகக் காப்பியம்'—என்ற தனிக்கட்டுரை காண்க.

c Opening Scene of the Drama.

மென ஆராயுமுன்னர் ஐயப்பாடு ஒன்றினை அறிவது சாலும். ஆங்கிலப் புலவர் மில்டன் தந்த காப்பியமாம் 'இழந்த இன்பவீடு' நான்காம் பகுதியில் வரும்,(d)சாத்தான் காப்ரியேல் சொற்போராட்டத்தைக் கண்ணுற்ற(e) மெக்காலே போன்ற அக்காலப் புலவோர் மில்டன் தனது பெருங் காப்பியத்தை ஒரு நாடகமாகத் தீட்ட எண்ணினரோ? அங்ஙனம் எண்ணுமாறு காட்சியின்பம் நல்கும் காப்பியமாகவன்றோ அமைகின்றது அக்காப்பியம் என்றும், நாடகமாக யாத்திருப்பின் மேலும் சிறந்திருத்தல் சாலும் எனவும் வானளாவப் புகழ்ந்து போந்தனர்

அவ்வண்ணமே சிலப்பதிகாரத்தில் வரும் வழக்குரை, வாழ்த்து,வரந்தருகாதைகளை எண்ணும்போது இளங்கோ தாமும் இக்காப்பியத்தை நாடகமாக யாக்க எண்ணினரோ என்ற ஐயப்பாடு, சிலம்பு பயின்ற செந்தமிழ்ச் செல்வர்தம் உள்ளங்களில் எழுவது இயல்பு. காட்சியின்பம் நல்கும் மாட்சிமைபொருந்திய காப்பியம் சிலப்பதிகாரம்.

இனி ஒரு சிறந்த நாடகமென்றால் அதனது துவக்கமே ஏற்றமும் எழிலும் பெற்றிலங்க வேண்டும். நாடகக் கலைஞன் 'சேக்ஸ்பியர்' இயற்றிய நாடகங்கள் அனைத்தும் சிறப்புப் பலவுடையன; எனினும் நாடகத்தொடக்கம் என்ற முறையில் சிலவே சிறந்து விளங்குவனவாகக் கூறுவர் திறனாய்வாளர். பனிக்காலக் கதை, சிம்பலின்,புயல்(f)போன்ற நாடகங்களின் தொடக்கம் அவ்வளவு வெற்றியுடையனவாகக் கருதார். புயலில் தேவையற்ற இடத்திலும் வேண்டுமென்றே பிராஸ்பரோ மன்னன் வாயிலாகப் பழஞ்செய்திகளைத் திணிக்கின்றார். ஆனால் சூலியஸ்சீசர், இலியர்மன்னன், மாக்பெத், ஹாம்லெத் ஒத்தெல்லோ(g)போன்றவற்றில் போற்றத்தக்க முறையில் போதிய அளவில் நாடகத் தொடக்கங்கள் நல்ல முறையில் அமைகின்றன.

அம்முறையில்தான் சேரன் தம்பி இசைத்த சிலப்பதிகாரம் ஈடும் இணையும் இல்லாததொரு தொடக்கத்தைப் பெற்றுள்ளது: கவர்ச்சிமிக்கதாய் அமைந்துளது.

நாடகத்தின் முதற்காட்சி முதன்மை பெற்றமைவதற்கு இன்றியமையாதன மூன்று; ஒன்று உறுப்பினரின் அறிமுகம் (h) மற்றொன்று நாடகப் போக்கினைச் சுட்டிச் சொல்லல் (i); இன்

d Altercation between Gabriel and Satan in Milton's Paradise Lost Bk. IV.
e Macaulay.
f Shakespear's Winters Tale, Cymbelne, Tempest
g Julius Caesar, King Lear, Macbeth, Hamlet, Othello etc:
h Introduction of characters
i Striking the Keynote of the Play

னென்று செய்திகளைத் தருதல் (j). இந்தக் கண்ணோட்டத்தோடு செந்தமிழ்ச் சிலம்பின் சிறந்த துவக்கமாகிய மங்கலவாழ்த்துப் பாடலை ஆராய்வாம்.

உறுப்பினர் அறிமுகம்:

அறிமுகப்படுத்தும் இளங்கோவடிகள் திறம்வியந்து செயல் மறந்து பாராட்டற்பாலது. அடிகள் அறிமுகம் உறுப்பினர், மாநாய்கன், அவன் மகள் கண்ணகி; மாசாத்துவான், அவன் மகன் கோவலன் முதலியோர் ஆவர். அறிமுகப்படுத்தலிலே அழகும், அருமையும் அமைய, உறுப்பினரின் பண்பும் பெருமையும் தோன்றக் கூறியுள்ளார்.

போதிலார் திருவினாள்:

மாரிபோல் வாரி வழங்கும் வள்ளல்; உள்ளி வந்தோர்க் கெல்லாம் அள்ளித் தந்த வள்ளல் — மாநாய்கன். இம் முகிலனைய ஈகையம் பெருவணிகன் திருமகளே கண்ணகி. பன்னிரண் டாண்டைய பருவமங்கை இப் பூம்புகார் பொற்கொடி, திருவடிவும், கற்புத்திறமும் உலகு போற்றும் உயரிய பெருங்குணமும் ஒருங்கே பொருந்தியவள். அவளுந்தான்,

போதிலார் திருவினாள், புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகியென் பாள் மன்னோ!

மண்தேய்த்த புகழினான்:

அடுத்து மாசாத்துவான், வரும்பொருள் பிறர்க்காத்தும் வண்மையாளன்; வருஞ்செல்வத்தோடு அருஞ்செல்வம் பெற்ற பெருமகன்; அன்னவன் பெற்ற அருமந்த செல்வனே கோவலன். பதினெட்டாண்டைய கட்டிளங்காளை. இவன் நிலவுலகைச் சிறிதாகப் போர்க்கும் மிக்க புகழினன். சேயிழையாரால் காதல் களிகூறச் செவ்வேள் எனச் செம்மாந்து சிறப்பிக்கப்படும் சீர்மையன். அவனுந்தான்,

மண்தேய்த்த புகழினான்; மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேள்என் றிசைபோக்கிக் காதலாற்
கொண்டேத்துங் கிழமையான் கோவலன்யென் பான்மன்னோ!

முன்னர்க் கூறியதும் முறையாமோ?

இவண் ஒரு கருத்தினை உன்னுதல் இன்றியமையாததாகும். காப்பியத்தலைவன் கோவலன் — ஆண்மகன் இருக்க, காப்பியத் தலைவி கண்ணகியை—ஒரு பெண்ணை முற்கூறியது எற்றும் என்ற வினா எழுமன்றோ? இதற்கு அரும்பதவுரையாசிரியர் 'இவளை முற்

j Exposition or giving information

கூறிற்று, கதைக்குத் தலைவி யாதலின்' என்றும்; அடியார்க்கு நல்லார் 'கண்ணகியை முற்கூறினார், பத்தினியை ஏத்துதல் உட்கோளாகலான்' என்றும் கூறுகின்றனர். ஆழ்மதி ஒட்பம் படைத்த அடியார்க்கு நல்லார் அறிவுறுத்துமாப்போல் கண்ணகியின் கற்பு மாண்பைப் புலப்படுத்த—பெண்ணின் பெருமைபேச எழுந்ததன்றோ இளங்கோவின் இன் தமிழ்ப் பனுவல். எனவே தான் கற்பின் செல்வியை முற்கூறினார் என்க.

இதுவன்றிச் சோழன் கரிகாலனையும் 'பெருநிலம் முழு தாளும் பெருமகன்,' 'செருமிகு சினவேற் செம்பியன்' எனவும் அறிமுகம் செய்துள்ளார். இங்ஙனம் இவரை அறிமுகப்படுத்திய போக்கு அழகுடைத்து; அருமையுடைத்து.

நாடகப் போக்கு:

மாநாய்கன், மாசாத்துவான் ஆகிய இருபெரும் வணிகர்களின் மக்களே கண்ணகியும் கோவலனும். இவர் மணம்புரிந்து வாழ்வில் விழுந்து எழுந்த கதையன்றோ சிலம்பின் கதை! இவர் தம் இல்வாழ்க்கை யாங்ஙனம் திகழ்ந்தது? நாடகச் சிலம்பின் இறுதிதான் என்ன? என்பனவற்றை யெல்லாம் முன்கூட்டிக் குறிப்பாகக் கூறுகின்றார் ஆசிரியர்.

காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதன்றோ இன்பம்; அங்ஙனமின்றி அவர்தம் பெற்றோர் மகிழும்பொருட்டு மணம் நிகழ்வதாகக் கூறப்படுகின்றது.

> இருபெருங் குரவரும் ஒருபெரு நாளால்
> மணவணி காண மகிழ்ந்தனர்

அதனோடும் அமையாது மன்றல் மகிழ்வு மணமக்களுக்கா? மாநகரினர்க்கா? என்ற ஐயம் எழுமாறு அமைத்துள்ளார்.

> மாநகர்க் கீந்தார் மணம்

மணமக்கள் மகிழ மணமில்லை; மாநகர் மகிழவே மணம் என்று தோன்ற எழுதிச்செல்வதால் நம் மனத்தில் இருவர் வாழ்வும் இறுதிவரை இன்பவாழ்வாக இலங்குமா என்ற ஐயம் அரும்புகின்றது.

அடுத்து, யாவரும் 'இன்றுபோல் என்றும் இனிது வாழ்க' என வாழ்த்தாது, எடுத்ததுமே 'காதலற் பிரியாமல், கவவுக்கை ஞெகிழாமற் தீதறுக' என வாழ்த்துவதாகக் காணும்போது அனைவருள்ளத்தும் அச்சவுணர்வு அரும்புகின்றது; இருவரும் பிரியா வாழ்வு பெறவேண்டுமே என்ற பெருந்துன்பம் நெஞ்சில் இடம் பெறுகிறது. எழுந்த ஐயப்பாட்டிற்கேற்ப கற்பின் செல்வி காதலனைப் பிரியவும், குன்றாக் கொள்கைக் கோவலன் இவளை விடுத்து இன்னொருத்திபால் செல்லவும் காண்கின்றோம்.

அன்றியும் வையத்துள் வாழ்வாங்கு வாழ வாழ்த்துவோர் பன்மலர் தூவிப் பாராட்டுவாரேயன்றி வேண்டா வெறுப்பினர்

போல் சின்மலர் (சிலவாய மலர்களைத்) தூவி வாழ்த்துதல் செய்யார். ஆனால் அடிகளோ 'சின்மலர் கொடுதூவி' என எழுதிச் செல்கின்றார்.

இன்னணம் உள்ளத்தின் ஒருகோடியில் கண்ணகியார் வாழ்வு தாழ்வுறுமோ? என்றவுணர்வும், நாடகம் அவலப் போக்கினதே:' (k) என்ற எண்ணமும் தோன்றச் சொற்கள் சில கொண்டு எண்ணத்தைக் கிளறிச்சென்ற சேரநாடுதந்த செந்தமிழ்ச் செல்வரின் கைவண்ணத்தை என்னென்பது?

பழங்கதை பகர்தல்:

இனி அடிகள் தரும் செய்திகள் செப்புவாம். எடுத்த எடுப்பிலேயே கோவலன் கண்ணகியார் திருமணத்தைத் தீட்டின், பாடல் பயிலும் எப்பாலவரும் புரிந்துகொள்ளுமாறு யாங்ஙனம்? அன்றியும் இது களவின் வழிவந்த மன்றலா? கற்பின் வழிவந்த மணமா? என்ற ஆவல் மேவும்! எனவே ஓரளவு கதையையும், உறுப்பினர்பற்றிய செய்தி சிலவற்றையும், தந்து செல்கின்றார் சிலம்பாசிரியர்.

செய்தியைத் தரவேண்டுமே என்ற செயற்கை முறையின்றி உறுப்பினர் அறிமுகத்தோடு கூட்டிக் குழைத்துப் பாங்குறக் கூறுகின்றார். கோவலனும் கண்ணகியும் இளமைமுதல் இணைந்து மகிழ்ந்தவர்.; காதல் ஒருமித்த நெஞ்சத்தினர். (காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல் என்பதால் உணர்க.) அவர் பெற்றோர் யானை எருத்தத்து அணியிழை மகளிரை அமர்த்தி மன்றல் செய்தியினை மாநகர் முழுதும் அறியச் செய்தனர். அங்ஙனமே மாலைதாழ் சென்னி வாள்மணித் தூணகத்து நீலமேற்கட்டி முத்துப் பூம்பந்தரின் கீழ்க் கற்பின் கொழுந்தைக் கோவலன் ஏற்றான். அவ்வழி,

முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன பணிலம்வெண்குடை
அரசெழுந்ததோர் படியெழுந்தன அகலுள் மங்கல வணியெழுந்தது!

பின்னர் மங்கையர் பலர்கூடி அங்கண் உலகின் செங்கண் மணியை வாழ்த்திப் போற்றினர்.

இவ்வண்ணம் நாடகத் தொடக்கத்திற்கு வேண்டிய நலம் திகழ முத்தமிழ்க்காப்பியத்தின் முதற்காதையாக அமைவது 'மங்கலவாழ்த்துப்பாடல்'

காப்பியத்துவக்கம் அமையுமாறு: (l)

கீழைநாட்டுக் காப்பியங்கட்கும் சிறப்பாக இந்தியக் காப்பியங்கட்கும், (m) மேலைநாட்டுக் காப்பியங்கட்கும் (n) உள்ள

---

k Tragic note or Tragic atmosphere.
l Opening of the Epics.
m Eastern Epics rather the Indian Epics.
n Epics of the Western Countries.

பெருத்த வேறுபாடு வருமாறு. காப்பியத் தலைவர்தம் பிறப்பு முதல் இறப்புவரை எடுத்தோதிச்செல்லும் கீழ்நாட்டுக் காப்பியம்; மேல்நாட்டுக் காப்பியமோ கதையில் எப்பகுதி இனிமையும் எடுப்பும் உணர்ச்சியும் உவகையும் ஊட்டக்கூடியதோ அதனை (கதையின் நடுப்பகுதியை)(o) முன்னர் கூறிப் பின்னர் பிறவற்றை வேண்டியபோது விளக்கிச்செல்லும்(p) இந்தியப் பழங்கதைகள் அனைத்தும் பெரும்பாலும் பிறப்புமுதல் விரிவாக. ஏன் இம் மண்ணில் பிறந்தார் என்பது முதலாகக் கூறுவதைக்கூட காண்கின்றோம்.

முரணிய பண்புடைப் பெருங்காப்பியம்:

முத்தமிழ்க் காப்பியமோ இவ்விருவேறு பண்புகளையும் ஒருங்கேகொண்டு ஒளிரும் ஒண்மையது.(q) பிறப்பிலிருந்து கதை கூறுது எடுத்த எடுப்பிலேயே திருமணத்தில் தொடங்குகின்றது. இங்கே மேலைநாட்டுக் காப்பியப் போக்கினைக் காண்கின்றோம். இந்திய —தமிழகச் சாயலும் செப்பமுற அமையக் காண்கின்றோம்.

காப்பியக்கருவும் கருத்தும்:

பெரும்பாலும் பெருங்காப்பியங்களில் காப்பிய நோக்கு முதற்கண் புலப்படுத்தப்படுகிறது. துறக்க நீக்கத்தில் முதற்பத்து அடிகளுக்குள்ளாகவே உண்மை நோக்கம் உணர்த்தப் பெறுகிறது (r)

அதுபோன்றே முத்தமிழ்க் காப்பியத்தின் முதற்காதையில் வெளிப்படையாகக் கூறுது இலைமறைகாய்போல் உய்த்துணருமாற்றான், கண்ணகி கற்பின் செல்வியாய்த் திகழ இருப்பதை மொழிகின்றார்.

வணக்கமும் வருபொருளும்:

இனி, காப்பியம் வாழ்த்து, வணக்கம், வருபொருள் மூன்றில் ஒன்றினைப்பெற்றிருக்கவேண்டும். இங்கே வாழ்த்துப்பாடலே —அதிலும் மங்கலவாழ்த்துப்பாடலே முன்னர் அமைகின்றது. இயற்கையன்னையை வாழ்த்துவதும், வணங்குவதும், வருபொருள் உணர்த்துவதும் முதற்காதையிலேயே அமையக் காண்கின்றோம். மூன்றில் ஒன்றிருந்தாலே போதும்; மூன்றுமே அமையும் அழகினை முத்தமிழ்க்காப்பியத்தின் முதற்காதையில் காண்க.

---

o Plunging into the midst of the action or beginning In medias Res.

p Flash back.

q Blending of the Eastern or the Tamilian and western modes of the Epic

r To justify the ways of God to man – This is the noble and the grand theme of Paradise Lost, the famous English Epic.

இவ்வண்ணம் காப்பியத்தொடக்கத்திற்கு வேண்டிய வாய்ப்பு அனைத்தும் அமைய முத்தமிழ்க்காப்பியத்தின் முதற் காதையாக அமைகிறது 'மங்கலவாழ்த்துப்பாடல்'.

வாழ்த்தும் விளக்கமும்:

எடுத்த எடுப்பிலேயே திங்களையும், ஞாயிற்றையும், மழையையும், புகாரையும் போற்றும்போது எவருள்ளந்தான் இறும்பூது எய்தாது? அத்தனை எழுச்சி அதனைப் படிக்கும்போது! திங்களை கொங்கலர்தார்ச் சென்னி குளிர் வெண்குடையாலும்; ஞாயிற்றைக் காவிரிநாடன் திகிரிகொண்டும்: மாமழையை வளவன் தண்ணளியாலும்; பூம்புகாரை அவனது பரந்தொழுகும் பெற்றிமைகொண்டும் ஆறிரண்டடிகளில் அழகாக அருமையாகப் பாடிப் பரவியுள்ளமை அடிகள் ஒருவர்க்கே அமைந்த தனிச் சிறப் பெனக்கூறினும் மிகையாகாது.

இயற்கையும் இளங்கோவும்;

வாழ்த்து அமைந்த அழகும் முறையும் இதுகாறும் தமிழ் இலக்கியவரலாற்றில் கண்டிராத ஒன்று: வாழ்த்துப் பாடல் கடவுள் வாழ்த்துப் பாடலன்று, நல்லதோர் நாட்டுவாழ்த்தாக அமைகின்றது; இயற்கை வாழ்த்தாக இலங்குகின்றது. இயற்கையின் திறன்களை ஏற்றிப் போற்றுமாற்றான், மக்களுக்கு இறையென விளங்கும் மன்னனையும் போற்றிப் புகழ்கின்றார். நல்லதோர் நாட்டு வாழ்த்தாக இலங்கும் இவ்வாழ்த்து நாடகக் காப்பியத்தைத் துவக்கும்போது பாடும் நாட்டு—இயற்கை வாழ்த்தாக அமைந்த ஒன்றே என்று எண்ணத் தோற்றுகின்றது, இங்ஙனம் இயற்கையையும் இறையையும் மக்களோடு மக்கள் புலவராம் இளங்கோவும் இணைந்து நின்று ஏற்றுவது போன்று இருக்கிறது இவ்வாழ்த்து.

இயற்கையன்னையின் இருகண்கள்:

ஞாயிறு, திங்கள் இரண்டிலும் ஞாயிற்றை முற்கூறுது, திங்களை முற்கூறினார். இரண்டிலும் எழிலாலும் தண்மையாலும் திங்களே சிறந்தது. இரண்டாவதாக, நாடகம் தொடங்கும் காலம் இரவுக்காலம்; இரவில் எழுவது நிலவு. மூன்றாவதாக, தமிழ் மரபிற்கேற்பச் சிறந்த மங்கலமொழி கொண்டு தொடங்கப் பெற்றதாகக் கருதலாம். அடியார்க்கு நல்லாரும் 'திங்களை முற் கூறினார், இத் தொடர்நிலைச் செய்யுட்குச் சிறந்த தென்மொழி அதுவாகலான்' என நயம்பட உரைத்தமை ஓர்க. நான்காவதாக, திங்களையும் ஞாயிற்றையும் முறையே கண்ணகி கோவலர்க்கு ஒப்பிடலாம்.(8) கோவலன் கண்ணகி இருவரில் கண்ணகியை முற் கூறினார்; அதற்கொப்பத் திங்களை முற்கூறினார் என்க. கோவலனைப் பின் கூறுவது போன்று திங்களையடுத்து ஞாயிற்றைக் கூறுகின்றார். ஞாயிறால் திங்கள் ஒளிபெறுமாறுபோல் கோவலனாலேயே கண்ணகி விளக்கம் பெறுகின்றாள்.

---

8 Parallelism.

கோவலனும்-கண்ணகியும்:

கோவலன் கொலையுற, பழிமொழிபெற, அதன்பொருட்டே கண்ணகி கோமுறை செய்தானைத் தீமுறை செய்யவும், மதுரையை எரியூட்டவும் செய்கின்றாள். கோவலன் இல்லையேல் இவ்வாய்ப்பு கண்ணகிக்கு நேர்ந்திராது; வாய்ப்பின்றேல் கண்ணகியின் ஆற்றல் வெளிப்பட்டிருக்காது; இவ்வளவும் எண்ணுமாற்றான் இரண்டினையும் முறைமாற்றி இயற்கையன்னையின் இரு கண்களாம் திங்கள், ஞாயிறு இரண்டினையும் முதற்கண் வைத்து அதன் வாயிலாகப் பின்னர் கூறும் கண்ணகி கோவலர்க்கு விளக்கம் தரும் முறையழகு, வைப்புமுறை(t) வாயார வாழ்த்தத்தக்கது.

கடல் கொண்ட காவிரிப்பட்டினம்:

தென்னகத்தில் தமிழ் தழைக்கும் பொதியமலை; வடக்கே முகில் மழைக்கும் பனிமலை; இருமலைகளோடொத்த நிலைபேறும், நிலைத்த புகழும், பொன்று வாழ்வும் பெற்றது பூம்புகார்ப் பெருநகர். அப்பதியை,

பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பின் புகார்

என்றார் இளங்கோ. ஆனால், எந்த நகர், குடிகள் பெயர்ந்தறியாத பெருநகர் என இளங்கோ இயம்பினாரோ, அதே நகரினின்றுதான் காப்பியத் தலைவர் இருவரும் கலங்கிப் பெயர்வாராயினர்!

கோனேக்கி வாழும் குடி, அல்லற்பட்டு ஆற்றாது அழுது அழுங்காவண்ணம் காத்துவந்த அக்காவிரிப்பூம்பட்டினம் – தன்பால் உறையும் மக்களை வேற்றிடம் செலுத்தியறியாத பூம்புகார் கற்பின் செல்வி கண்ணகியும், குன்றாக் கொள்கைக் கோவலனும் பெயர்ந்து செல்லச் செய்தது; எந்த சிறந்த நகர் பழங்குடி பெயர்ந்தறியாத பெற்றியது என இளங்கோ ஏற்றிப் போற்றினாரோ அதே நகரினின்று (அடுத்தசில காதைகளுக்குள்ளாகவே) கொங்கச் செல்வியும் கோவலனும் பெயர்ந்து பாண்டிநாடு சென்றனர்; பதியெழுவறியாப் பழங்குடி கெழீஇய புகார் நகரம், பழம்பெருங்குடி மக்களில் மாண்புடை இளங்காதலர் இருவரை வேற்றுநாடு செல்லுமாறு பதிப்பெயருறுமாறு அமைந்தது என்றறியும்போது நெஞ்சுதான் பொறுக்குதில்லையே!

நாட்டுப் பற்றும் நல்ல துவக்கமும்:

நாட்டுப் பற்றை ஊட்டுவதாகவும் அமைகின்றது இம் முதற் காதை. எடுத்த எடுப்பிலேயே

பூம்புகார் போற்றுதும்; பூம்புகார் போற்றுதும்.

என நாட்டைப் போற்றும் நல்ல உள்ளத்தை உருவாக்குகின்றார் அருளுள்ளம் படைத்த அடிகள். அறிவை அன்பிலே தோய்த்து ஊட்டுவது போன்று, நாட்டுப் பற்றை நந்தமிழாம் செந்தமிழால் செவிவழி ஊட்டுகின்றார். செவிவாயாக நெஞ்சுகளனாக அமைய

t Symmetry.

அதனைப் படிக்கும்போது உறுப்பெல்லாம் குளிரக்காண்கின்றோம்· (தாய்மொழிப் பற்றே தாய் நாட்டுப்பற்று என்னுமாப் போலே) இனிய தமிழால் நாட்டுப் பற்றை நெஞ்சத்தில் மூட்டுகின்றார். வீட்டிலும் வெளியிலும் பற்றுமிகுமாறு – வீட்டுப் பற்று நாட்டுப் பற்றுக நிலவுமாறு - வீட்டமைதியே நாட்டமைதியை நல்கவல்லது என்ற முறையில் வீட்டில் நிகழும் மங்கல நிகழ்ச்சி முடிவுறு நிலையில்கூட மன்னனை வாழ்த்தியே விழாவினை முடிப்பதாக முத்தமிழ்க் காப்பியத்தின் முதற் காதையை முடிக்கின்றார் முத்தமிழ் வல்லவர்.

மங்கல நல்அமளி யேற்றினர்; தங்கிய
இப்பால் இமயத் திருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட்டு உழையதா எப்பாலும்
செருமிகு சினவேற் செம்பியன்
ஒருதனி ஆழி உருட்டுவோன் எனவே.

பாடலும் பெருங்காப்பியமும்:

முத்தமிழ்க் காப்பியம் முப்பது காதைகளைக் கொண்டது. கானல் வரி, வேட்டுவ வரி இரண்டும் வரிப் பாடல்கள்; ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை இரண்டும் கூத்து வகையினைச் சார்ந்தவை. இவையொழிய ஏனையவெல்லாம் காதை எனவே அமைய, முதற் காதை மட்டும் மங்கல வாழ்த்துக் காதை என அமையாது 'மங்கல வாழ்த்துப் பாடல்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதனை நோக்க இன் தமிழ்க் காப்பியத்தை இசையுடன் தொடங்க எண்ணினரோ என எண்ணவேண்டியுள்ளது. இசையோடு இன்தமிழ்க் காப்பியத்தைத் தொடங்கிய அடிகள் திறம் சிறப்புடைத்து, சீர்மையுடைத்து. அதுவும் மங்கல, வாழ்த்து, பாடல் என்ற மூன்று சொற்களையும் பெய்து முத்தமிழ் நலம் பயிலும் முத்திறத்த காப்பியத்தைத் தொடங்கியுள்ளார், இதனை எண்ண எண்ண உள்ளம் குளிர்கிறது.

சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் அழகும் திகழக் காண்கிறோம். இதுகாறும் கூறிய செய்தி அனைத்தையும் 'அறுபத்தெட்டே' அடிகளில் அழகு தமிழிலே மொழிந்துள்ள அருமைப்பாடும் அறிந்து இன்புறத்தக்க ஒன்றாம்,

தொகுப்புரை:

இதுகாறும் கூறியவற்றால், மங்கல வாழ்த்துப் பாடல் முத்தமிழ்க் காப்பியத்தின் முதற் காதை என்றும், அம்முதற் காதை நாடகக் காப்பியமாம் சிலப்பதிகாரத்தின் நல்ல துவக்கமாகப் பல்லாற்றானும் அமைந்தொளிர்ந்து அழகு படுத்துகிறது என்றும்; நாட்டுப் பற்றையும் நல்லுணர்வையும் தோற்றுவிக்கும் முறையில் அமைந்துள்ளது என்றும்; சொல் நலத்தாலும் பொருள் வளத்தாலும் சிறந்துளது என்றும், பெயரமைதிக்கு ஏற்ப நல்லதொரு காதையாகவும், பாடலின்பம் பயக்கும் நாடகக் காப்பியத்தின் நல்ல தோற்றுவாயாகவும் நயம்பட அமைந்துளது என்றும் அறிந்தோம்.

❋ ❋ ❋

ஒருத்தி... இன்னொருத்தி!

"உங்களையொன்று கேட்கலாமேன..."

"......நினைக்கிறாய்போலும்! அப்படித்தானே? அதற்கென்ன தடையின்றிக் கேளேன்"

"தவறாக ஒன்றும்..."

"...நீயும் கேட்கமாட்டாய், நானும் நினைக்கமாட்டேன்."

"ஒருவேளை நீங்கள் நினைத்துக்கொண்டால்...?"

"நினைக்கவேமாட்டேன்."

"அப்படியென்றால் கேட்கலாமா?"

"அப்புறம் உன்பாடு. நான்தான் எப்பொழுதே சொல்லிவிட்டேனே!!'

"உங்கள் உள்ளத்தில் எனக்குமட்டும்தானே இடம்...?"

"ஏன், வேறுயாருக்கும் கொடுக்கக் கூடாதா?"

"அப்படி யென்றால்........?"

"அப்படியென்றால்......!',

"என்னை நீங்கள் உண்மையாகவே காதலிக்கவில்லையா?"

"யார் சொன்னார்? உன்னை நான் உண்மையாகவேதான் காதலிக்கிறேன்,"

"இல்லை, இல்லை! வேறு யாரோ ஒருத்தியுடன்கூடப் பழகிக்கொண்டு வருகிறீர்"

"ஆமாம், பழகிக்கொண்டுதான் வருகிறேன். அதனால் உனக்கு என்ன குறைந்துவிட்டது?"

"அதனால் உங்களுக்கொன்றும் குறைவில்லைதான்; ஆனால், இத்தனைநாள் என்னைப் பார்த்துத் 'தமிழே! அமிழ்தே!' என்றனவெல்லாம் வெறும்......"

"நடிப்பென்று நினைக்கிறாய் அவ்வளவுதானே!"

"ஆம் என்றுவேறே சொல்லவேண்டுமா?"

"அதுதான் இல்லை என்கிறேன்."

"வேண்டாம், எதற்காக வீண் சொற்போர்; பேசாமல் போய்விடுங்கள்."

"போகாவிட்டால்...?"

நயனார்மண்டபம். இரா. அரங்கநாதன்.

"நானே போய்விடுகிறேன்..."

"எங்கே?"

"வெகு தொலைவிற்கு .."

"நானும் வருகிறேன்!"

"வேண்டாம், அங்கே சென்றோர் திரும்புவதே இல்லை. அங்கே நீங்களும் வரமுடியாது. அப்படியே வருவதாய் இருப்பினும் அவள் என்ன ஆவது?!"

"எவள்"

"எவளா? என்னைவிட எல்லாவகையிலும் சிறந்தவள் என எண்ணிக்கொண்டிருக்கிறீரே 'அவள்'"

"இன்னும் சற்றுவிளக்கமாகத்தான் சொல்லலாகாதா?"

"ஏன் நடிக்கிறீர்? அவள்தான் உங்கள்... அருமைக் காதலி...!"

"அவள், நீதான்!"

'இதற்குமேலும் என்னுடன் விளையாடாதீர். அப்புறம், நான் அழுதேவிடுவேன்."

"எங்கே, அந்த அழகைக்கொஞ்சம் காணலாமா...?"

"அருள்செய்து போய்விடுங்கள். அவள் அங்கே உங்களைக் காணமல் துடித்துக்கொண்டிருப்பாள்."

"ஆமாம், ஆமாம்! போகத்தான்வேண்டும்! ஆனல்... அவளும் இங்கேதானே இருக்கிறுள்!"

"என்ன, இங்கேயே இருக்கிறுளா? இந்தச் சோலைக்குள்ளா? அப்படியென்றுல் எனக்குமுன்பே அவளை இங்கு வந்திருக்கும்படிச் சொல்லிவிட்டீரா?"

"இல்லை, இல்லை! நம்முடன்தான் வந்தாள்"

"நம்முடனு?"

"ஆம்...!"

"உண்மையாகவா?

"ஆமாம், உண்மையாகவே தான்!"

"பின்னர், இப்பொழுது அவள் எங்கே இருக்கிறுள்?!"

"இங்கேதான்!"

"அப்படி யென்றுல், அவள் என்ன மயக்குக்காரியா?!"

"ஆம்! அவளேதான்."

"என்ன! என்ன சொல்கிறீர்?"

"தன் அழகில் பலரையும் மயக்கவைத்துத் தன்மேல் காதலுறச் செய்பவள்."

"அத்தகையவளையா நீங்களும் விரும்புகிறீர்? அதைத்தானு "காதல்" என்றுவேறே சொல்லிக்கொள்கிறீர்"

"ஆமாம், அத்தகையாளைத்தான் காதலிக்கிறேன்!"

"உங்கள் ஒழுக்கத்தை அவளால் கெடுத்துக்கொள்ளப் போகிறீர்"

"இல்லை, மேலும் வளர்த்துக் கொள்ளப்போகிறேன்,"

"அவளாலா?"!

"ஆம், அவளாலேயேதான்!"

"யாரவள்?!"

"ஒரு பெண், உன்னைப்போல!"

"அதுதெரியும், பெயர்?"

"த...மி...ழ்"

ஓ...ஃகோ!

ஓ...ஃகோ!!

★

வழிமடக்கு.

கங்குல் தொடங்கிய வேளை! — தன்
காதலுக் கொத்த பெண்ணுளை
"எங்கடி சென்றனை இப்படி வந்தனை"
என்றுகை யைத்தொட்டு நின்று மடக்கினுன்
ஏங்கிக் கிடந்த வோர் காளை!

கொஞ்சம் திரும்படி என்ருன் — உயிர்
கொல்லும் விழிகளைக் கொன்ருன்;
நெஞ்சினில் ஆவலை நீட்டி வளர்த்தவன்
நீலக்குயில் வருஞ் சோலையி னுட்புறம்
நீ வா எனக் கூட்டிச் சென்ருன்!

மின்னும் வளைக்கையைப் பற்றி — எழில்
மேவிடும் தோளினைச் சுற்றித்
தென்றலில் ஆடிடும் இன்மலர்த் தேனெனத்
தீராக் கதைபேசி ஆரா நலமுடன்
தேடிக் கொண்டா னவன் வெற்றி.!

த. கோவேந்தன்

மானம் ஆறு.

ம. அரங்கநாதன்

1. பொது.

1. மானமெனும் உயிர்நிலையே! வையமெலாம்
விலைகொடுத்து வாங்கி னாலும்
தானெனுமோ ருணர்வாலே தழைக்குமுனைப்
பெறலரிதே; தக்கோ ரென்பார்,
வானமெலா மளந்தாலும், வளமிகுத்து
வாழ்ந்தாலும் வற்றா ஆற்றாய்
ஆனவுனை யிழந்தாரேல் அனைத்தையுமே
வுடனிழந்தா ரறிவேம்; நன்றே.

2. "*குன்றவரு மெப்பொருளுங் கொள்ளாதே
விடுக"வெனக் கூறி னாரே
அன்றுதிரு வள்ளுவனா ரதுவன்றோ
தமிழ்மானம்; ஆன மட்டும்
தந்துறையே போனபரி மேலழகி
யாருமதைத் தமிழ தென்றே
மென்றாரில் விழுங்ககிலார் உண்மையினை
யுள்ளபடி விளக்கி னாரே.

3. எளியவனா யுழன்றாலென்? அறிவுநிலை
மிதந்தாலென்? ஏவல் கேட்கும்
அளியவனா யுய்ந்தாலென்? அறிவுநிலை
யுயராம லமைந்திட் டாலென்?
நெளிவாகித் தன்மதிப்பின் நிலைமாற
வுயிர்பெரிதாய் நினைப்போ னல்லன்,
தெளிவாகி யான்றெழுந்த திறலாகித்
திகழ்மானச் செம்மல் தானே.

---

* திருக்குறள் ௯௬௧

4. தமிழர்க்கே யுரியதுவாய்த் தலைமுறைகள்
பலவாயுந் தாழா தின்றும்
அமைகின்ற, அதுவன்றோ அரணாகித்
தமிழ்மொழியை ஆள்வ தாகும்;
குமைக்கின்ற, குறியுடனே வடவர்புரி
குறும்புகளைக் குலைத்து, வாழ்வு
சமைக்கின்ற, **உயிரதுவாம்** என்றறன்றோ
நூல்செய்தார் தமிழ்ச்சான் றோரே.

5. இன்றிருக்கும் நிலையென்ன? எழிலிருக்குந்
தமிழ்வாழ்விங் கிருக்கும் போது,
குன்றுவதோ தமிழ்மானம்; குலைவதுவோ
தமிழ்நாடு! கொள்கை வல்லார்.
நின்றிருக்கும் நிழல்மான நெடுமரத்தை
வீழ்த்துவதோ! நிலையில் லாத
சொன்றிதிணி யுடல்வளர்க்கத் தொல்குடிமை
மறப்பதுவோ! சொல்லு வீரே.

6. ஏறெடுத்துப் பார்க்குமிட மெல்லாமும்
மனக்கொதிப்பை யெழுப்பு மன்றோ!
கூறெடுத்த வாழ்வியல்தான் வளர்ச்சியினும்
தளர்ச்சிமிகக் கோடல் காண்மின்:
வீறெடுத்துப் பணிபுரியப் **பெண்மானம்,**
ஆண்மானம், வியன்பார் முற்றும்
சீரெடுத்த **மொழிமானம், இனமானம்,**
இடமானம் தெளிவிப் போமே.

2. பெண்மானம்

7. கொண்டவரை யுயிரோடே கொண்டிருந்தும்
பிறரோடு குலவும் பெண்டிர்,
கண்டவரோ டெங்கணுமே திரிந்தரிய
கற்புநிலை கழன்ற **பண்ணை** *
மண்டுகுறை கண்டுநகை கொண்டாலும்
சுரணையிலா மகளிர், செல்வம்
உண்டாயின் குறைகளெலாம் மறையுமெனும்
பொருட் பெண்டிர் உலவல் காண்மின்.

8. மணம்பெறுத லியலாமல் வழுக்கியவர்
தொகைகுவை; வாய்ப்பு வந்தும்
பணம்பெறுதல் குறியாகத் தனித்திருக்க
விரும்புபவர் பலராய்; நல்ல

* மகளிர் கூட்டம்.

குணம்பெரிதாய் மதிக்காமல் குலைந்ததுநம்
நாடென்னும் குறியீ தன்றோ!
பிணைப்பிடுங்கு கழுகினினும் கள்வரினும்
கொடியரின்ன பெண்டிர் தாமே.

9. ஏனிவரிப் படியானார்? என்னகுறை
யிவர்வளர்ப்பில் எண்ணிப் பார்ப்போம்:
மானிகளா யிவர்பெற்றோர் வளர்த்திருந்தால்
வழுக்குதற்கு வழியே இல்லை.
ஊனமொரு முறையுற்றால் பயன்படுத்தி
வுயர்மானந் தனைவீழ்ப் பாரே.
ஆனவரை பொருள்சேர்ப்பா ரதைக்கொண்டே
பழிமறைக்க ஆவல் கொள்வார்.

10. கோயிலின்மா டெனத்திரிந்தே கொண்டவர்க்கும்
பெற்றவர்க்கும் குறைசேர்ப் பாராய்
நாயினிலுங் கேடாகப் பிறர்பார்த்துச்
சிரித்திடவே நடப்பார் தம்மைத்
தாயரெனப் போற்றுவதோ? தன்மானம்
வேரறுந்து சாயு முன்னே
வாயுமிட மெல்லாமும் குறையுடையார்
மதிப்பிழக்க வழிசெய் வோமே.

11. பொதுநலத்தொண் டாற்றுவர்போற் புன்மைசெயும்
பெண்டிரையும், புரைமிக் காராய்
மதுகைமணம் விழைவின்றிக் கூத்துபயில்
மகளிரையும், வரம்பு மீறிப்
புதுமையெனும் பெயராலே யரசியலில்
புகுந்திழிந்தார் தமையும் நல்லோர்
கதுமெனவே நாடறியக் காட்டியுயர்
பெண்மானங் காத்தல் நன்றே.

12. வறுமையிலுஞ் செவ்வியராய் வாழ்வார்தாம்
மிகவுள்ளார்; வழக்கங் கெட்டுப்
பெருமையினைப் புறம்போக்கிப் பணமுதலாம்
பகட்டுகளாற் பெரும்பேர் கொள்ளும்
வெறுமையினர் தமிழ்நாட்டில் தலையெடுக்கா
திருக்கவழி வகுக்க வேண்டும்.
பொறுமையினால் நலமிழந்தோம் போதுமினிப்
புறப்படுவோம் புன்மை தீர்க்க.

3. ஆண்மானம்.

13. ஆடவரோ கொடியவராய் அலைகின்றார்;
தன்னலத்தால் அழிகின் றார், மேம்
பாட்டெனவே மனைவியரைப் பிறரோடு
பழகவிடும் பதர்க ளானார்;
தேடரிய மானத்தை யெண்ணுகிலார்,
பணமொன்றே சிறப்பென் றெண்ணி
நாடறியக் கெடுகின்றார், தலைநிமிர்ந்து
நடக்கின்றார் நாணி லாமே!

14. *"செப்பமுடன் நாணமிலார் இயல்பாகக்
குடிமைநலம் சேர்ப்ப தில்லை,"
இப்படியே யிவர்வாழ்விங் கிருப்பதெனில்
நாட்டுயர்வுக் கிழுக்கே யன்றோ!
ஒப்பியவர் கல்வியினால், கேள்வியினால்,
ஆட்சியினால் ஒழுங்கு றாரேல்
தப்புதனை யவருணரக் காட்டியொறுத்
திடவேண்டும் தமிழ்ச்சான் றோரே.

15. உயரலுவல் நிலைமறந்து கையூட்டு
வாங்குகிறா, ருயர்வுக் காக
அயலவர்பால் மனைவியரைச் சேர்க்கின்றார்,
பொய்யுரைக்க வஞ்சார், செய்யும்
செயல்களெலாம் கொடுங்கரவாம் அகப்பட்டால்
கால் பிடித்துத் தேம்பு கின்றார்,
இயல்கின்றார்; மாளிகையை எடுக்கின்றார்;
இவர்வாழ்வை என்னென் பேனே?

16. மாளிகையில் வாழ்பவராய், மனைவியர்தம்
பிள்ளைகட்கு வழுக்கிச் சேர்த்த
சாளிகையால் பெரும்படிப்போ டுயரலுவல்
தனைவாங்கித் தந்து, மேலாம்
ஆளெனவே போகின்றார்; பூசைகளிற்
குறைவில்லை; அவரை மாந்தர்
தேளெனவே நசுக்காமல் திரியவிட்டுப்
பார்க்கின்றார், சீர்கெட் டாரே.

17. வெளிமான்றன் சிறுபரிசில் வேண்டாவென்
றொதுக்கியதோர் மேன்மை யாலே
ஒளிமாண்ட பெரும்புலவன் பிறந்ததிரு
நாட்டுள்ளீர்! ஒருசொற் கேண்மின்

* திருக்குறள் சூடுக

நெளிவாகி யோந்தியென நிறமாறும்
தன்மானம் நீத்த புல்லர்
தெளிவாகித் திரிந்தாரேல் சிறைக்கூடம்
அவர்க்கெனவே செய்கு வீரே.

18. ஈடில்லா மானிகளாய் ஏழைகளாய்
நெஞ்சிளைத்தா ரிருக்கக் கண்டு
வாடியகம் மருட்பாவார் வாக்குநலம்
காண்கிலிரோ? அவரை-நாம்போய்த்
தேடியர சவை கொணர்வோம்; சிறப்பெல்லாம்
செய்துவைத்துச், செப்ப மாக
நாடியவ ரரசோச்ச நலந்துய்ப்போம்;
வெறும்படிப்பை நசுக்கு வோமே.

4. மொழியினம்

19. இறைமுன்னும் தமிழில்லை; திருமணத்தில்
தமிழில்லை; இயங்கு வாழ்க்கைத்
துறைதோறும் வடமொழிக்கே சிறப்பென்றால்
தமிழருயிர் துறத்தல் நன்றே!
முறைதேரும் அரசவையில் தமிழ்வந்தும்
வடமொழிக்காம் முனைப்பிற் சற்றும்
குறைவில்லை; தமிழருமே தமிழ்மானம்
கெடுக்கின்ற கொடிய ரானர்.

20. எவ்வளவு தமிழ்ப்பயின்றும் ஏதிலவர்
அதைத்தமதென் றெண்ண மாட்டார்;
செவ்விநல முளதாயின் சிறப்பெல்லாம்
வடமொழிக்கே செய்து பார்ப்பார்;
எவ்வுறவு கொண்டுள்ளார், மண்ணுறவா,
மொழியுறவா? எண்ணிப் பார்மின்;
ஒவ்வொருநற் றமிழுளமுங் கொதிக்காதோ
மொழியிழிவை யுன்னிப் பார்த்தே?

21. வடமொழியில் வழிபாடு புரிந்தாலென்
என்பதுவோ மானம்? வாழ்வு
கெடவந்த மொழிக்கலப்பால் கெடுதலில்லை
என்பதுவோ மானம்? தூய்மை
படவென்றே மாற்றியவூர்ப் பெயரெல்லாம்
கொள்வதுவோ மானம்? பற்று
விடவென்றே துறந்தோரும் புறப்படுவீர்
மொழிப்பகையை விரட்டு தற்கே!

22. "வேதநெறி தழைத்தோங்க" விடுவதெனில்
தமிழ்நாட்டில் வேதச் சார்பாய்
ஓதுகலை யெல்லாமும் ஒழிந்தாலென்?
ஆகமங்கள் உரைக்கு மெல்லாம்
வேதாந்தப் பிழிவென்றால் வெட்கமன்றோ
வரவேண்டும்! விரிந்த வாழ்வில்
தீதுார்ந்த வடமொழியின் நிலைவேறு,
தமிழ்வேறு தெளிகு வீரே.

23. தனித்தியங்கும் தமிழ்மொழியில் தனிக்கலையும்
பண்பாடும் தழைத்த போதில்
இனித்திருந்த தமிழ்வாழ்வி லெவ்வெவரோ
புகுத்திவைத்த விழுக்க மெல்லாம்
இனித்தழைக்க விடுவோமேல் தமிழேது?
தமிழ்நாடாம் எல்லை யேது?
பனித்துழலும் தமிழினத்தீர் பகையொழிக்கப்
புறப்படுவீர் பருவ மீதே!

24. ஆங்கிலவர் போயிடினும் அவர்படிவக்
கல்லிருக்கு மாபோல் நாட்டில்
தேங்கியவவ் வடகலையின் சிதைவிருந்தால்
காண்பொருளாய்ச் சேர்ப்பீர்; நம்மைத்
தாங்கிடுநற் றமிழுரிமை நலம்வளர்த்தல்
கடனன்றோ! சான்றோர் கூடிப்
பாங்குடனே மொழியுணர்வும் குழுவுணர்வும்
மானமுறப் பண்ணு வீரே.

5. இன மானம்

25. நிறங்காட்டிப் பிரித்தகுறை நெடுங்காலக்
குறையன்றோ! நின்ற வாழ்வுத்
திறங்காட்டு தொன்னூலார் நான்காகப்
பிரித்தவற்றுள் மேல்,கீ ழென்ற
அறங்காட்டிப் போனாலும் இனமிரண்டே;
ஐயுறவிங் கணுவுமில்லை.
மறங்காட்டு தமிழினமும் ஆரியமும்
அவை,தமிழ மண்ணிற் றானே.

26. மொழியடியா லினமிரண்டு; குழப்பமினி
வேண்டுவதில்; முன்பின் நோக்கி
அழிவதிலோர் பயனுமில்லை; ஆரியரே
தமிழ்நாட்டுப் பார்ப்பா ரெல்லாம்!

பழியிதனி லேதுமிலை; *"அறம், பொருளா,
லின்பத்தா, லுயிரச் சத்தால்"
கழியமிக வரலாற்றில் "திறந்தெரிந்து
தெளிந்ததிது" காண்கி லீரோ.

27. திருக்கோயி லுள்ளிருக்கு முருத்தொடுவார்,
நீர்விடுவார் பார்ப்பார்; அன்னார்
குருக்களெனப் பேர்கொண்டே வடமொழியில்
முறைசொல்வார்; கோலி நின்றே
உருக்குலைந்த தமிழரெலாம் தன்மானம்,
மொழிமானம் ஒருங்கே கொன்று,
பெருக்கமுள இனமானம் அடகுவைத்துக்
கடவுளருள் பெறுகின் றாராம்!!

28. "வடமொழியே தேவமொழி, ஆரியரே
பூதேவர், வளர்ந்த கோயில்
இடமுடைய இறையவனும் தமிழறியான்,
வடமொழியில் இயம்பல் கேட்பான்;
மடமுடைய தமிழினத்தீர்! சூத்திரர்நீர்,"
எனப்புகலும் சமயத் தூறிக்
கெடுமருமைத் தமிழ்க்குலத்தீர்! இனப்பெருமை
தனைப்பாழிற் கிடத்தி னீரே.

29. குருதிநிலை யென்னென்று கூறுவிரோ?
நடைமுறையைக் கூர்ந்து பார்க்கில்
அறுதியிட்டுக் கூறிடலாம்; ஆரியரும்
அவர்சார்பி லமைந்தோ ருந்தாம்
கருதார்நந் தமிழ்மானம்; $"இறப்பவரு
வழியிழிந்த கருமஞ் செய்வார்"
தருதுயரம் அறியாமே ஆரியத்தைத்
தழுவுகிறீர், சாகின் றீரே.

30. ஒழுக்கத்தா லுயர்ந்தவரை யுயர்ந்தவினத்
தாரென்றே யொப்பி டாத
இழுக்கத்தைச் சமயமென்றோ, கடவுணெறி
யென்றோநீர் இயம்பல், நீரில்
வழுக்கித்தான் மூழ்குபவன் காப்பதற்குப்
போனானை வலிந்து மூழ்க
இழுக்கின்ற வாறன்றோ? மானமுளார்
உமைமதிக்க எண்ணி டாரே.

---

* திருக்குறள் ருமக
$ திருக்குறள் 961 (பரி-உரை).

6. இடமானம்.

31\. சிந்துவெளி வரையிலுநம் சிறப்பிருந்த
பழம்பெருமை, தெற்கே வாழ்வில்
முந்தியநற் குமரிநில முழுமையுநம்
இடமான முறைமை யுய்ய
வந்தவரால் கடல்கோளால் மறைந்தாலும்
வேங்கடதாய் வரைதா னெங்கே?
செந்தமிழின் மணம்விரித்த மேல்மலைய
நாடெங்கே? தேய்வுற் றேமே.

32\. இமிழ்கடலும் விழுங்காமல் இயற்கைநலம்
மிகப்பொருந்தி யியன்ற நாடு
சமயத்தால் வடமொழியால் உருக்குலைந்த
வரலாறு சாற்றற் காமோ!
அமைவிலராய், வேந்தர்தம தரவணைப்பால்
வடபுலத்தா ரடுக்க டுக்காய்
நமையழுத்தித், தமதுகலை நாகரிக
நச்சுவிதை நட்டிட் டாரே.

33\. சாக்கியமும் சமணமுமே புதுக்கருத்துப்
பரப்புங்கால் தமிழர் சோர்ந்தார்;
ஆக்கமுள கருத்தேற்று வடமொழியை
வெறுக்காம லணைத்தார்; காலப்
போக்கினிலே *மறைமுடிவு படையெடுத்துப்
போராடப் புகுந்த சொற்கள்
தேக்கமுற வடவழக்கே வேரூன்றிப்
போயிற்றால், தெளிவற் றேமே.

34\. மணிப்பவள நடையாகி ஒலிமுறைமை
தடுமாற, வரிவே றாகத்
துணிப்புற்றாள் தமிழன்னை; தெலுங்கு, துளு,
கன்னடமாய்த் துண்டா னாள்: சற்
றணிமையிலே மலையாள மாகிமிக
நிலைகுறுகி அடங்கிப் போனாள்;
தணிப்புற்ற தமிழ்ச்சிதைவே பிறமொழிக
ளாய்ப்பிரியத் தாழ்வுற் றேமே.

35\. பிரிந்தவையே தமிழ்ச்சார்பைப் பேசுகில;
வடமொழியின் பெருமை பேசி
அரிந்தனசெந் தமிழ்நாட்டை; அரசியலும்
தனித்தனியே அமைய லான;

---

* மறைவு=வேதாந்தம்—உபநிடதம்.

"விரிந்ததமிழ்த் திருநாடு சுருங்கியது
வடமொழியின் விளைவே" யென்று
புரிந்துகொளத் தமிழரெலா மெத்தனையாண்
டுகளின்னும் போக்கு வாரோ?

36. வேங்கடம் போய்ச், சேரலமும் விலகிப்போய்க்
குமரிமுனை மீட்கச். சென்னைப்
பாங்குளநம் திருத்தணியைக் கொண்டுவரப்
பட்டவிடர் பகர வேண்டாம்!
காங்கையுளத் திருந்திருந்தால், இடமானம்
தாழாமற் காத்தி ருந்தால்
ஈங்குவர வழியுண்டோ? செந்தமிழர்
விழிப்புறுநாள் சேய்மைத் தேயோ!

நற்போங்கல் இனிப்பதுண்டோ?

-[புலவர். ஆ. முகிலன்]-
வலசைக்காடு.

உண்ணலுமா களித்தலுமா தமிழன் வாழ்க்கை?
உடுத்தலுமா மடுத்தலுமா அவன்றன் இன்பம்?
எண்ணிறந்தோர் உழைப்பிலராய் உழைப்போர் தம்மை
ஏய்த்திடுவார் மாய்த்திடுவார் இதுவா வாழ்க்கை?
மண்ணகத்தில் இழிதகையர் சூழ்ச்சி யாலே
மழிக்கின்றார் இழிக்கின்றார் தமிழி னத்தை!
எண்ணத்தில் இவையொழிக்க எழுச்சி யில்லை
இப்பொங்கல் தமிழர்க்கே இன்பஞ் செய்மோ?

வேம்பினைப்போய் இனிப்பென்றே கொள்வார் உண்டோ?
விளையாடும் இனவெறியும் இனிய தாமோ?
பாம்பென்றால் ஒழிக்கின்றீர் சாதிப் பேயைப்
பாலூற்றி வளர்க்கின்றீர்; ஒற்று மைக்கே
சாம்வரையில் தோள்கொடுப்போம் என்போர் தாமும்
சருக்குகிறார் பிரிவுபல பேசு கின்றார்;
நாமுணர்வாற் பொங்கி, அதை மாய்க்கா விட்டால்
நற்பொங்கல் இனிப்பதுண்டோ? தமிழ்நாட் டாரே!

குறளன்

மாரி—அறவாழி

அவர் எல்லோரும் குருடர் அல்லர், ஆனால் அவர்தம் கண்கள் அந்தக் காட்சியைக் காணமறுத்தன.

அவர் செவிடர் அல்லர்! ஆனால் அச்செவிகள் அவ்வோலக் குரலைக் கேட்க மறுத்தன !

அவர் ஊமையரும் அல்லர்! ஆனால் அவர்தம் வாய் அவனிடம் பேச மறுத்தன!

அவரின் கண்களும், காதுகளும், வாயும்; அங்கே வந்தனவெல்லாம் அவனது அவல உருவைக்காணவோ, பசிக்குரலைக் கேட்கவோ, ஏழ்மைக் குரலுக்கு ஆறுதல் கூறவோ அல்ல!... புதிராகக் கொட்டகையில் திரையிடப்பட்டிருக்கும் படக் காட்சியை நுகரத்தான்!

அதையறியாத அந்தச்சிறுவன் தன்பாட்டுக்குப் ''பசிபசி!... சோறு சோறு!'' என்று மணிக்கணக்காக ஓலமிட்டுக் கொண்டிருந்தான்.

கூட்டம்தான் கரைந்து கொண்டிருந்ததே தவிர கூட்டத்தினரின் நெஞ்சு சிறிதுகூடக் கரையவில்லை,

கத்திக்கத்திக் குரல் மங்கியது சிறுவனுக்கு! மேலும் அங்குக் கெஞ்சிக்கொண்டிருப்பதால் பயனில்லை என்று தெரிந்தது. பெண்டிர் இடத்திற்காகவாவது சென்று அழுதுபார்ப்போம் என்று முடிவுசெய்துகொண்டு, கொட்டகையின் மறுபக்கம் சென்று பெண்கள் கூட்டத்தில் நுழைந்து பழைய பாட்டைப் பாடினான்.

"...அம்மா! அம்மா ! அக்கா! அக்கா! .. என்னைப்பாருங்க அம்மா!.. 'ரெண்டு நாளாப்பட்டினீங்க!.. உயிர்போகுதுங்க...! குலையைக்கௌவுதுங்க .. ஆளுக்கொரு காலணா கொடுங்க ..நாலுபேர் கொடுத்தா வயிறு நிரம்பிடுங்க ..''

பெண்களுக்கு ஆண்களைப்போல அவ்வளவு கல்மனம் இல்லை, சற்று இரக்கப்பட்டுத் திரும்பிப் பார்த்தனர். ஏழ்மையும் அழுக்கும், சோர்வும் கண்ணீருமே உருவாகி நிற்கும் அந்தச் சிறுவனைக்கண்டவுடன் அவர் முகத்தில் வெறுப்பு நிழலிட்டது, "போ! போ!'' என்று அன்புமொழிபேசி விரட்டினர். தத்தமது குழந்தைகளை விழிப்பாக அருகில் இழுத்துத் தங்களுடன் வைத்துக்கொண்டனர்.

சிறுவன், குழந்தைகளின் கழுத்து நகைகளைப் பறித்துக் கொண்டோடிவிட்டால் என்ன செய்வது என்ற அச்சம் அவர்களுக்கு!

"கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்" என்ற பழமொழியின்மேல் சிறுவனுக்கு நம்பிக்கைபோலும்! அரைமணி நேரமாக "அம்மாக்களேயும்,... அக்காக்களேயும்" கெஞ்சிக்கொண்டிருந்தான். பயனில்லை; அவரின் மனம் கல்லினும் வலியது என்பதைக் கண்டுகொண்டான்.

திரும்பி, ஆண்களின் பகுதிக்கே வந்தான்.

இப்போது கூட்டத்தில் அரைப்பகுதி கரைந்துவிட்டிருந்தது. பேசாமல் நின்ருன். எல்லோர் வாயையும் பார்த்துக்கொண்டு நின்ருன்.

வெற்றிலையை மென்றுகொண்டிருந்த வாய்களும், இனிப்பைக் கடித்துக்கொண்டிருந்த வாய்களும், புகைக் குழாய்களைப் பிடித்துக்கொண்டிருந்த வாய்களும்... எதைப்பற்றியும் கவலைப் படாமல் இயங்கிக்கொண்டிருந்தன.

அப்பொழுது "திடுதிடு"வென்று அருகில் காலடியொலி கேட்டது. பையன் திரும்பிப்பார்த்தான். சற்று தொலைவில் உடல்பெருத்த பெரியவர் ஒருவர் பையும் கையுமாகக் கொட்டகையை, நோக்கி ஓடிவந்தார். திரைக்காட்சி பார்ப்பதில் அவ்வளவு வெறி அவருக்கு!

ஓடிவந்தவர்... வரிசையின் கடைசி ஆளாக நின்ருர் இரண்டே இமைப்பொழுதில்... அவருக்குப்பின்னுல் இருபது பெயர் வந்து நின்றுகொண்டனர்.

சிறுவனுக்கு நின்று நின்று கால்கள் கடுத்தன. எனவே ஏமாற்றத்தோடு வயிற்றை இறுகப் பிடித்துக்கொண்டு திரும்பி நடந்தான்.

இருபது அடி தொலைவு போயிருப்பான். அந்த இடத்தில் என்ன புதையலைக் கண்டானே தெரியவில்லை. சட்டென்று குனிந்து எதையோ எடுத்தான். எடுத்த பொருளை உற்று உற்றுப் பார்த்தான்! திருப்பித்திருப்பிப் பார்த்தான்! பிரித்துப்பிரித்துப் பார்த்தான்! அதற்குள் ஏதோ அரியபொருள் இருந்திருக்கவேண்டும். துள்ளிக் குதித்தான்; மகிழ்ச்சியால் அன்று, அச்சத்தால்!

மறுவினடி கொட்டகைப்பக்கமே திரும்பி ஓடிவந்தான். பையும் கையுமாக நின்ற உடல்பெருத்த பெரியவரின் அருகில் சென்று அவரை மேலும் கீழும் உற்று உற்றுப் பார்த்தான். முன்னும் பின்னும் போய்வந்து மற்றவரையும் பார்த்தான், அவருடன் இவரை ஒப்பிட்டுப்பார்ப்பதைப்போல ஆழ்ந்து பார்த்தான் உன்னிப்புடன் பார்த்தான்.

"என்னடா விறைத்துப் பார்க்கிருய்..?" என்று உறுமினர் பெரியவர்.

"ஒன்றுமில்லைங்க!..." என்று கூறிக்கொண்டே அவன் தன் கையில் வைத்திருந்த பொருளை வெளிப்படையாக எடுத்து அவர் கண்களில் படும்படியாகப் பிடித்துக்கொண்டு,

"இந்தப் பணப்பை உங்களுடையது தானுங்களா?..." என்று கேட்டான்.

அதை அவன் காட்டியதுதான் சுணக்கம்; மறுநொடி அவர் கை நீண்டது. எலும்புத் துண்டைக் கண்ட நாய்போலப் பாய்ந்து பணப்பையைப் பிடுங்கிக் கொண்டார். அதற்குள் அருகிலிருந்தவர் அவனது தலை முடியை எட்டிப் பிடித்துக்கொண்டனர்.

அவன் கெஞ்சியபோது பேச மறுத்த வாய்கள் இப்போது பேசின. நீள மறுத்த கைகள் நீண்டன;

"... திருட்டுப் பயல்! சட்டைப்பையிலிருந்ததை எடுத்துக் கொண்டான் ஐயா! முளைத்து மூன்று இலை விடலை, அதற்குள் இவ்வளவு திருட்டுத்தனமா...."

உடல் பெருத்தவர் வசைமாரி பொழிந்தார். மற்றவர் அவனை அடி அடியென்று அடித்து நொறுக்கினர். சிறுவன் சுருண்டு விழுந்தான்.

படம் தொடங்கிவிட்டது. எல்லோரும் கொட்டகைக்குள் ஓடி மறைந்தனர்.

அத்துணையையும் பார்த்துக்கொண்டே நின்ற நான்.. கூட்டம் கலைந்தவுடன் சிறுவனருகே ஓடினேன்.

சிறுவன் தலைகுப்புறப்படுத்துக் கிடந்தான். அவன் தலைமாட்டில் உட்கார்ந்து "தம்பீ! தம்பீ!..." என்று மெல்லக் குரல் கொடுத்தேன். அவன் தலையைத் தூக்கி என்னைப்பார்த்தான்.

"எழுந்திரு தம்பீ...!" என்று கூறினேன் நான்.

"முடிய'ல்லீங்க...! பசி...!... மயக்கமாயிருக்குது..." முணகினான் அவன்;

"வயிற்றுக்கு ஏதாவது வாங்கித் தருகிறேன்... எழுந்திரு... அவன் சட்டென்று எழுந்தான்.

அருகிலிருந்த தேனீர் கடைக்கு அவனைக்கூட்டிச் சென்று கையிலிருந்த காசுக்கு உணவு வாங்கிக் கொடுத்தேன்.

இருவரும் வெளியே வந்தோம். நான் கேட்டேன் "ஏன் தம்பீ!... நீ எந்த ஊர்?"

"இதே ஊர் தாங்க"

"இதே ஊரா?... அம்மா அப்பா யாரும் இல்லையா உனக்கு?..."

"அம்மா இறந்திட்டாங்க... அப்பா இருக்கிறாரு..."

"பின் ஏன் இப்படிக் கையேந்தி அலைகிறாய்?... உன் அப்பா யாரு?..."

"சொன்னால் நம்பமாட்டீங்க!... என் அப்பா, இந்த ஊர்க் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருக்கிறார்... என் அம்மா இறந்தபின் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். சிற்றன்னை சொற்படி என்னை வீட்டை விட்டுத் துரத்திவிட்டார்..."

''அட! நீ... பெருஞ்சித்திரனாரின் மகனா?...''
என்னை மறந்து கத்திவிட்டேன்.

கல்லூரியில் பெருஞ்சித்திரனாரிடம் நான் பயின்றவன். அப்போது அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் நம்பவில்லை... இப்போது நம்பவேண்டியதாகிவிட்டது!...

''என் தந்தையை உங்களுக்குத் தெரியுமா அண்ணா?...''

அவன் என் எண்ணத்தைக் கலைத்தான். நான் மீண்டும் அவனிடம் கேட்டேன்

''அந்த உடல்பெருத்த மனிதரின் பணப்பையை ஏன் திருடினாய்?...'' ''ஐயையோ! நான் திருடவில்லைங்க, வழியில் கிடந்தது. எடுத்துப் பார்த்தேன். பையில் அவரது நிழற்படமும் நிறையப் பணத்தாள்களும் இருந்தன... உரியவரைத் தேடிச் சென்று கொடுத்ததற்காகத்தான் என்னை எல்லோரும் அடித்தனர்...

''ஆமாம்! .. நீ ஏன் பையை அவரிடம் கொடுத்தாய்?...''
''பின்?... நானா வைத்துக்கொள்வது? . பிறர் பொருளல்லவா?...''

''அப்படியானால் அதிலிருந்து சில தாள்களையாவது எடுத்துக்கொண்டு கொடுத்திருக்கவேண்டும். கயவர் பொருளைக் கவர்வது குற்றமில்லை தம்பீ......''

'':இருக்கலாங்க... ஆனால் செயல் வெட்கத்திற் குரியதுதானே. என் தாயார் உயிருடனிருந்து. தந்தை எங்களை அன்போடு அணைத்துத் தழுவி வாழ்ந்த காலத்தில் நாள்தோறும் அவர் எங்களுக்குத் திருக்குறளைப் படித்துக் காண்பிப்பார்; அதில்கண்டபடி வாழவேண்டுமென்று கூறுவார். அப்படி அறிவுரை கூறியவர் தவறி விட்டார்... ஆனால் .. அவர் கூறிய அறிவுரைகளை என்னால் இன்னும் மறக்க முடியவில்லை... அவர் அடிக்கடிக் கூறும் குறள் ஒன்றுண்டு... அது என்றென்றும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது......''

''என்ன அது?...''
''ஈன்றாள் பசிகாண்பானாயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை...'' மணிக்குரல் ஒலித்தது. நான் உணர்ச்சியின் பாற்பட்டுக் கண்ணீர் வடித்தேன். சிறுவனை அப்படியே வாரி அணைத்துக்கொண்டேன்.

''ஆ! என்ன இனிமை!......
''ஈன்றாள் பசிகாண்பானாயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை...''

குறள் புதியதன்று. படித்துப் படித்துப் பழகியதுதான். ஆனால் இத்துணை நாளும் படித்துப் பழகிய குறள்... வெறும் எழுத்துக்களால் உருப்பெற்ற ஒரு செய்யுள்... இப்போது காண்பதோ... ஒரு உயிருருவம்!

சிறுவனை உற்று நோக்கினேன். அவன் ஏழையா? . அன்று! அன்று!.. அவனைப்போல் திருக்குறளை வாழ்க்கையில் கடைப்பிடிப்போர் எத்துணைபெயர் நம்மிடையே இருக்கின்றனர்? ❊

கதை பொதி பாட்டு,

அத்திப் பூ

பிழையே செய்யாதவருக் கிருப்பதைவிடப் பிழையைச் செய்து, அதற்காக வருந்தித் திருந்துபவருக்கு மிகவும் மனவலிவு வேண்டும்; இவரைவிடப், பிழை செய்வோரைப் பொறுத்துக் கொள்பவருக்கு மிக்க மனவலிவோடு அருளும் வேண்டும்; இவரி னும், பொறுத்துக் கொண்ட பிழையை மறப்பவருக்கு மிகுந்த மனவலிவும், அருளும், தெளிந்த அறிவும் வேண்டும்.

பிழை செய்யாதவர் தம்முடைய வாழ்வை மட்டும் நிலைப் படுத்துகின்ருர்; அதைச் செய்து வருந்தித் திருந்துபவர் பிறர் வாழ்வை நிலைப் படுத்துகின்ருர்; பிறர் செய்யும் பிழையைப் பொறுத்துக் கொள்பவரோ, தம் வாழ்வோடு, பிறர் வாழ்வை யும் நிலைப் படுத்துகின்ருர். அதனை மறந்து விடுபவரோ, மக் கள் குலத்தையே நிலைப்படுத்துகின்ருர்.

பிழை செய்தார், பிழை செய்யப்பட்டார், பிழையைப் பொறுத்து மறப்பார் ஆகிய மூவர் வாழ்க்கைக் கோணங்களும் ஒரு புள்ளியிற் கூடுமானல்......... அப்புள்ளியில் எழும்பும் உணர்வு அலைகள்.........!!

துரை. மாணிக்கம்

பொங்கல் மலர் - 1960

1

முழுநிலா வெழுந்தது! மூச்சிலும், நெஞ்சிலும்
எழுநிலா முகத்தின் எழிற்கொடி—என்றன்
கையைத் தொட்டுக் காலையில் மணந்த
பைங்கிளி உருவே பரவி யிருந்தது!
முற்றத் திருந்தேன்; முன்னுள வாயிலில்
உற்ற உறவினர் ஓயாப் பேச்சும்,
சிறுவர் முழக்கிய சிரிப்பும் ஓலமும்,
குறுநடைக் குழவிகள் குரலெழு இசையும்.
விரும்பா விடினும் விழுந்தன செவிகளில்!
அரும்பா மலர்கள் காற்றிற் கசைவதாய்
விளையாட் டயர்ந்தனர் விளையாச் சிறுமியர்!
களியாட் டாழ்ந்தனர் காளையர் ஒருபுறம்!
அகன்ற உள்ளறை அடைத்துள பெண்டிர்
புகன்ற பகடியும், புகழ்ச்சியும், இகழ்ச்சியும்
தந்தம் திருமணத் தன்று நடந்ததும்,
தந்தங் கணவரைத் தாழுதற் கண்டதும்,
பூனையா யிருந்தவள் புலிபோல் வளர்ந்ததும்,
ஆனையா யிருந்தவள் அருகாய் இளைத்ததும்,
தந்திரு மணங்களின் தாயர் வரிசையும்,
வந்திருந் தார்பால் வந்த பரிசிலும்,
தூங்குங் காலையில் தொலைத்த தொங்கலும்,
ஆங்கொரு பெண்ணதை அடிமடி யொளித்ததும்,
தலைநாள் இரவில் தனக்குக் கணவன்,
விலையிலா தீந்த விரலணி வீழ்ந்ததும்,
முதல்நாள் அவன்றன் முன்வர அஞ்சிக்
கதவிடுக் கில்அவள் கணவனைக் கண்டதும்,
இற்றையோ அவள்முன் இவன்வர அஞ்சி
ஒற்றைக் காலால் ஒருநூறு கரணம்
'இடு'எனும் முன்னம் எண்ணுநீ என்பதும்,
'விடுவிடு' எனினும் விடாமல் தொடர்வதும்,
'பிள்ளையே வேண்டாம்' என்று பிணங்கியள்
உள்ளும் புறமும் ஒன்பதைப் பெற்றுப்
புடலங் காயாய்ப் போனதும், பூசனி
உடலுடை யொருத்தி ஒன்றுக் கேங்கலும்
இன்ன பற்பல இளமை நிகழ்ச்சிகள்
அன்னவர் பேச்சில் அடிபட் டாலும்,
என்செவி என்னவோ ஏறவே இல்லை;
இன்மொழி ஒருத்திசொற் கேங்கின அவையே!

இரவு நடந்திட இருக்கும் தலைநாள்
இரவு நிகழ்ச்சியில் என்மனம் ஒன்றிச்
சுற்றிய காட்சிச் சூழலை மறந்து
வற்றிய நிலத்தில் வருபுனல் போலப்
பெருகிய உணர்விற் பின்னிய நினைவால்
உருகிய நெஞ்சோ டுட்கார்ந் திருந்தேன்.
இராவிருந் தயின்றவர் ஏகினர்; என்தாய்
வராவிருந் தோடி வரவேற் பதுவும்.
வெற்றிலைத் தட்டுடன் விரைவது மாக
முற்றத் திருந்தார்; முதிய தந்தையும்
பெரியவர் சிலரொடு பேசி யிருந்தார்;
உரியவென் தங்கை உவகை விழியோ(டு)
என்பால் நெருங்கி "இனிமேல் உங்கள்
அன்பும், என்பும் அண்ணிக் குரியன;
இலையா? அண்ணு?" என்றனள்; அந்த
விலையிலா அன்பை வியந்தவள் கையைப்
பற்றி இழுத்துப் பணிமுகங் கிள்ளி,
நெற்றி நீவி "யென் நெஞ்சில் ஒன்றிய
அருமைத் தங்கையே! அண்ணியும் உன்றன்
பெருமை கேட்பின் பெரிதுவப் பாளே" னச்
சொல்லி விடுத்தேன்; சுவைவிருந் துண்டு
நல்ல நண்பர் நால்வர் நெருங்கினர்;
'இருந்துபோ' என்பாய், இனியோ, உண்ட
விருந்து முடிந்தது வீடுபோ, என்பாய்
இன்றை இராவோ இல்லறத் தரசி-
மன்றலிற் பின்னிய மலர்க்கொடி, வந்தே
ஓவியத் துருவை உள்ளத் திருத்தி
ஆவியைப் பறிக்கும் அணியிரா! இதுவரைக்
கண்டுகண்டு உவந்த கனவு நிகழ்ச்சியை
உண்டுஉண்(டு) உவக்கும் உவகை முதலிரா!
மேவுகலை எல்லாம் மேலன்று; உணர்வைத்
தூவுகலை மேலெனத் தோற்றும் தனியிரா!
ஒற்றைத் தனியனாய் உலகத் திருந்தவன்
கற்றைக் குழலொடு கலக்கும் தலையிரா!
பூக்கும் பூவையள் புலனைந் தின்பம்
தேக்கும் இன்பத் தேனிரா இஃதாம்!
உள்ளம் என்பதும் உயிர், உடல் என்பதும்
விள்ளியுங் கட்கு விளக்கும் நல்லிரா!
மேவும் ஈருயிர் மின்னிப் பொருந்தி
மூவுயிர் ஆகும் முதலிரா இஃதாம்!

இவ்விரா உங்கட்(கு) இன்பம் வழங்குக!
கவ்விய இருளும் களிப்பை நல்குக!
இன்று முளைத்த எழில்நிலா வானில்
நின்று பொழிக நீடிய இன்பமே"
என்று! வாழ்த்தினர் இனிய தமிழில்!
நன்றென நவின்றேன்; நகர்ந்தனர்: தனித்தேன்.
அன்னை வந்தார்; "அன்புறு மகனே!
முன்னை ஈன்று மூழ்கிய இன்பம்
குன்றள வாயின். கோதை ஒருத்தியோ
டின்றுனைச் சேர்த்த இன்பமோ வானினும்
பெரிதே! வேறென் பேசுவேன்? நீஎனக்(கு)
அரிதாய்க் கிடைத்த அருமைச் செல்வம்!
என்னை மறவா திருப்பாய் தம்பி; உன்
அன்னையின் ஆவல் அவ்வள வேதான்"
என்று கூறினர்; இருகை யாலும்
குன்றுதோள் நீவிக் குறுநுதல் தடவி
உச்சித் தலையில் உள்ளங் குளிர
இச்சிச் சென்றே ஏழெட்டு முத்தம்
பொழிந்தார்; அவர்தம் பொன்முகம் நோக்கினேன்.
வழிந்தது கண்ணீர்; வாயெழ வில்லை;
பொன்னடி வீழ்ந்தேன் பூங்கையால் தடுத்தார்.
அன்னையின் அன்பை அளவிலா துன்கையில்
அன்னையைத் தந்தை அழைத்தார்: அவரும்
என்னை விடுத்தே உள்ளறை ஏகினர்.
நால்வகைப் பேச்சு நடந்த தாயினும்
சேல்விழி நினைவிலே நெஞ்சம் சுழன்றது!
காலையிற் கண்ட கவின்நிலா முகத்திலும்
சேலினை யொத்த விழியிலும், சிரிப்பிலும்,
மெல்லிய தோளிலும், மென்விரல் நெளிவிலும்
ஒல்லி இடையிலும், ஒசிந்த நடையிலும்,
மூழ்கி யிருக்கையில், முதியவர் ஒருவர்
'வாழ்க மனையறம்' என்றே வாழ்த்தி
'எழுங்கள் தம்பி! என்றனர்; அந்தக்
கொழுந்தமிழ் நெஞ்சைக் குளிர்மை செய்ததும்
எழுந்தது நெஞ்சம்; எழுந்தன கால்கள்;
எழுந்தது வாழ்க்கை; எழுந்தது நல்லறம்;
எழுந்தேன்; நடந்தேன்; எழிலறை போகி
விழுந்தேன் படுக்கையில் விண்ணில் பறக்கவே!

2

நீல விளக்கொளி நிலவிய நல்லறை!
கோல வெண்திரை! மென்மலர்க் குவியல்!
உயர்காற் கட்டில்! ஒண்பூ விரிப்பு!
மயர்வறு நறுங்கனி! மணமெழு பூப்புகை!
தேம்பூங் கட்டி தூவிய தீம்பால்!
தாமரை யிதழ்போல் தளிர்வெள் ளிலைகாய்!
வெள்ளிச் செம்பில் விடாய்க்கென நறுநீர்!
அள்ளிப் பூசுதற்(கு) ஆரக் குழைவு!
வெயர்வைத் துண்டு! வெட்டிவேர் விசிறி!
அயர்வற உண்ணற்(கு) ஆநெய்ப் பண்ணியம்!
எனப்பல வாக இருந்தன! இவற்றில்
நினைப்பில தாக நெடுங்கட் பிறைநுதற்
பாவையின் வரவெதிர் பார்த்தது நெஞ்சம்!
பூவையின் மணிநடை பொதிந்தன செவிகள்!
நுண்ணிடை வருவழி நோக்கின கண்கள்!
பண்மொழிக் குரைதரப் பதைத்தது கடிவாய்!
துவரிதழ் கவ்வத் துடித்தன இதழ்கள்;
இவர்கிளிக் கிடந்தர எழுந்தன என்தோள்!
புறவெதிர் கொள்ளப் பறந்தன கால்கள்!
உறவெதிர் கொள்ள உயிர்துடித் ததுவே!
துடித்த வல்லுயிர்த் துணுக்கை யடக்கி
வடித்த எழிலுரு வந்ததும், 'அவளொடு
முதன்முதற் பேசும் முதற்சொல் ஏது'என
கதவிடுக் கினிலே கண்களை அனுப்பி
எண்ணி இருந்தேன்; இருந்தேன் இறக்குமுன்
நண்ணிய பெண்களின் நடையும் சிரிப்பும்
கேட்டன; உள்ளம் கிறங்கிய(து)! உடலம்
ஆட்ட முற்றதே! ஆவல் அடைத்தது!
கண்களை மூடினேன்! கலகல வென்று
பெண்கள் நகைத்த பெருநகை தேய்ந்து,
மல்லிகை நறுமணம் மூக்கை மணந்தது!
மெல்லிசை வளையல் நல்லிசை கேட்டது!
விழிகளைத் திறந்தேன்! வெதிர்புற நடுங்கி
பழியிலா ஓவியப் பாவை விளக்குக்
கதவொடு கதவாய் நின்றது கண்டேன்!
பதைபதைத் ததே,என் பழியிலா நெஞ்சம்!
அமைதி! அமைதி!! அசைவிலா அமைதி!
இமையின் துடிப்பும் எனக்குக் கேட்டது!

வெளிப்புறத் திருந்தவர் வேறுவீ டேகினர்!
களிப்போ டெழுந்தேன்! கனைத்தேன்; அமர்ந்தேன்;
ஒருநொடி தாழ்த்தி உள்ளத் துணிவொடும்
பெருமகிழ் வோடும் பின்னும் எழுந்தேன்.
அந்த மயிலை, அழகுப் பாவையைச்
சிந்து கலையெழிற் சேர்ந்த கிளியினை,
நெருங்கினேன், நின்றேன்; நெடுமூச் செறிந்து
கருங்குழல் நீவிக் 'கயல்விழி' என்றேன்.
மின்னி யதிர்ந்திட, மேனி குலைந்திட,
என்னிலை யழிய இருக்கையில், ஏந்திழை
ஆல்விழு தொன்றறங்(கு) அற்றுச் சாய்ந்ததாய்க்
கால்விழுந் தலறினள்; கைகால் பதறினள்;
நெடுந்தரை அறைந்தாள்; நீள்குழற் பிய்த்தாள்;
படுந்துயர் வுற்றாள்; பதைபதைப் பேற்றாள்;
'அத்தான், அத்தான், அத்தான்' என்றே
'பித்துரை பயின்றாள்; பெட்டழித் துயிர்த்தாள்;
நடுங்கினள்; நாணினள்; நான்தொட விலகி
ஒடுங்கினள்; அடங்கினள்; உரையிலா(து) அரற்றினள்;
'ஐயகோ' என்றாள்; 'அன்னாய்' என்றாள்;
'உய்வனோ' என்றாள்; 'உலகமே' என்றாள்;
துடித்தாள், துவண்டாள்; துயரினால் தலையில்
அடித்துக் கொண்டாள்; அறைந்துகொண் டாளே!
தரையே பிளந்து தணற்குழம்(பு) எழுந்ததாய்
உரையிலா துள்ளம் ஒடுங்கிய(து) எனக்கு!
விண்ணில் பறக்கவும் விசும்பில் தூங்கவும்
எண்ணிய எண்ணம் எல்லாம் புதைந்தன.
துடித்த கைகள் தொடவும் அஞ்சின.
அடித்த தென்றலும் அனலெனச் சுட்டதே!
அருவி நீராய் அழுதவள் கண்ணீர்,
பெருகிட யானும் பேச்சிலா துயிர்த்தேன்!
அழுதாள் அழுதாள்; அயர்விலா(து) அழுதாள்,
ஒழுகுநீர் உதிர்த்தே உரையிலா(து) அழுதாள்-

(வேறு)

உளமிருந்தது; உணர்விருந்தது; அழுதாள்!—அதில்
ஊறுகின்ற நினைவிருந்தது; அழுதாள்!
வளமிருந்தது; வனப்பிருந்தது; அழுதாள்!—அதில்
வாழ்க்கை என்ற கனவிருந்தது; அழுதாள்!

குளமிருந்தது; நீரிருந்தது; அழுதாள்!—அதிற்
குளித்து மூழ்க வழியிருந்தது அழுதாள்!
மளமளவென நீர்வழிந்தது; அழுதாள்!—என்
மடியிருந்தது தரையில் புரண்டு அழுதாள்!

இடமிருந்தது; இரவிருந்தது; அழுதாள்!—நெஞ்சில்
இளமை என்னும் தேனிருந்தது அழுதாள்!
தடமிருந்தது; காவிருந்தது; அழுதாள்!—நாங்கள்
தனிமை என்னும் நினைவிருந்தது; அழுதாள்!
உடலிருந்தது; அழகிருந்தது; அழுதாள்!—நாங்கள்
ஒன்றிப்போன நிலையிருந்தது; அழுதாள்!
குடலிருந்தது; வயிறிருந்தது; அழுதாள்!—நாங்கள்
கூடிமகிழப் பசியிருந்தது அழுதாள்!

காற்றிருந்தது; கனப்பிருந்தது; அழுதாள் — நான்
கணவனென்ற உறவிருந்தது; அழுதாள்!
ஊற்றிருந்தது; மாற்றிருந்தது; அழுதாள்—என்
உள்ளத் தவளின் உருவிருந்தது; அழுதாள்!
நேற்றிருந்த நிலை யிறந்தது; அழுதாள்!—இனி
நீங்கிடாத பிணைப்பிருந்தது; அழுதாள்!
ஏற்றிருந்த பொறுப்பிருந்தது; அழுதாள்!—நான்
இருந்தும் எண்ணி விசித்து விசித்து அழுதாள்

பாலிருந்தது; பழமிருந்தது; அழுதாள் — உள்ளப்
பதைப்பிருந்தது; வாய்திறந்து அழுதாள்!
சேலிருந்தன போலிருந்தன விழிகள்—நன்குச்
சிவந்திருந்தன; மேலும் மேலும் அழுதாள்!
ஆலிருந்தது போலிருந்தது என்றேன் — முகத்தை
அதிற்புதைக்க வழியிருந்தது; அழுதாள்!
காலிருந்தது தலையிருந்தது அதன்மேல் -- அவள்
கண்கள் வடித்த நீர்வழிந்தது; அழுதாள்!

(வேறு)

களிப்பாளென் றெதிர்பார்த்தேன்; காணேன். இன்பக்
காதலெனும் உணர்வுவெள்ளத் தவளும் வந்து,
குளிப்பாளென் றெதிர்பார்த்தேன்; குறியுங் காணேன்.
கூடலுக்கு முன்னூடல் காட்டி, முத்தம்
அளிப்பாளென் றெதிர்பார்த்தேன்; அதுவுங் காணேன்.
அருகுநுனி விளக்கொளிக்கும் உடலைக் காட்டா
தொளிப்பாளென் றெதிர்பார்த்தேன்; ஒன்றுங் காணேன்.
ஒசிந்துவிட்ட மலர்க்கொடியாய்க் கால்வீழ்ந் தாளே!

வித்திடுவாள் வாழ்வுக்கென் றிருந்தேன்; காணேன்;
விலக்குகின்ற கைவிலக்கி முகத்தைக் கையால்
பொத்திடுவாள் என்றிருந்தேன்; பொத்தக் காணேன்;
பொருதோளிற் பசுங்கிளியாய்த் தாவி வந்து
தொத்திடுவாள் என்றிருந்தேன்! தொத்தக் காணேன்!
தொலைவறியாப் பேரின்பங் காட்டிக் காட்டி
ஒத்திடுவாள் குளிர்முகத்தை என்றிருந்தேன்!
ஒடிந்துவிழும் மலர்க்கொடியாய் அடிவீழ்ந் தாளே!

(வேறு)

தலையிரா இனிக்கும் என்றனர்; காணேன்;
தணிப்பறியாப் பெருந் துன்பம்!
இலைவிரித் தே,சோ றிட்டனர்; அதனை
எடுத்துணக் கையிழந் தவன்போல்
நிலையிருந் தேனவள்;நினைப்பாள்; அழுவாள்;
நெட்டுயிர்ப் புறுவாள்; மெழுகை
உலையிலிட் டதுபோல் உருகுவள்; குலைவள்;
'உற்றதென்?' என்றறி யேனே!

3

நாழிகை நடந்தது; நள்ளிருள் நேரம்!
'வாழிய முதலிரா' என்று வாழ்த்திய
நண்பன் முழக்கம் நாணம் தந்தது.
பெண்கள் கூடிப் பேசிய பேச்சு
நெஞ்சில் ஒலித்ததே! அவர்க்கு. நிகழ்ந்த
விஞ்சு நிகழ்ச்சியை விஞ்சிய தெனக்கு,
வந்து வாய்த்த வளமிலாக் காட்சி!
அந்தப் பெண்டிர் அனைவரின் கூற்றிலும்
நான்காண் கின்ற நலமிலாக் காட்சிபோல்
தோன்றிடக் காணேன்; என்ன தொல்லையோ?
என்னை மணந்த ஏந்திழை தனக்கே!
அன்னையைப் பிரியும் ஆற்றுத் துயரோ?
முன்பின் உணரா எனக்கு மொய்குழல்
தன்புது நலத்தைத் தருவதில் அஞ்சிக்
குளிர்முகம் குளிரக் குளிர அழு தனளோ?
தளிரிதழ், காதல் தழற்கஞ் சாதோ?
ஏந்திழைக் கென்னைப் பிடித்ததோ இல்லையோ?
தேர்ந்த தன்னுளத் திருவுரு வேறோ?
இவைவிட் டவளை எதுவருத் தியதோ?
கவையற் றிருந்த கடிமலர்க் கொடிஅவள்

அவளைத் தாங்கிய அயராக் கொடிப்பு, யான்!
துவளத் துவள அழுது துடித்திட
வேறென் காரணம் உண்டென விளங்கிலேன்.
கூறெனக் கேட்கவும் நெஞ்சங் குன்றினேன்.
குழப்பம் என்றன் அறிவைக் குடைந்ததே!
இழப்பதோ இரவை; என்னென் றாகிலும்
'நாமே கேட்போம்' என்று நடந்து
நாமே உள்ளோம்; நமக்குள் பிரிவில்லை!
கயல்விழி! நானுன் கணவன் என்பதற்(கு)
இயைந்ததும், உள்ளம் ஏற்றதும் உண்மையின்
உன்னை வருத்திய துன்பம் உரைப்பாய்;
என்னை வேறென்(று) எண்ணின், மறுப்பாய்!'
என்று கூறியவ் வெழில்முகந் திருப்பினேன்.
ஒன்றொன் றென்றென உதிர்ந்தது கண்ணீர்!
பின்னும் பேசினேன்; "பேதைப் பெண், நீ!
இன்னும் அழுவதால் எனக்கு விளங்குமோ?
இங்குப் பார் எனை; என்னைப் பிடித்ததா?
தங்கு வாழ்வில் தனித்துணை யாக
இருப்பேன் என்கிறேன்; இல்லையென் பாயா?
விருப்ப மிலாமல் மணந்து விட்டனை
என்று நினைக்கின்றேன்; இல்லையென் பாயா?
நன்று விண்டிட வேண்டும்; நாணமேன்?
இன்னும் நானுனை இம்மியும் தீண்டிலன்.
என்னை வெறுப்பையேல், இதோ, இந் நொடியே
உன்னை விரும்பும் ஒருவனை அழைத்து
நின்னை அவனொடு நீள்நகர் அனுப்பி,
வாழ்வை உனக்கு வகுத்துக் கொடுத்(து) உன்
தாழ்வைப் போக்குவேன்; தடையிலா தென்னை
நம்பி யுரைப்பாய்" என்று நவின்றதும்
வெம்பும் நெஞ்சம் வெடித்தது போலக்
கீழ்வரு மாறு கிடுகிடு வென்று
பாழுரை செய்தாள்; என்னெனப் பகர்வேன்:
'அத்தான்! இப்படி உங்களை அழைக்க
ஒத்திலை உள்ளம்: எனினும் நீங்கள்
துன்புறத் தாளேன்; அதனால் துணிந்துளேன்.
இன்புறும் நினைவோ(டு) இத்திரு மணத்திற்(கு)
ஒப்பிட வில்லை என் உள்ளம்; என்னைக்
கப்பி இருக்கும் கடும்புயல் நினைவை
என்முன் விரிந்துள இவ்வை யத்துள்
நன்மனங் கொண்டொரு நல்லவர் பால்யான்

சொல்லத் துடித்தேன்; சொல்லி என்னுயிர்
கொல்லத் துணிந்தேன்; அத்தான், உங்களை
அருளும் அறிவும் உள்ளவர் என்று
பெரியோ ரெல்லாம் பேசிக் கொண்டதைக்
கேட்டு வியந்ததால் எனைக் கேட் டவர்க்குக்
'கூட்டுவீர் மணத்தை' என்றுரை கொடுத்தேன்.
உள்ளத் துணர்வெலாம் உங்களின் முன்னே
வெள்ளப் பெருக்கென விரித்திடத் துணிந்தேன்,
நெஞ்சை இறுக்கிய நிகழ்ச்சியைச் சொன்னதும்
எஞ்சும் என்னுயிர் ஏகிடும் அத்தான்!
வாய்மையும் அன்பும் உங்கள் வழியெனின்,
தூய்மையே உங்கள் துணையெனின், அத்தான்
என்னைப் பொறுப்பீர்; என்னைப் பொறுப்பீர்!
"'உன்னைப் பொறுத்தேன்' எனுமொரு சொல்லே
மண்ணில் பிறந்து மாண்பினை இழந்த,யிப்
பெண்ணின் பிறப்பைப் பிழையின் றுக்கும்!
வேண்டு கின்றேன் அத்தான் "என்று
மாண்ட கண்ணகி மீண்டாள் போலப்
பொருமினள்; நெஞ்சு புழுங்கினள்; எனைக்கண்
டுருகினள்; மேலும் உரைப்பா ளாயினள்.
"ஐயகோ! அத்தான் அழிந்திலாப் பேதை
வெய்ய கொடுமை விளைத்தேன்; உங்கள்
வாழ்வைக் கெடுத்தேன்; எனினும் சிறந்த
வாழ்வைக் கொடுப்பேன்; எனைவை யாதீர்;
எந்தப் பெண்ணை இனியளென் றீரோ
எந்தப் பெண்ணை ஏற்றுவந் தீரோ,
எவளை மனைவியென் றிறுமாந் தீரோ,
எவளைத் துணையென எண்ணிநின் றீரோ,
யாரைத் தழுவிட ஏங்கிநின் றீரோ,
யாரைப் புரையிலா ளென்றிருந் தீரோ,
அந்த ஒருத்தி, ஐயகோ அத்தான்,
வெந்த உளத்தவள்; வேறொரு தீயனல்
உண்ணப் பட்டவள்; ஐயகோ உலகமே!
உண்ணப் பட்டவள்; உரங்கெட் டவளே!"
என்றனள்; என்றனள்; என்னுயிர் தன்னைக்
கொன்றனள்; கொன்றனள்; கூற்றமாய் என்முன்
நின்றனள்; நின்றனள்; நெஞ்சைப் பிசைந்து
தின்றனள்; தின்றனள்; தீயினுங் கொடியளே!

4

மயக்கம் தெளிந்தது; மனஞ்செய லற்றதே.
இயக்கம் இன்றி எழாமற் புரண்டேன்.
பச்சைக் கொடியாய்ப் பசுங்கிளிக் குஞ்சாய்
அச்சுப் பாவையாய் அவள் கிடந் தாளே!
'நெஞ்சை யிறுக்கிய நிகழ்ச்சியைச் சொன்னதும்
எஞ்சும் என்னுயிர் ஏகிடும் அத்தான்'
என்று, அவள் கூறிய(து) எண்ணினேன்; எழுந்தேன்;
நின்றேன்; உன்னினேன்; நெருங்கினேன்; வாழ்வைக்
கருதினேன்; தொட்டிடக் கைநீட் டும்முன்
உறுதி பூண்டேன்; ஒருநொடி தயங்கி
வருவது தீங்கே என்னினும் வருகென
இருகை நீட்டி ஏந்திழை யாளைத்
தூக்கிக் கிடத்தினேன், தூமலர்ப் படுக்கையில்!
தேக்கிய அருளால் நெஞ்சம் திகழ்ந்ததே!
நீரைத் தெளித்தேன்; நீள்விழி மலர்ந்தாள்.
தாரையாய்க் கண்ணீர் வழிந்திடத் தளிர்கொடி
எழுந்தாள், எழுந்தே என்னடி வந்து
விழுந்தாள்; விழுந்து வெம்பினாள்: புழுங்கினாள்
கண்களில் எனக்கும் கசிந்தது கண்ணீர்!
பெண்களின் கொடுமையைப் பேசநாத் துடித்ததே!
அவளே தொடர்ந்தாள்; "அத்தான் ஒன்றும்
கவலைப் படாதீர்; கண்ணிமைப் பொழுதே
எனினும் உங்களோ டிருந்த வாழ்க்கையே
இனியது! முழுச்சிறப் பேற்றதே! இனியெனைத்
தீண்டுதல் வேண்டாம்! தீதிலா உளத்தீர்
வேண்டுவேன் ஒன்று! விரிந்தயிவ் வுலகில்,
'மக்களே போல்வர் கயவர்' எனுமொழி
ஒக்கப் பொருளெலாம் உற்றது கண்டேன்!
விரும்பிக் குலைந்தவள் அல்லள். விளக்கிடாப்
பெரும்பே ரிடர்வரப் பிழைசெய் தேனே!
என்னைக் குலைத்தவன் எவனென அறியேன்!
அன்னைக் குரைத்திலேன்; ஆருமிஃதறியார்!
ஆன்றவிந் தடங்கிய அருளோய் கேட்க;
மூன்றாண் டிற்கு முன்னே நடந்தது!
ஒருபுன் மாலை; ஊர்முனை யிருந்த
அருமை நண்பி ஒருத்தியோ டளவி
இருளில் மீண்டேன்; எவரும் காணு
ஒருமுனை திரும்பி ஓடு நடையுடன்

வந்துகொண் டிருந்தேன்; வந்தவள் என்பின்
வந்துகொண் டிருந்தான், வன்மனத் தொருவன்!
அவன்வர(வு) அறியேன்; ஆள்உரு மறைக்கும்
குவியருள் முடக்கில் கொடுங்கை இரண்டு
வாயினைப் பொத்தின; வால்விழி கட்டின;
ஆய கொடுநிலை அயர்ந்தேன்; விழிக்கையில்
அத்தான், என்னென் றறைகுவன், அறிவிலி
கொத்தும் பசிக்கென் உயிரைக் குடித்ததை,
ஒருநொடிப் பொழுதில் உளத்தைச் சிதைத்ததை,
பெருநிறை யழித்துப் பெருமை தீய்த்ததை
வாழ்வெனும் நற்பெரும் வழியினை அடைத்ததை
பாழ்ங்கிணற் றென்னைப் பாழ்மகன் வீழ்த்ததை
என்னென் றியம்புவேன்; இயம்பி இருசெவி
என்னென் றேற்பேன்; ஏற்று நல்லுயிர்,
என்னெனக் காப்பேன்; என்னெனக் காப்பேன்;
என்னென வாழ்வேன்; அத்தான்!" என்றவள்
அழுது துடித்தாள்; ஆறாத் துயரொடு
தொழுதுகால் பற்றிக் கொடியவள் துவண்டாள்;
அசையா ஓவிய மாகி இருந்தேன்;
பசையிலாள் ஆழ்துயர்ப் பட்டன ளமர்ந்தே!
மயலுற நெஞ்ச மாத்துயர் உன்னி,
'கயல்விழி' என்றேன்; கலங்கிய விழியோ
டென்னை நோக்கினள்; 'இங்குவா' என்று
தன்னை அமர்த்தித் தரையினி லமர்ந்தேன்.
உன்னைச் சிதைத்த உலுத்தனை யறிவையோ?
என்றேன்; தலையை இல்லையென் றசைத்துப்
பொலபொல வென்று கண்ணீர் பொழிந்தாள்.
நிலையினின் றெழுந்து நிகழ்த்தினேன்; "கயல்விழி
உன்னைச் சிதைத்தவன்—உயிரினும் மேலாம்
நின்னருங் கற்பை நிலைகுலைத் தழித்தவன்—,
புயலென வந்துன் புதுநலங் குடித்தவன்—
கயல்விழி, இதோ, நான் காண் காண்' என்று
கண்களை மூடினேன்; 'ஓ'வெனக் கதறி
பெண்ணுருக் கொண்டு' பெருவலி கொண்டே
"ஐயகோ! அத்தான்! அத்தான்! இனிநான்
உய்வனோ? உய்வனோ? என்றுரை பயிற்றி
ஓயா தென்முகத்(து) ஒருநூறு அறைகள்
மாயா தறைந்தாள்; மறுமொழி யில்லாக்

கற்பா வைபோல் கடிதுநின் றேற்றேன்
பொற்பா வையின் பூவுடல் வீழ்த்தி
என்கால் பற்றி 'என்னரும் அத்தான்'
என்பிழை பொறுத்தெனை ஏற்றருள் கெ'ன்றே
அழுது புழுங்கினுள்; அவள்விழி துடைத்துப்
புழுவெனத் துடித்த பூங்கை பற்றிப்
படுக்கை அமர்த்திப், "பழியிலாப் பெண்ணே,
கடுக்கும் நெஞ்சொடும், கழலும் உயிரொடும்,
இதுவரை இருந்த இழிநிலை மறந்து
புதுமணப் பெண்ணாய்ப் பொலிக, என் அன்பே!
முன்புயான் செய்பிழை முற்றும் பொறுத்தே
என்புது வாழ்க்கையின் விளக்கை ஏற்றுக!
இனிநீ தூயவள்; எனக்கே உரியவள்!
பனிவில கிற்று; எனப் பாவையின் முகத்தை
நீவினேன்; அவளோ நெட்டுயிர்ப் புற்றே
தாவியென் முகத்தைத் தன்னிரு கைகளால்
தடவித் தடவித் தன்முகம் ஒற்றி
மடமட வெனக்கண் மழை பொழிந் தனளே!

ஃ ஃ ஃ

திரைபோட் டிருந்த தீதறு ஓவியம்
திரையினை விலக்கிடத் திகழ்ந்தது போல
உள்ளங் காய்ச்சிய நிகழ்ச்சி ஒழிந்ததும்
வெள்ளம் புரண்டதாய் உணர்வு வெளிப்பட
விழிகளை நல்லொளி யிழுங்கிய(து), உவகை
குழியிட் டவள்முகங் கூடிய(து); உள்ளம்
விளைத்த புன்னகை இதழில் வெடித்தது!
களைத்த மெல்லுடல் களையொடு திகழ்ந்தது!
இடை மின் னியதோ ரிளமான் போல
நடை துள் ளியது; நாணம் படர்ந்ததே!

5

இள ஞா யிற்றெளி எழுமுன் எழுந்த
இளைஞர் பேச்சொலி எம்செவி படவே
பிரிய நேர்ந்தது; பிணைப்பிலா நீங்கினேம்;
அரிய முதலிரா, ஆயினும் உளத்தால்
ஒன்றினேம்; எனினும், உடலால் ஒன்றிலோம்.
அன்றிரா போகி அடுத்த இரவினுக்
கேங்கி இருந்தாள்; ஏதோ ஒருதுயர்
தாங்கி இருந்ததென் தணிவிலா நெஞ்சம்!

ஃ ஃ ஃ

காலை எழுந்ததும் கண்ணாடி நாடி
மாலை யிருந்த முகத்தையும், மங்கை

சிதைத்த பின்னைச் சிவந்த முகத்தையும்
பதைத்த நெஞ்சொடு பார்த்துநீர் வடித்தேன்.

(வேறு)

நான்பெற்ற வாழ்வின் நலிவை நினைந்துநினைந்
தேன்பெற்றாய் அன்னையே என்றே துடித்தழுதேன்
என்னை யறியாமல் என்னுள்ளம் நொந்ததுவால்!
பின்னை ஒருவரொடும் பேசாமல் ஆங்கிருந்தேன்!
புன்னைச் சிறுசிட்டாய்ப் பூரிப்பில் மூழ்குவதும்,
என்னை ஒருமுறைவந் தேமெடுத்துப் பார்ப்பதுவும்,
முத்துநகை சிந்துவதும் மொய்குழலைப் பின்னுவதும்,
பித்தந் தலைக்கேறிப் பின்னுமவள் ஏதேதோ
சொல்லுவதும், நெற்றிச் சுருள்மயிரின் கீழ்விழியாற்
கொல்லுவது மாகக் கயல்விழியாள் மேவுகையில்
தந்தியொன்று பாய்ந்துவரத் தாவியவள் வாங்கி வந்தாள்.
"வந்திருப்பாய் வண்டி நிலையத்தில்; நான் வருவேன்"
என்று விடுத்திருந்தான் என்நண்பன் முத்தப்பன்.
நன்றென் றெழுந்தேனே நான்!

6

வண்டிக்குப் போயிருந்தேன்; வந்திருந்தான் முத்தப்பன்;
கண்டளவிப் பேசிக் கடுவழியும் பாராமல்
ஊர்க்கு நடந்துவந்தோம்; ஓய்விற் கருகிருந்த
சீர்ப்பெற்ற சோலையொன்றில் சென்றமர்ந்து சொல்விளைத்தோம்
நானவனைப் பார்த்தளவி, நாட்கள் பலவிருக்கும்'
ஆனதனால் என்றன் அணிமணத்தைப் பற்றிநான்
அன்னவனுக் கன்றே அறிவிக்க வில்லையவன்,
இன்னவூர் தன்னில் எனக்குமணம் என்றறிந்தே
ஓடோடி வந்திருந்த செய்தி உரைத்திட்டான்;
நாடோடி போல நெடுநாள் திரிந்திருந்து,
மூன்றுநாள் முன்னைவந்த செய்தி முடித்துவிட்டே
'ஆன்ற திருமணத்தைப் பற்றி அறை' யென்றான்.
கண்ணீர் வழிந்ததனைக் கண்டிருக்க வேண்டுமவன்;
'பெண்ணல்ல நீர்வடிப்பாள்; பேதைபோல் ஏனழுதாய்?
கூறென்'றான்; உள்ளம் குமுறி எழுந்ததுவால்!
மாறென்று காண மனமுந் துடித்ததுவால்!
தேங்குபுனல் போலத் திகழ்ந்திருந்த துன்பத்தைத்
தூங்குணர்வின் நெஞ்சைத் துளைத்திருந்த பேரிடும்பைக்,
கொட்டிவைத்த தீக்கனலைக், கூட்டிவைத்த பேரழிவைத்
தட்டி யெழுப்பிவிட்டான்; தன்னுணர்வால் நானெழுந்து,
கண்களிலே நீர்சுரக்கக் காது கனல் பற்ற
எண்ணம் அலைபாய நெஞ்சின் இளைப்பேறக்
கூறத் தொடங்கியே கூறுங்கால் அன்னவனும்,
ஏறிவரும் வெள்ளத் தழுத்தம் எழுந்ததுபோல்—

கேட்டு வந்தான்: நானும் கிளிமொழியால் வந்ததுவும்,
வாட்டுந் துயரென்னும் வாடைக் கனலிலுளம்,
வெந்து புழுங்கியதும், வேரற்று வீழ்ந்ததுவும்,
அந்தக் கொடுங்கயமைக் காட்பட்டான் நானென்று
கூறியதும், அன்னாள் கொடுந்துயரத் தால்மாறி
மாறி யழைந்ததுவும், மாயாமல் வாங்கியதும்,
பின்னையவள் ஓய்ந்து பிழைபொறுக்க வேண்டியதும்,
தன்னைப் பழியில்லாள் என்று தருக்கியதும்,
கூறி வருகையிலே, நண்பன் குமுறியழ
ஊறிவரும் நெஞ்சத்தின் உள்ளுணர்வாற் பொங்குகின்றான்
என்றெண்ணித் தேற்ற எழுந்தனனால்! அன்னவனும்
"நின்றிதைச் சொல்லிடுவாய் நண்பா! என நிறுத்தி
என்ன உளத்தானும் ஏற்காத பெண்ணவளை—
உன்னவளை— நீமுன் உருக்குலைத்த துண்மையோ?
கூறுகநீ கூறுகநீ என்றான் குமுறியுளம்
தேறுகிலாப் பேதையெனத் தேம்பலுற்றேன்; ஐயகோ
எவ்வாறு சொல்வேன்; இதைப்பொறுப்ப தெப்படியோ?
அவ்வாறு செய்ததில்லை; அன்பானான் என்னென்பேன்?
கீழ்மைத் தனத்தாலே கெட்டழிந்து, காலமெல்லாம்
வாழ்விலுளம் செத்துப் புழுங்கி வதைகின்ற
தீயவரைப் போலில்லை, நண்பா திகைக்காதே.
ஏயதீங் கேற்றவளுக் கென்வாழ்வைத் தான்கொடுத்தேன்.
கற்பிழந்தாள் நெஞ்சிற் கனன்ற நெருப்பையெல்லாம்
நற்பண்பால் என்றன் நடுநெஞ்சில் பற்றவிட்டேன்!
தன்னைச் சிதைத்தவனும், தன்வாழ்வைத் தூர்த்தவனும்,
தன்னை அழற்குழியில் தள்ளிவிட்டுப் போனவனும்,
நானேயென் றேன்; அவளை நம்பவைத்தேன்; நான்பழியை
ஏனேற்றேன் என்றால் இறக்காமல் காக்கத்தான்;
காக்கத்தான்; கற்பைக் கழற்றியவட் கும்வாழ்க்கை
பூக்கத்தான்; அன்பைப் புதுக்கத்தான்; பேரின்பம்
சேர்க்கத்தான்; உள்ளம் சிறுத்தார்க்கும் நல்வாழ்வை
வார்க்கத்தான்; மன்னித்தால் வாழ்வு பெறுவ ளாவென்று
பார்க்கத்தான்; பொய்சொல்லிப் பாவையினை வாழவைத்தேன்
என்றழுது கூற எழுந்தவனும் என்காலில்
நின்ற நெடுமரம் போல் நீட்டி விழுந்தழுதே
'என்னைநீ மன்னிப்பாய் மன்னிப்பாய்; என் நண்பா,
பொன்னை—மணிச்சுடரை—பொற்புள்ள மங்கையினை,
வாய்த்த குலக் கொடியை—வந்தணைத்த நல்லமிழ்தை—,
மாய்த்துச் சிதைத்தவன்யான்; மாளா திருந்தவன் யான்,
என்றானே; நெஞ்சம் எரிபற்றி வெந்ததுவால்!—
கொன்றாலும் அன்ன கொடியவனைத் தீதில்லை!

என்று நினைந்தே இருகையா லும் அறைந்தேன்;
ஒன்றென்றாய் எண்ணு தொருநூறு தந்திருப்பேன்.
ஊழிப் புயலில் உலகஞ் சுழல்வதுபோல்
ஆழி பெருகி அலைபுரண்டு சீறுவதாய்,
என்கண்கள் மங்கினவே! என்றுமிலா வல்லிருளில்
என்னைக்கொண் டுழ்த்தியன; மீண்டும் எழுநினைவால்
கண்விழித்துப் பார்க்கக் கடுங்குளிரில் வெம்பனியில்
விண்ணில் நடுங்கி வெலவெலத்துப் போனவன்போல்
வீழ்ந்து கிடந்தான்; விளைந்த தறிந்தெழுந்தான்.
ஆழ்ந்து நினைந்தேன்; அறுந்த நினைவொருங்கே
கூடுமோ? இன்னவரைக் கூறி வருத்துவதால்
நீடுமோ வாழ்க்கை எனவே நினைத்(து) அவன்பால்,
"முத்தப்பா, வாழ்க்கை முழுமை உறுவதெல்லாம்
ஒத்தநெறிக் கொத்தஉளம்; ஒத்தசெயல் என்பவற்றால்!
இம்மி இழிந்தாலும் மாந்தனென்று கூறுவதும்
அம்மிக் குழவியென் றுவதுவும் ஒன்றே!
பொறுத்தேன் இறப்பினை என்றும்; அதனை
மறந்தேன்; இனியுன்னை மன்னித்தேன்; வாபோவோம்!
என்மனைவி காத்திருப்பாள்; என்றனுக்கும் உன்றனுக்கும்
நன்விருந்து செய்திருப்பாள், என்று நவின்ற ழைத்தேன்.
கண்ணிரண்டில் நீர்பெருகக், கைகூப்பி நாத்தழுக்கப்
'புண்ணில்வே லிட்டதுபோல் பின்னும்பே சாதே!
இறைவன் எனக்கில்லை; இல்லையவன் எங்கும்;
இறைவன்நீ; நீயே எனக்குவழி காட்டி!
அடிவீழ்ந்து கெஞ்சுகின்றேன்: அன்பா! அருளோய்!
குடியழித்த இந்தக் கொடியவனை விட்டுவிடு!
வாடிக் குலைந்திருக்கும் வல்லாள் உளமகிழ
ஓடித் தழுவிடுநீ! என்னை உதறிவிடு!
தித்தித்த நெஞ்சுணர்வால் தீயதையும் மன்னிப்போர்
அத்திப்பூப் போல அறியார்க் கறியாராய்
வல்லோர் ஒருசிலரும் வாழ்கின்றார் இவ்வுலகில்!
அல்லோர் அவரை அறிவதில்லை; அன்பரசே!
வாழ்கநீ!" என்றுரைத்து வந்த வழிநடந்தான்.
வீழ்கின்ற கண்ணீர் விழிமல்கப் பார்த்திருந்து
வீடுவந்து சேர்ந்தேன்; விழியால் வழிகாண்பாள்,
ஓடிவந்து பூத்த ஒளிர் முகத்தில் அன்பு
குடிருக்கக் கண்டேன்; குலைகுலையாய் இன்பம்
மடியிருக்கக் கண்டேன் மகிழ்ந்து. ○ ○

வள்ளுவர் பதிப்பக உரிமையாளர், கூ. இரா. செகந்நாதன் அவர்களால் நெல்லிக்குப்பம் (தெ. ஆ. மாவட்டம்) குரு அச்சகத்தில் அச்சிடப்பட்டுப், பெருஞ்சித்திரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டது.

தமிழ்ப்பணி

தமிழ்மொழியைப் பற்றிய புதிய ஆராய்ச்சிகள், தமிழில் இலக்கியத்திற்கு வேண்டிய அறிவியற் கலைகள், உடற்கலை முதல் சாகாக்கலைவரை நூற்றுக்குமேற்பட்ட நுண்கலைகள், புத்திலக்கியங்கள், புத்திலக்கணங்கள், புதியதொடர்கதை தனிக்கதைகள், புதியபாடல்கள், சமயம், மதம், யோகம், ஞானம், பத்தி, சித்தி, முத்தியைப்பற்றி இதுவரை விளங்காத பேருண்மைகள், பல்வகைத் தொழில் வளர்ச்சிமுறைகள், சமூகவாழ்க்கை – அரசியல்நெறிகள், திருக்குறள், திருமூலர் திருமந்திரம், திருவாசகம், போன்ற சிறந்த நூல்களுக்கு விஞ்ஞானமுறைக்கேற்ற விளக்க உரைகள், சிறுவர் சிறுமியர் பகுதிகள்முதலியன நிறைந்து, தமிழ்ப் பேரறிஞர்களுடைய கட்டுரைகளுடன் வெளிவரும் புதுமை பொலியும் திங்கள் இதழ், 50 புதுக்காசுகள்.

எங்கும் விற்பனையாளர் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

ஆசிரியர், தமிழ்ப்பணி, குரு அச்சகம்,

நெல்லிக்குப்பம், கடலூர் வட்டம், தமிழ்நாடு.